24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 32
விலை: 30

சுடர் 34 கதிர் 23 மார்கழி 03ஆம் நாள் புதன்கிழமை 19 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த பதவியைத் தொடர்வதில் சிக்கல்!

- எம்.பியாக இல்லாதவர் எப்படி எதிர்க்கட்சித் தலைவராகலாம் எனக் கேள்வி
- மகிந்தவின் உறுப்புரிமையை ஆராய தெரிவுக்குழு
- வெள்ளியன்று சபாநாயகரின் முடிவு தெரியும்

கொழும்பு, டிசெ. 19

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தமது தரப்பு எதிர்க்கட்சியாகச் செயற்படும் என்று நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தது. எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை நியமிக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தது. அதை ஏற்றுக் கொண்ட சபாநாயகர் கரு ஜயசூரிய மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்தார். சபாநாயகரின் அறிவிப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் உடனடியாகவே எதிர்ப்பு வெளியிட்டனர். அதனால் மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் தொடர்வதற்கும் சிக்கல் நிலமை ஏற்பட்டுள்ளது.

'மகிந்தவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விசாரணை நடத்த » 29

## மொட்டுக் கட்சியில் இணைக்கவில்லை!

### எம்.பிக்கள் பதவியை காக்க பல்டி அடிக்கின்றார் பசில்

கொழும்பு, டிசெ. 19

மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்னமும் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அமைப்பாளர் பசில் ராஜ » 29

## மைத்திரியின் உடும்புப் பிடியால் அமைச்சரவை நியமனம் தாமதம்

கொழும்பு, டிசெ.19

சட்டம், ஒழுங்கு அமைச்சையும், ஊடகத் துறை அமைச்சையும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கொடுக்கப் போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன » 29

## புதிய அமைச்சரவையில் சிலர் இன்று பதவியேற்பு

கொழும்பு, டிசெ.19

புதிய அமைச்சரவையில் ஒரு தொகுதி அமைச்சர்கள் இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முன்பாகப் பதவியேற்கவுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்படும் 30 அமைச்சர்களின் பட்டியல் தயாரிக்கப் » 29

## பதவிகளைக் கோராதிருக்க மனோ, ரிசாத், மலிக் முடிவு?

கொழும்பு, டிசெ.19

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்வதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரிசாத் பதியுதீன், மலிக் சமரவிக்கிரம ஆகியோர் தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் தலைமை அமைச்சர், அரச தலைவர் » 29

## எம்.பி. பதவி இல்லாதோரை மன்றிலிருந்து அகற்றுங்கள்

### சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 19

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பலர் சபையில் இருப்பதால் அவர்களை இனங்கண்டு வெளியேற்ற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் » 29

## வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு ஜே.வி.பி. எதிர்ப்பு

### பிளவுபடாத நாட்டை உறுதிசெய்யும் அரசமைப்புக்கே ஆதரவு வழங்குமாம்



கொழும்பு, டிசெம்பர் 19

வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் சம்மதிக்காது. பிளவுபடா, பிரிக்க முடியாத நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களது உரிமைகளைச் சமாந்தரமாக உறுதிப்படுத்தும் அரசமைப்புக்கு ஆதரவளிப்போம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது. » 29

## போர்க் குற்றம் எதனிலும் ஈடுபடவில்லை ராணுவம்

### மைத்திரியின் கருத்துத் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் கருத்து

கொழும்பு, டிசெ.19

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமானால், போர்க் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்டுச் சிறைகளில் உள்ள இராணுவத்தினரை விடுவிக்க வேண்டும் என்றும், இராணுவத்தின் மீதான குற்றச்சாட்டுக்கள் நீக்கப்பட வேண்டும் என்றும் அரச தலைவர் கூறியுள்ளார். » 27

## பைத்தியத்துக்கு அதிகாரம் கிடைத்தால் என்னவாகும்?

### கடந்த 50 நாள்களில் நாட்டு மக்கள் உணர்ந்திருப்பர் என்கிறது ஜே.வி.பி

கொழும்பு, டிசெ.19

நிறைவேற்று அதிகாரக் கதிரையில் ஒரு பைத்தியக்காரன் அமர்ந்தால் என்னவாகும் என்பதைக் கடந்த 50 நாள்களில் நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுவிட்டனர் என்று » 27

## அரசு பக்கம் தாவிய ஐ.ம.சு.கூ. எம்.பிக்கள்

கொழும்பு, டிசெ.19

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 3 நாடாளு » 27

## கட்சி தாவியோருக்கு பதவிகள் வழங்கேன்

### மைத்திரி திட்டவட்டம்

கொழும்பு, டிசெ.19

ஐக்கிய தேசிய முன்னணியின் அரசுக்குத் தாவிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் » 27

## சம்பந்தனுக்குச் சிரிப்பு; சுமந்திரனுக்கு கைலாகு

கொழும்பு, டிசெ.19

நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச பல தடவைகள் புன்முறு » 27



## வடக்கு கடற்பரப்பில் அசாதாரண மாற்றம்

### சுண்டிக்குளத்தில் தென்னைகள் வீழ்ந்தன முல்லைத்தீவில் குடிமனைக்குள் கடல் நீர்

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடல் நீர் உள்ளீர்ப்பு, பெருக்கெடுப்பு மற்றும் கடல் அலையின் வேகம் என்பன அதிகரித்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வழமைக்கு மாறாக கடல் அலையின் வேகம் அதிகரித்துள்ளதால் வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் கடற்கரையில் 3 தென்னை மரங்கள் பாறி விழுந்துள்ளன. வழமையாக கடல் அலை கரைக்கு வரும் தூரத்தை விடவும் அதிகளவு தூரம் உள்வருவதாலேயே மரங்கள் பாறி » 27

# ராஜபக்சாக்களை மீண்டும் எழுச்சிபெற அனுமதியோம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 19
ராஜபக்சாக்கள் மீண்டும் எழுச்சிபெற முடியாத அளவுக்கு அவர்களை இந்த 50 நாள்களில் மண்டியிட வைத்துள்ளோம். இத்துடன் நின்றுவிடப் போவதில்லை. 2019ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ள அரச தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலை வெற்றிகொள்ளும்வரை இந்தப் போராட்டம் ஓயப்போவதில்லை என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

'ஜனநாயகத்தை வெற்றி கொண்டமையைக் கொண்டாடுவோம்' என்ற தொனிப் பொருளில் ஐக்கிய தேசிய முன்னணியால் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள். தீவிரவாதத்தில் இருந்து நாடு விடுபட்டது போன்று ஏகாதிபத்தியத்தில் இருந்துநாடுவிடுபட்டுள்ளது. அநீதி தோற்கடிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது. ஜனநாயகம் வெற்றிபெற்றுள்ளது. அன்று பன்னாட்டுச் சூழ்ச்சி மூலம் தாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்று மகிந்த கூறியிருந்தார். காலி முகத்திடலில் இன்று வந்துள்ள இலட்சக்கணக்கான மக்கள்தான் உங்களை தோற்கடித்தனர் என்பதைஅவருக்குநினைவுபடுத்த விரும்புகின்றோம்.

கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி மக்களின் மனச்சாட்சி மீதுதான் அவர்கள் கைவைத்தனர். அதனால்தான் கட்சி பேதங்கள் கடந்து அனைத்து மக்களும் எழுச்சிகண்டனர். 50 நாள்கள் போராட்டத்தில் கடந்த காலத்தில் மகிந்த முன்னெடுத்துச் சென்ற அனைத்து பொய்ப் பரப்புரையும் தோல்விகண்டுள்ளன. பொருளாதாரத்தையும் ரூபாவையையும் உயர்த்துவோம் என்றனர். ஆனால், 50 நாள்களில் என்ன நடந்தது?. ராஜபக்சாக்களால் முடியாது என்பது உறுதியாகவிட்டது. ராஜபக்சாக்களை மீண்டும் இந்த நாட்டில் எழுச்சியடைய விடமாட்டோம்" - என்றார். (ம)

# முல்லைத்தீவுக் கடற்கரையில் கரைஒதுங்கின புலிக்கொடிகள்

முல்லைத்தீவு, டிசெ. 19
முல்லைத்தீவு- செல்வபுரம் கடற்கரைப் பகுதியில் இரண்டு புலிக்கொடிகள் நேற்றுக் கரையொதுங்கின என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

'முல்லைத்தீவு - செல்வபுரம் கடற்கரைப் பகுதியில் கடலுக்குள் புதைந்திருந்த கழிவுப் பொருள்கள் அண்மைக் காலமாக தொடர்ச்சியாகக் கரையொதுங்கி வருகின்றன. இந்த நிலையில் இரண்டு புலிக்கொடிகள் நேற்றுக் கரையொதுங்கியுள்ளன. ஒன்று சுமார் இரண்டு அடிகள் நீளம் உடையது. மற்றையது சுமார் நான்கு அடிகள் நீளம் உடையது. முதலாவது கொடி காலை 7.30 மணியளவில் புலனாய்வாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இரண்டாவது கொடி காலை 9 மணியளவில் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது' என்று அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர். (ம-ரி3)



# படையினர் வசமுள்ள நிலப்பகுதிகள் சிலவற்றை 25, 26ஆம் திகதிகளில் விடுவிக்க நடவடிக்கை!

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடக்கு மாகாணத்தில் படையினரின் வசமுள்ள ஒரு தொகுதி நிலத்தை எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் விடுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள நிலங்கள் அனைத்தும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படும் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார். மாவட்ட ரீதியில் ஆய்வை மேற்கொண்டு அதற்கான அறிக்கையை ஆளுநர்கள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டிருந்தார்.

இதன் பிரகாரம் வடக்கின் ஆளுநர் 5 மாவட்டங்களுக்கும் நேரில் சென்று முதல் கட்ட அறிக்கையை சமர்ப்பித்திருந்தார்.

இதன் பிரகாரம் மாவட்டந்தோறும் படையினர் உடனடியாக விடுவிக்கும் நிலங்கள் என்று ஒரு பட்டியலும் பதிலீடுகளுடன் விடுவிப்பதற்கு இணங்கும் பட்டியல் என இன்னொரு பட்டியலும் அரச தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் உடனடியாக விடுவிப்பதற்காக இணக்கம் கானப்பட்ட நிலங்கள் எதிர்வரும் 25ஆம் 26ஆம் திகதிகளில் விடுவிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்ப்பாணத்திலும், 26ஆம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும், எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ஒரு திகதியிலும் மன்னார் மாவட்டத்திலும் நில விடுவிப்புச் செய்யப்படவுள்ளது. (ம-105)

# அரச தலைவர் பதவியை உதற வேண்டும் மைத்திரி

## சுதந்திரக் கட்சி உப தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19
அரச தலைவர் சிறிசேன உடனடியாகப் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமைப்பை மீறியுள்ளார் என்று உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. அரசமைப்பை மீறிய ஒருவர் அந்தப் பதவியில் இருக்க முடியாது.

அவருக்கு எதிராக எந்த நேரத்திலும் குற்றவியல் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும். அரசமைப்பை மீறிய ஒருவர் அந்தப் பதவியைத் தொடர்ந்து வைத்திருப்பது பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்பதை அவர் அறிவார்.

நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத அரச தலைவர் ஒருவர் மதிப்புக்குரியவராக இருக்க முடியாது" - என்றார். (ற)

# பின்பக்கக் கதவால் வந்த மகிந்த முன்கதவால் வெளியேற்றப்பட்டார்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 19
"சூழ்ச்சி மூலம் பின்கதவால் தலைமை அமைச்சரான மகிந்த ராஜபக்ச, நீதித்துறையால் முன் 'கதவால் வெளியேற்றப்பட்டார். நாம் அரச மிலேச்சத்தனத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளோம்'' என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச.

ஐக்கிய தேசிய முன்னணியால் 'ஜனநாயகத்தைக் கொண்டாடுவோம்' என்ற தொனிப்பொருளில் மிகப் பெரும் மக்கள் பேரணியொன்றுகொழும்பில்நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"சட்டரீதியான தலைமை அமைச்சரை கூட்டுச் சதியின் மூலம் நீக்கிவிட்டு மூன்றரை வருடங்களுக்கு முன்னர் மக்கள் நிராகரித்த, மக்களால் விரட்டியடிக்கப்பட்ட தரப்பு சூழ்ச்சியின் மூலம் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்தது. அதிகாரத்தைப் பின்கதவால் கைப்பற்றப் பார்த்தனர். அவ்வாறு பின் கதவால் வரமுனைந்தவர்கள் முன்கதவால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சதித்திட்டத்தால் பெரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ளோம். எமது நாட்டுக்கிருந்த நற்பெயர் இல்லாது போனது. மக்களுக்கு கிடைக்கவிருந்த மானியங்கள் இல்லாது போயின. சாதாரண மக்களுக்கான அபிவிருத்தி இல்லாது போனது. பன்னாட்டுச் சமூகம் எம்மீது வைத்திருந்த நம்பிக்கையும் முற்றாக இல்லாது போனது. ஜனநாயகம், சுதந்திரம், பேச்சு சுதந்திரம் என்பன் விலகிச் சென்றன. குண்டர் தாக்குதலுக்கு மத்தியிலும், அரச மிலேச்சத்தனத்தில் இருந்து ஜனநாயகத்தையும், நாடாளுமன்றத்தையும் நாம் பாதுகாத்துள்ளோம்" - என்றார். (ம)

# கூட்டமைப்பின் செயற்பாட்டால் போர்க் குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றப் பொறிமுறை தேவையற்றதாகியுள்ளது

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கரைச்சி பிரதேச உறுப்பினர் தெரிவிப்பு



கிளிநொச்சி, டிசெ. 19
நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் காரணமாக இலங்கையில் போர்க்குற்ற விசாரணைக்கு பன்னாட்டு நீதிமன்றப் பொறிமுறைதேவையற்றதாக மாறியுள்ளது என்று தெரிவித்தார் கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் தங்கவேல் ஜெகதீஸ்வரன்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள குறித்த கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குவதென்பது மிகப்பெரியதொரு நாடகம். அண்மையில் இடம்பெற்ற அரசியல் விடயங்களை நாம் நாடகமாகவே பார்க்கின்றோம். போர்க் குற்றம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம் என்பனவற்றால் பன்னாட்டு ரீதியில் இலங்கைக்கு என்றுமில்லாதவாறு பெரிய அழுத்தம் காணப்பட்டது. இவற்றிலிருந்து மீள்வதற்காகவே இந்த அரசியல் நாடகம் முன்னெடுக்கப்பட்டது.

நீதித்துறை தொடர்பில் இலங்கையில் பக்கச்சார்பற்ற தன்மை காணப்படுகின்றது என்பதை உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கிலேயே இந்த நாடகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அளவுக்கு நீதித் துறை சீராகவும், நேர்மையாகவும் செயற்படுகின்றது என்ற பிம்பம் பன்னாட்டுச் சமூகத்துக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒத்துச் செயற்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் நலன் சார்ந்து செயற்படவில்லை - - என்றார். (ம-35)

# குலைந்திருந்த ஜனநாயகம் சீராக போராட்டமும் நீதியுமே காரணம்

*மஹ்ரூப் எம்.பி. தெரிவிக்கிறார்*



மூதூர், டிசெ. 19
நாட்டின் அரசியல் நிலை சீர்குலைந்த போது எமது ஜனநாயக ரீதியான போராட்டமே ஜனநாயக வெற்றிக்குக் காரணமாக அமைந்தது. நீதித்துறை நீதியை நிலை நாட்டியுள்ளது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக நாட்டின் அரசியல் குழப்பங்கள் தொடர்பில் கிண்ணியாவில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசதலைவரை ஐந்துக்கும் மேற்பட்ட சிறுபான்மைக் கட்சிகள் 60 இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை அளித்து அரசதலைவராக்கினோம்.

ஜனநாய அரசியல் சீர்குலைவால் கடந்த இரு மாதங்களாகப் பின்னடைவுகள் ஏற்பட்டன. அபிவிருத்திகள் முடக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்புரிமைக்கான இடைக்காலத் தடை எனப்பல அரசியல் குழப்பங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இதற்கான தீர்வைப் பெறுவதற்குப் பொறுமையோடு போராடிய போது பொறுமைக்குக் கிடைத்த வெற்றியாக நீதிமன்றம் நீதியை நிலை நாட்டியுள்ளது. நீதி நாட்டில் உயிர் வாழ்கிறது. நாடாளுமன்றத்தின் உள்ளே சபாநாயகரும் வெளியே நீதிமன்றமும் சட்டத்தைப் பாதுகாத்து அரசியல் சாசனத்தின் படி உறுதியான தீர்ப்பு வெளிப்படையாக வெளிக்காட்டப்பட்டது. 2019ஆம் ஆண்டின் பாதீடு நாடாளுமன்றின் ஊடாகப் பல்வேறு பொருளாதார முன்னேற்றங்களைக் கொண்டுவர வேண்டும். நீதித்துறை, பொலிஸ்ஆணைக்குழு செயற்பட்டு ஊழல் மோசடிகளை ஒழிக்க வேண்டும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும், தொழிற்றுறை, துரித அபிவிருத்தி என்பன குறுகிய காலத்தில் இடம்பெறுவதற்கு வழி வகைகளைத் தலைமை அமைச்சரவை ஊடாக மேற்கொள்ளப்படும். அதற்குச் சிறுபான்மைக் கட்சிகளும் துணை கொடுக்கும்.

சிறுபான்மைச் சமூகத்தை வேறொரு கோணத்தில் பார்க்கத் தொடங்கியபோதும் பதவி பட்டத்துக்கு அடிமையற்று ஜனநாயகத்தைப் பாதுகாக்கச் சகசிறுபான்மைக் கட்சிகளான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஹெல உறுமய, மலையக முன்னணி என்பன ஒன்றிணைந்து ஜனநாயம் பாதுகாக்கப்பட்டது - என்றார். (4.40)

*குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க*

# பாலியாறு, பறங்கியாறு நீர்ப்பாசன திட்டங்களை முன்னெடுக்க முடிவு

**யாழ்ப்பாணம், டிசெ. 19**
**வடக்கு மாகாணத்தின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பாலியாறு மற்றும் பறங்கியாறு நீர்பாசனத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இரண்டு திட்டங்களையும் செயற்படுத்த 11 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற வடகிழக்கு அரச தலைவர் செயலணியின் சிறப்புக் கூட்டத்தில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்தின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு பாலியாறு மற்றும் பறங்கியாறு நீர்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு, அரசதலைவர் செயலணியின் இரண்டாவது கூட்டத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. அந்த யோசனை தொடர்பிலான முன்னேற்ற அறிக்கை கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

அதில், பாலியாறுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு 9 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை எனவும், பறங்கியாறு திட்டத்தை முன்னெடுக்க 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தின் ஊடாக பாலியாறு நீர்பாசனத் திட்டத்துக்கான சாத்தியக் கூற்று அறிக்கையைத் தயாரித்துள்ளதாகவும், பறங்கியாறு நீர்பாசனத் திட்டத்துக்காக அறிக்கை தயாரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாத்தியக்கூற்று அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னர் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் தேசிய திட்டமிடல் சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும். (5.105)

# வன்முறைகளில் ஈடுபட்டனரென்று வெவ்வேறு இடங்களில் 9 பேர் கைது

*6 வாள்கள், 2 உந்துருளிகள், மூடுந்து மீட்கப்பட்டன*
*மனித உரிமைகள் ஆணைக்குழு பார்வையிட்டது*

யாழ்ப்பாணம், டிசெ. 19
வன்முறைகளுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 9 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 6 வாள்கள், இரண்டு உந்துருளிகள், மூடுந்து என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியில் 5 பேரும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் ஒருவரும், நல்லூர், புத்தூர் ஆகிய இடங்களில் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

மாம்பழம் சந்தியில் வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கொக்குவில், மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த அவர்கள் 20, 21, 22 வயதுகளையுடையவர்கள்.

அவர்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த வன்முறைகளுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இரண்டு கடைகள் உடைப்பு, இரண்டு இடங்களில் வாள்வெட்டு, இரண்டு இடங்களில் வீடு புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளவர்கள் கைதுசெய்யப்பட்ட 9 பேரில் உள்ளடங்குகின்றனர் என்று குற்றஞ்சாட்டும் பொலிஸார் 4 பேர் ஆவா என்ற குழுவுக்கு உடந்தையாக இருந்தனர் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர். அவர்கள் மீதான விசாரணை தொடர்கிறது என்றும் அதன்பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்ணான்டோவின் நெறிப்படுத்தலில் இயங்கும் குழுவின் பொறுப்பதிகாரி றஞ்சன் எதிரிசிங்க தலைமையில் சென்ற பொலிஸ்குழுவினர் கைதுநடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



கைதுசெய்யப்பட்டவர்கள் சட்டநடவடிக்கைக்காகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

**ஆணைக்குழு பார்வை**

இதேவேளை, கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

"சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தொடர்பில் 1996 என்ற இலக்கத்துக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அங்கு சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினேன். கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாகச் சட்டமருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளேன்" என்று ஆணைக்குழுவின் இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார். (4.8.26.106)

# கடத்தப்பட்டவர் மீட்கப்பட்டார் கடத்தினரென்று நால்வர் கைது

*கடத்தலுக்கான காரணம் மர்மம்*

யாழ்ப்பாணம், டிசெ. 19
வடமராட்சி கேவில் முள்ளியான் பகுதியில் ஒருவர் கடத்திச் செல்லப்படும் போது இளைஞர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். கடத்தினார்கள் என்று 4 பேரை இளைஞர்கள் மடக்கியுள்ளனர். மூவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் கடத்தலுக்கான காரணம் மர்மமாகவே உள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7:40 அளவில் இடம்பெற்றது. அதே பகுதியில் வசிக்கும் 58 வயதுடையவரே கடத்தப்பட்டார். கடத்தல்காரர்கள் கார் மற்றும் அலுமாரிகளை லீசிங்கில் விற்பனை செய்யும்படி வாகனத்தில் வந்திருந்தனர். குறித்தநபரைப் பெயர் கூறி அழைத்து பலவந்தமாகக் காரில் ஏற்றிச் சென்றனர். இதனை அவதானித்த கேவில் இளைஞர்கள் துரத்திச் சென்று வாகனங்களை மடக்கி கடத்தப்பட்டவரை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பளை காவல்நிலையத்தில் முறையிடச் சென்ற கடத்தப்பட்டவரையும் அவரது பேரனையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். கடத்திச் சென்றவர்களைத் துரத்திய போது இளைஞர்களிடம் சிக்கியவர்களில் ஒருவர் இராணுவச்சிப்பாய். அவர் இரத்தினபுரியைச் சேர்ந்தவர். இருவரும் தென்பகுதியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் தமிழர் என்று தெரிவிக்கப்பட்டது. இளைஞர்கள் மடக்கிய இரண்டு வாகனங்களையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இரு தரப்பினரும் பேசிச் சமரசமாகினர் என்றும் சமாதானமாகச் சென்றனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4.26.160)

# மாடு மேய்க்கச் சென்றவர் யானை தாக்கி இறந்தார்

மாடு மேய்க்கச் சென்றிருந்தவர் காட்டுயானை தாக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பு - மங்களகம திவுலானை காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை சம்பவம் இடம்பெற்றுள்ளது. நாவிதன்வெளி 15ஆம் கிராமத்தைச் சேர்ந்த காத்தமுத்து மேகராஜா (வயது-42) என்பவரே உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மாடுகளை மேய்க்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை. அவரைத் தேடிச் சென்றபோது அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. உடலில் யானை தாக்கியதற்கான அடையாளங்களே காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தொழில் புரிந்துவிட்டு அண்மையில் நாடு திரும்பியிருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். மங்களகம பொலிஸார் விசாரணை நடத்தினர். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (4.46)

# சிங்களவர்களை நியமித்ததற்கு கூட்டணி கண்டனம்

இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய அலுவலகங்களிலுள்ள வெற்றிடங்களுக்குப் பெரும்பான்மை இனத்தவர்கள் நியமிக்கப்பட்டமையைக் கண்டிப்பதாக தமிழ் மக்கள் கூட்டணி தெரிவித்தது. 46 சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்ப் பிரதேசத்தில் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள் வேலையின்றித் துன்பப்படும்போது, சிங்கள மாவட்டத்திலிருந்து ஊழியர்களை வடக்குக்கு நியமிக்கப்பட்டதை நியாயப்படுத்தமுடியாது. இதை உடனடியாக இரத்துச் செய்து வடக்கிலுள்ள தகுதியான தமிழ் இளைஞர்கள் நியமிக்க வேண்டும் என்று கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க. அருந்தவபாலன் அனுப்பிய செய்திக் குறிப்பில் உள்ளது. (4)

அகில இலங்கை சைவப் புலவர் சங்க

## 58 ஆவது பட்டமளிப்பு நிகழ்வும் சைவ மாநாடும் சிறப்புற்றன



யாழ்ப்பாணம், டிசெ. 19

அகிலஇலங்கைச்சைவப்புலவர் சங்கம் நடத்திய 58 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்யாழ்ப்பாணம் வண்ணை நாவலர்மகாவித்தியாலயமண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

அகிலஇலங்கைசைவப்புலவர்சங்கத்தலைவர்சைவப்புலவர்மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நல்லை ஆதீன இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்முன்னிலையில் இவை இடம்பெற்றன.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிவசிறிது.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீமு.பாஸ்கரக்குருக்கள்(ரவி), கலாநிதி விக்கினேஸ்வரிபவநேசன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக ச.விநாயகமூர்த்தி (கரவெட்டி), ச.தட்சணாமூர்த்தி(மீசாலை), திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து (வவுனியா) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகிலஇலங்கைசைவப்புலவர் சங்கப் பொருளாளர் ச.முகுந்தனின்நெறிப்படுத்தலில் மதிப்பளிப்பு நடைபெற்றது.

சைவாகமபூஷணம் பட்டத்தை சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவி) ஆகியோரும் சைவப்புரவலர் பட்டத்தை யாழ்ப்பாணம்சிவகணேசன்ரெக்ரைல்ஸ் உரிமையாளர் க.அருள்நேசன், பௌராணிகர்மதிப்பைபௌராணிகர்கள் ச.விநாயகமூர்த்தி, ச.தட்சணாமூர்த்தி ஆகியோரும் மூத்த சைவப்புலவர்மதிப்பைசைவப்புலவர் திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்தும்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்ற சைவப்புலவர்களுக்கான மதிப்பை சாமித்தம்பி பொன்னுத்துரை, திருமதி பத்மாவதி தங்கராசா, திருமதிபுஸ்பலட்சுமிவிமலகாந்தன் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

தேர்வுச்செயலாளர்சைவப்புலவர் கந்த சத்தியதாசனின் நெறிப்படுத்தலில் இவைநடைபெற்றன.

இளஞ்சைவப் புலவர் பட்டத்தை கலாமோகன் பிரகான் (வாழ்வகம் சுன்னாகம்), செல்விகோகிலாசிதம்பரப்பிள்ளை (கோவிற்குளம் வவுனியா), செல்வி அன்னலட்சுமி இராமர் (கண்டி), ஆறுமுகம்சசிநாத் (கனகராயன்குளம் வவுனியா), செல்வி ஷமந்தி சந்திரசேகரம் (கொழும்பு), திருமதி சுசிலாதேவி கிருஷ்ணராஜன் (வவுனியா), இந்திரராசா மோகன் (உடுவில்), செல்விரேபிகாசண்முகலிங்கம் (முழங்காவில்), செல்வி சுதேந்தினி கணபதிப்பிள்ளை (வெற்றிலைக்கேணிமுள்ளியான்), திருமதி புவனராணி இரகுநாதன் (அரியாலை), செல்வி லோஜிதா மகேந்திரன் (மீசாலை), பகீரதன் சுகிர்தன் (திருக்கோவில் மட்டக்களப்பு), சாமித்தம்பி திருநாவுக்கரசு(கோட்டைக்கல்லாறு மட்டக்களப்பு), திருமதி மகேஸ்வரி விஜயரத்தினம் (சாவகச்சேரி), செல்லத்துரை பிருந்தாபரன் (திருநெல்வேலி யாழ்ப்பாணம்) ஆகியோர் பெற்றனர்.

சைவப்புலவர் பட்டத்தை திருமதி காந்திமதி சூரியகுமார் (லண்டன்), முருகப்பன் சேமகரன் (ஆஸ்திரேலியா), திருமதிகமலாதேவி சபாரத்தினம்(அரியாலை), திருமதி லீலாவதி அருளையா (தெல்லிப்பளை), கணபதிப்பிள்ளை வெற்றிவேல் (கிளிவெட்டி திருகோணமலை), நாகமணிநித்தியானந்தன் (லண்டன்), இராமையாஜீவன்பிரசான் (மாத்தளை), திருமதி சற்சொரூபவதி சுபமுரளிதரன் (கொழும்பு),திருமதிபத்மாவதி தியாகராசா(லண்டன்), சிவசிறி கறுவல்தம்பி குமாராசாமி (மண்டூர்), செல்வி மந்தாகினி பாலச்சந்திரன் (மல்லாகம்)ஆகியோர்பெற்றுக்கொண்டனர்.

சைவநாதம் 8 மலர் வெளியீட்டில்வெளியீட்டுரையை சைவப்புலவர் சி.கா.கமலநாதன்வழங்கினார். முதற்பிரதியை செ.சற்குணமும், சிறப்பு பிரதியை அலங்கார வித்தகன் க.வரததாசனும் பெற்றுக் கொண்டனர். அகிலஇலங்கைசைவப்புலவர் சங்கச் செயலாளர் த.குமரன் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. (4)

# திறமையான ஆசிரியர்கள் இல்லாவிடின் வளர்ச்சி இராது

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 19**

**பாடசாலைகளில் அனைத்து வசதிகள் இருந்தாலும் நல்ல புலமை, திறமை, அறிவுள்ள சிறந்த ஆசிரியர்கள் இல்லாது போவார்களாயின் கல்வியில் பாடசாலைகள் முன்னேற்றம் காண முடியாது. முன்னைய காலத்தில் கல்வியில் யாழ்ப்பாண மாணவர்கள் சிறந்து விளங்கினார்கள், போரால் வீழ்ச்சி கண்டனர். தற்போது கல்வி கற்பதற்குரிய சூழல் வந்துள்ளது. ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் அனைவரும் இணைந்து மீண்டும் கல்வியை முன்னுக்குக் கொண்டு வர உழைக்க வேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட்குரேதெரிவித்துள்ளார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் 100 புள்ளிகளைப்பெற்றுக்கொள்ளப்பணியாற்றிய ஆசிரியர்களை. பாடசாலை அதிபர்களை மதிப்பளிக்கும்நிகழ்வுயாழ்ப்பாணம்இந்து மகளிர் கல்லூரியில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தின ராகக் கலந்து கொண்டுஉரையாற்றும்போதுஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஆசிரியர் ஒருவர் தவறு செய்துவிட்டால் எல்லோரும் அதைப் பற்றியே கதைத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் ஒரு ஆசிரியர் நல்லதைச் செய்தால் அது தொடர்பில் பெரிதாகக் கதைப்பது கிடையாது.

உலகத்திலே பல்வேறு வேலைகள் செய்தாலும் ஆசிரிய வேலைக்கு ஈடான வேலை ஒன்றுமே இல்லை. நான் 25வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளேன். எங்குபோனாலும்ஒருவர்வந்துநான் உங்களிடம் படித்தவன் என்று சொல்வார். அந்த நேரம் ஆசிரியர் படும் சந்தோசத்தைச் சொல்ல முடியாது. அனுபவித்த ஆசிரியர்களுக்குத் தெரியும்.




மக்களிடம் நாங்கள் பெற்ற கடனை அடைக்கவேண்டும்.அவர்களின்பணத்தில்இலவசமாகசீருடைகளைபெற்று. இலவசமாகப்புத்தகங்களைப்பெற்று படித்துள்ளோம். இலவசக்கல்வியைப் பாடசாலையில்பெற்றுள்ளோம். பல்கலைக்கழத்திலும் இலவசமாகப் படித்துள்ளோம். அந்தக் கடன்களை நாங்கள் சிறந்த சேவைகள் மூலமாகவே திருப்பி வழங்க வேண்டும். யாழ்ப்பாணமாணவர்களைஉதாரணமாக எடுத்துபடிக்குமாறுஎனதுதாய்தந்தையர்என்னிடம்சொன்னார்கள். தீவகத்தில் இருப்போர் யாழ்ப்பாணத்துக்கு வருகின்றனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்புக்குச் செல்கின்றனர். கொழும்பில் இருப்போர் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். இதுதான்இங்குள்ளநிலை. வெளிநாட்டிலே போய்ப் பலர் பெரிய தொழில் அதிபர்களாகி இருக்கின்றார்கள். ஆனால்அவர்கள்தாய்நாட்டுக்குஎதுவும் செய்வது கிடையாது. அது ஒரு கவலையான விடயம்தான். நான் ஐரோப்பியப் பயணத்தின்போது இதனைக் கண்டிருக்கின்றேன்" - என்று கூறினார்என்றுஅவரது ஊடகப்பிரிவு அனுப்பியசெய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டது. (4)

## வல்லியாவத்தை மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

கொடிகாமம், டிசெ. 19

வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கரணவாய் மேற்கு வல்லியாவத்தைக் கிராம மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கும்நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது.10லட்சம் ரூபா நிதியில் தண்ணீர் தாங்கி அமைத்து அதிலிருந்து 10 இடங்களுக்குக் குழாய்மூலமாகத்தண்ணீரைப் பெறுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.



கரவெட்டி பிரதேச செயலக பிரிவில்கரணவாய்மேற்குஜே/349 வல்லியாவத்தைதிருமகள்சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் த.கோகுலன் தலைமையில் கடந்தவாரம்இந்தநிகழ்வுநடைபெற்றது.

"கரணவாய்மேற்குகிராமத்தில்விவசாய மாதிரிக்கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்" என்று நிகழ்வில் கலந்து கொண்டநாடாளுமன்றஉறுப்பினர் இ.அங்கயனின் செயலாளரும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான ச.இராமநாதன் தெரிவித்தார். நிகழ்வில்சிறப்புவிருந்தினர்க ளாக கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன், கரவெட்டி பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதிரஞ்சினிரகுநாதன், கரவெட்டி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக அலுவலர் திருமதி தனபாலசிங்கம் ஆகியோரும், மதிப்புறு விருந்தினர்களாகக்கரவெட்டிதெற்குமேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான க.வைத்தியநாதன், வி.விஜிதரன், தெ.நாகராசசர்மா சி.ரூபாதரன், சி.கமலநாயகி, செ.விஜிதா ஆகியோரும், விவசாய பிரதி அமைச்சரின் ஆலோசகரும் முன்னாள் அதிபருமான வ.கணேசமூர்த்தி, பருத்தித்துறைப்பிரதேச சபை உறுப்பினர்களான க. அரசரத்தினம், நா.பாலரமேஷ் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (4,159)

## அத்துமீறி மீன்பிடித்த இந்தியர்எண்மர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 8 பேர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவுக் கடற்பரப்பில்வைத்துஇவர்கள்கைதுசெய்யப்பட்டனர். அவர்கள்தமிழ்நாடுஇராமநாதபுரத்தைச் சேர்ந்வர்கள். நெடுந்தீவுக் கடற்கரைக்கு அண்மையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதேஅவர்கள்கைத்துசெய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் யாழ்ப்பாணக் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினரிடம் நேற்று முந்தினம் காலை ஒப்படைக்கப்பட்டனர். அதிகாரிகள் அவர்களைப்பொறுப்பேற்றனர். அவர்கள்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். என்றுதிணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (4,8,105)



# தமிழரின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணவேண்டும்

## அரசதலைவர் மைத்திரியிடம் வலியுறுத்தினார் மன்னார் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ

***தலைமன்னார், டிசெ. 19***

***அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், காணி விடுவிப்புப் போன்ற தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களின் சார்பாக அன்போடு இந்தக் கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.***

இவ்வாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிமேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை வலியுறுத்தினார்.

வருடந்தோறும் தேசிய ரீதியில் நடைபெறும் இயேசு பிரானின் பிறப்பும் நத்தார் கொண்டாட்டமும் இந்தமுறை மன்னாரில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த ஞாயற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் அரச்தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச தரப்பினர் பலர் கலந்து கொண்டிருந்தனர். அதில் உரையாற்றுகையிலேயே மன்னார் ஆயர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்து வலியுறுத்தினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

"மூன்று வாரங்களாக மிகக் கொந்தளிப்பாகஇருந்தஇலங்கை அரசியல் நிலமை தற்பொழுது படிப்படியாகவழமைக்குத்திரும்புவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. நாட்டில் அரசியல் உறுதித் தன்மை நிலை பெறுவதையும் ஜனநாயகவிழுமியங்கள்மதிக்கப்படுகின்றமையையும் உறுதி செய்யுமாறு மேன்மை தங்கிய அரசதலைவரைநாம்வினயமாகவேண்டி நிற்கின்றோம்.

மன்னார்சதொசகட்டடநிலத்தில் மீட்கப்பட்டுவரும்நூற்றுக்கணக்கான மனித எலும்புக்கூடுகள் மூலமாக, காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்குஎன்னகதிநேர்ந்திருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

அரசியல்கைதிகளின்விடுதலை தொடர்பாகப் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதும்அவர்கள் இன்னும்விடுதலைசெய்யப்படவில்லை, சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களின்விடுதலையைஎதிர்பார்த்து அவர்களின் உறவினர்கள்ஏக்கத்தோடுகாத்துக்கொண்டிருக்கின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பானபிரச்சினைகள்இன்னும் முடிவின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. தம் அன்புக்குரியவர்களை இழந்து நிற்கும் உறவுகளின் போராட்டம் தொடர்கதையாகவே உள்ளது.

அரசபடைகளால்ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பானவாக்குறுதிகள்இன்னும்நிறைவேற்றப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் முள்ளிக்குளம்கிராமம்இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

அந்தக் கிராம மக்கள் நூற்றாண்டு காலமாக வாழ்ந்துவந்த தங்கள்பாரம்பரியதாயகப்பகுதியைவிட்டுதற்காலிகஇடங்களில் ஏக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனவே அரசதலைவர் இந்த விடயங்களில் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தமிழ் மக்களின் சார்பாக அன்போடு வேண்டுகோள்விடுக்கின்றேன்" -என்றார்.

"இயேசுவின் வருகை அதாவது கிறிஸ்மஸ் காலம் என்பது எமக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் அருளுகின்ற ஒப்பற்ற காலமாகும். எனவேதான்கிறிஸ்துபிறப்பு ஆழமான சிறப்பான விழாவாகவுள்ளது.

எமது மக்களின் இன்றைய வாழ்க்கைச்சூழ்நிலை மகிழ்ச்சி நிறைந்தஇந்தக்காலகட்டத்திலே மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலை துன்பம் நிறைந்ததாக அநீதிமிக்கதாகக்கவலைஅளிப்பதாக உள்ளதை நாம் காண்கின்றோம். தாவீது மகன் இயேசு. எமக்குக் காட்டிய வழியில்நாமும்நீதியைநிலைநாட்ட உழைப்போம். மீட்பராம் இயேசுகொண்டுவந்தஅமைதி, மகிழ்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடிய அனைத்துச் சக்திகளையும்இந்தமண்ணிலிருந்து விரட்டி அடிப்போம். நம்பிக்கையில் தளராது தொடர்ந்து செயலாற்றுவோம்" - என்று அவர் மேலும்தெரிவித்தார். (4,60)

---

# காணிகளை விடுவிக்கக்கோரி செயலருக்கு மனுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலைங்களில் மக்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள்தொடர்பாகவும், அரசதலைவர் முன்னர் உறுதியளித்ததுபோல்காணிகளைவிடுவிக்கக்கோரியும் வலியுறுத்தி பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

வலி. வடக்குமீள்குடியமர்வைவலியுறுத்தும் அமைப்பு, வடமராட்சிகிழக்குகுடிமக்கள்குழு, கிராமிய உழைப்பாளர்சங்கம், யாழ்ப்பாண மாவட்ட பூந்தளிர் மகளிர் அமைப்பு, யாழ்ப்பாண மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து கையொப்பமிட்டு இந்த மனுவை அண்மையில் கையளித்துள்ளன.

இதுதொடர்பில்பருத்தித்துறைப்பிரதேசசெயலர்தெரிவித்ததாவது: "தமதுபிரிவில்நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை மீளக் குடியமர்த்துமாறு தொடர்ந்தும் மேலதிகாரிகளிடம் வலியுறுத்தி வருகிறேன். நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகளைத் திறம்படச் செய்து வருகிறேன். மனுவில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக உரிய கவனமெடுக்கப்படும் " என்று பிரதேசசெயலர் தெரிவித்தார்.

(4,160)

---

## கிளிநொச்சியில்

# விலைபோகின்றனர் மருத்துவர்கள் நோயாளர்கள் பெரும் திண்டாட்டம்

## சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.19

கிளிநொச்சியில் சில மருத்துவமனைகளை இலக்குவைத்து வலைவீசும் மருத்துவ மாபியாக்களின் கைகளில் மருத்துவர்கள்சிலர்உள்ளிட்டசுகாதாரத் துறைப் பணியாளர்கள் சிலர் வீழ்ந்துள்ளனர்என்பதுகுறித்துத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக முழங்காவில் ஆதார மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்படுவதில்லை. மருத்துவர் ஒருவர் அந்த நோயாளர்களையாழ்ப்பாணத்திலுள்ள பிரபலதனியார்மருத்துவமனைக்குநேரடி யாகஅனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறுஅனுப்பிவைக்கப்படும்பொது மக்கள்வேண்டுமென்றேஇரண்டு அல்லது மூன்று மருத்துவ நிபுணர் களால் பார்வையிடப்பட்டு(ஒவ்வொருபார்வையிடலுக்கும் தனிக் கட்டணம், பரிசோதனைகளுக்கு புறம்பான கட்டணம்) இறுதியில் பெருந்தொகைப் பணம் அறவிடப்பட்டுத்தான் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்று பாதிக்கப்பட்டதரப்பினர்கள்தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அந்தத் தனியார் மருத்துவமனையில் கிளிநொச்சி மருத்துவமனையின் மருத்துவர்கள் சிலரும் கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து அனுப்பப்படும் நோயாளர்களைக் கட்டணம் அறவிட்டுப் பார்வையிட்டு வருகிறார்கள் என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்த வியாபாரத்தில் இணைந்து செயற்படும் அனைத்து மருத்துவர்களும் மக்களது வரிப்பணத்தில் கல்வி கற்று மக்களுக்காகச் சேவையாற்றுவதாகக் கடமைச் சபதம் எடுத்தவர்கள் என்பதை சுட்டிக்காட்டும் பொது மக்கள், தற்போது மேற்கண்டவாறு பணத்துக்காக விலைபோகும் மருத்துவர்கள் பற்றி விசனம் தெரிவித்தனர்.

பொறுப்புவாய்ந்தமேலதிகாரிகளுக்கும் அத்தகையவர்களுக்குஎதிராகஆதாரங்களுடன் சட்ட நடவடிக்கையில் இறங்குவது குறித்துப்பிரதேசபொதுமக்கள் சில அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் சி. குமாரவேல் தெரிவித்ததாவது:

"இது தொடர்பாக இதுவரை தமக்கு எதுவித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. அவ்வாறுஒருசம்பவம்நடந்திருப்பின் அவை தொடர்பாகத் தமக்கு தெரியப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவை தொடர்பாகமேலதிகநடவடிக்கைஎடுக்க முடியும்" -என்றுதெரிவித்தார். (4,6)

---

## 2 லட்சம் பலா மரக்கன்றுகள் வடக்கில் வழங்கப்புடுகின்றன

கொடிகாமம் டிசெ.19

வடக்கில் 2 லட்சம் பலாமரக் கன்றுகள் நடுகை செய்வதற்கென பயனாளிகளுக்குவழங்கப்படுகின்றனஎன்றுவிவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

நாடுமுழுவதும்10 லட்சம் பலா மரக்கன்றுகள் நடுகை செய்யப்படுகின்றன. அதன்படி வடக்கில் மேற்குறித்த எண்ணிக்கையில்அவைவிநியோகிக்கப்படுகின்றன.

உள்ளூராட்சிசபைஉறுப்பினர்கள், சனசமூகநிலையங்கள் ஊடாக இவைமக்களுக்கு வழங்கப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

2 லட்சம் பலாமரக் கன்றுகளை வழங்கும் நிகழ்வை நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கயன் அண்மையில் ஆரம்பித்து வைத்திருந்தார். பலாமரக் கன்றுகள் உட்பட பயன்தரும் பலவகையான மரங்கள்மரநடுகைமாதமானநவம்பரிலிருந்துசிலதரப்பினர்வடக்கில்விநியோகித்திருந்தனர். (4,159)

---

## வெற்றிலைக் கேணியிலிருந்து மணல் ஏற்றுவதைத் தடுக்கவும்

### அந்தப்பகுதிமக்கள்கோரிக்கை

வெற்றிலைக்கேணி, டிசெ. 19

வெற்றிலைக்கேணி ஜே/432 கிராமஅலுவலர்பிரிவிலுள்ளமூத்திஜயர் தோட்டத்தில் சட்டவிரோதமாக நாளாந்தம் மணல் ஏற்றப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். அதனைத் தடுத்து நிறுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்அவர்கள்கோரிக்கை விடுக்கின்றனர்.

அண்மைய நாள்களாக சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் செல்வது அதிகரித்துள்ளது. டிப்பர் வாகனங்களில் இரவிரவாகமணல்பிறஇடங்களுக்குக்கடத்தப்படுகிறது. இது குறித்து அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்தபோதும் அவர்கள் அந்த இடங்களுக்குச்செல்லத் தயக்கம் காட்டுகின்றனர்.

இங்கிருந்து மணல் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்ல இரண்டு பாதைகளேகாணப்படுகின்றன. ஒருபாதைஏ9 வீதியைச் சென்றடையவேண்டும். மற்றையபாதைவெற்றிலைக்கேணிஉனவத்துஅம்மன்கோவில்ஊடாகச்சென்று மண்டலாய்ப் பிள்ளையார் கோவிலூடாகப் புளியடிச் சந்தியை அடையும். அங்கிருந்து இயக்கச்சி ஏ9 வீதியைச் சென்றடையவேண்டும். அல்லதுபுல்லாவெளி புளியடிச் சந்தி ஊடாக ஏ9 வீதியைச் சென்றடையவேண்டும்.

புளியடிச்சந்தியில்அத்தகையவாகனங்ககளைமறிக்கக்கூடியநிலை இருந்தும் சட்டத்துடன் தொடர்புடையவர்கள் இதனைத் தடுக்க முன்வருவதில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிலவேளைகளில் அவர்கள் மணலை வீதியை அண்மித்த காட்டுப்பகுதியில் பறித்துவிட்டுப் பின்னர் ஏற்றிச் செல்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. இந்த விடயத்தில் அரச துறையினர் சகலரும் ஒன்றித்து நின்று அல்லது தனித்து நின்று உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4,70)





## விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

சாவகச்சேரி, டிசெ. 19
பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நுணாவில் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
அபிவிருத்திக்கான உதவி ஊக்க மைய நிதிப்பங்களிப்புடன் சாவகச்சேரி நகரசபை மையத்தின் தெல்லிப்பழை நிறுவனமும் இணைந்து இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தன.
நிகழ்வில் சாவகச்சேரி நகர சபைச் செயலர் கா.சண்முகதாசன், சாவகச்சேரிநகரசபைஉறுப்பினர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-9)

*யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்கு*

# பணிப்பாளரை நியமிக்காமைக்கு ஆளுநரே பொறுப்புக்கூறவேண்டும்

*தமிழர் ஆசிரியர் சங்கம் கூறுகிறது*

**யாழ்ப்பாணம், டிசெ. 19**

**நீதிமன்றத்தீர்ப்புக்கிடைத்தபின்னரும்யாழ்ப்பாணக்கல்விவலயத்தில்பணிப்பாளரை நியமிக்காமைக்கு வடக்கு மாகாண ஆளுநரே பொறுப்புக்கூற வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.**

இதுதொடர்பில்சங்கம்அனுப்பியசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளரை நியமனம் செய்தது தவறு என்று தீவகக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோ நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.
அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்னர் அவர் வழக்கை மீளப்பெற்றுக்கொண்டு விட்டார். தற்போது வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்கும் அதிகாரம் முழுதும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உரியது.
ஆனால் வடக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலோடு நடைபெறவேண்டும் என்பதற்காகநியமனம்இறுபறிநிலையில் உள்ளது.
பணிப்பாளர் நியமிக்கப்படாமைக்கு வடக்கு ஆளுநரே பொறுப்பாகிவிட்டார்.எனவேபணிப்பாளர்நியமனத்தில் ஆளுநர் விரைந்து நடவடிக்கை எடுப்பாரா? அல்லது இன்னும் சில, பல மாதங்கள் இழுபறிநிலை நீடிக்குமா? என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.
இதைவிட வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில்மாகாணத்துக்கான மேலதிககல்விப்பணிப்பாளர்கள் இருவரின்வெற்றிடங்கள்இன்னும்நிரப்பப்படவில்லை.
இவ்வாறுமாகாணக்கல்வித்திணைக்களமும், வலயக் கல்வித் திணைக்களங்களும்பொறுப்பானவர்கள்இல்லாமல் இயங்குவது மாணவர்களின் கல்வியை எந்தளவுக்குப் பாதிக்கும் என்பது பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை.
உரிய இடங்களுக்கு உரியவர்களை உடனடியாகநியமனம்செய்யவேண்டும். தவறின்வடக்குமாகாணஆளுநரின் அலுவலகத்துக்கு முன்பாக அடுத்தவாரம்மௌனப்போராட்டம்நடத்தப்படும் - என்றுள்ளது. (4)



## அங்கத்தவர்களை இணைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.19
சாவகச்சேரிநகர இளைஞர் கழகம், சாவகச்சேரிநகரசபையுடன் இணைந்து நூலகங்களுக்கான அங்கத்தவர்களை இணைக்கும் வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
சாவகச்சேரிநகர இளைஞர் கழகத்தின் தலைவர் மு.தனுராஜ் தலைமையில்இடம்பெற்றநிகழ்வில்சாவகச்சேரிநகரசபைத் தவிசாளர்திருமதிசிவமங்கைஇராமநாதன்கலந்துகொண்டு அங்கத்தவர்களுக்கான பதிவுகளை ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் நகரசபை உறுப்பினர் திருமதி ர.லலிதாராணி, முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர் மற்றும் நகராட்சி மன்ற நூலகர் உட்பட இளைஞர் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.
இவ்வேலைத்திட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. நூலக அங்கத்தவர்களாக இணையவிரும்புவோர் சாவகச்சேரி நகர இளைஞர் கழகத்துடன் அல்லது நகரசபையின்நூலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ8, 9)

## செயலமர்வு

சாவகச்சேரி.டிசெ.19
தென்மராட்சி பிரதேச செயலக அலுவலர்களுக்கான தகவல் அறியும்சட்டங்கள்தொடர்பான செயலமர்வு பிரதேச செயலக மண்டபத்தில்கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்றது.
தகவல் அறியும் சட்டம் தொடர்பாக கொழும்பில் பயிற்சி பெற்ற வளவாளர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ஐ-9)





## விளக்கமளிக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம்.டிசெ.19
கிராமசக்தி வேலைத்திட்டம் தொடர்பாக மாவட்டச் செயலர்களினால் ஆளுநருக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், முல்லைத்தீவு மாவட்டச்செயலர் ரூபினி கேதீஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலர் மோகன்தாஸ், வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனிபா உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.
மாவட்ட ரீதியாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் கிராம சக்தி வேலைத்திட்டங்கள், பயிற்சி வகுப்புக்கள் என்பன தொடர்பிலும் கிடைக்கப்பெற்ற நிதி செலவழிக்கப்படும் விதம், எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டன. (ஐ)

## ஒளிவிழா நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.19
தென்மராட்சி கல்வி வலயம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஊழியர் நலன்புரிச் சங்கங்களால் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. தென்மராட்சி கல்வி வலயத்தின் ஒளிவிழா வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.
இதன்போது தென்னிந்திய திருச்சபை சாவகச்சேரி ஆலய போதகர் என்.ரி.ஜெயநேதசன்மற்றும்சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி றெக்ஸ் சௌந்தரா ஆகியோரின் ஆசியுரைகளும் மாணவர்கள்,அலுவலர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
தென்மராட்சிபிரதேசசெயலகத்தின் ஒளிவிழா பிரதேசசெயலகமண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஊழியர்நலன்புரிச்சங்கத்தலைவர் இ.இராஜசுதாகர்தலைமையில் நடைபெறும்.
நத்தார் ஒளியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்து மிருசுவில் புனித நீக்கிலார் ஆலய மாணவிகளின் வரவேற்பு நடனம், சாவகச்சேரிபுனித விகோரியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ம.றெக்ஸ் சௌந்தராவின் அசியுரை,பிரதேசசெயலக அலுவலர்களின் குழப்பாடல் ,சாவகச்சேரி அசெம்பிளி ஒப் கோட் மாணவிகளின் குழுநிகழ்வு ஆகியன இடம்பெறவுள்ளன. (ஐ-9)

## வீதி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, டிசெ.19
தென்மராட்சி பிரதேசத்தில் இரு வீதிகள் மற்றும் கடற்றொழிலாளர்ஓய்வுவிடுதிஎன்பன அமைக்கநிதிஒதுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலகத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சினால் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மணல்காடு பழைய வீதி சீரமைக்க 3 மில்லியன் ரூபாவும், தனன்களப்பு குறுக்குச் சாலை சீரமைக்க 7லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ,கடற்றொழில்நீரியல்வளங்கள்அபிவிருத்திமற்றும்கிராமிய பொருளாதார விவகார அமைச்சினால் கெற்பேலி கடற்கரையில் கடற்றொழிலாளர் ஓய்வு விடுதி அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கொடிகாமம், டிசெ.19
எழுதுமட்டுவாழ் கரம்பகம் கிராம அலுவலகர் பிரிவில் அண்மையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதார பரிசோதகர் தலைமையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது நுளம்பு பெருகக் கூடிய 17 இடங்கள் இனங் காணப்பட்டு அவற்றை உடனடியாகத் துப்புரவு செய்யுமாறு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அத்துடன்நுளம்புகுடம்பிகள் காணப்பட்ட 6 வீட்டு உரிமையாளர்களுக்கு அதனை துப்புரவு செய்யுமாறு14நாள்கள்காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
உரிய கால அவகாசத்திற்குள் துப்புரவு செய்யப்படாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்செய்யப்படும்என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. (ஐ-159)

## அடிக்கல் நடும் நிகழ்வு



யாழ்ப்பாணம், டிசெ.19
சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நவீன வசதிகளை கொண்ட ஸ்கோர் போர்ட் நிறுவுவதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.
**கல்லூரியின்125ஆவது ஆண்டுநிறைவையும், கடினபந்து துடுப்பாட்டம்ஆரம்பிக்கப்பட்டு75ஆவது ஆண்டுநிறைவையும் சிறப்பிக்கும் முகாமாக கல்லூரியின் பழைய மாணவர்களான சு.குமரன், சு.குகன் மற்றும் பொறியியலாளர் எஸ். நந்தரூபன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இந்த ஸ்கோர் போர்ட் அமைக்கப்படவுள்ளது.**
(ஐ-23)

# பார்த்தீனியத்தைக் கண்டால் உடனே பிடுங்கி அழிக்கவும்

## *சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு*

**சாவகச்சேரி, டிசெ.19**

**சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பார்த்தீனியச் செடி காணப்பட்டால் காணி உரிமையாளர்கள் அல்லது அரச மற்றும் பொது அமைப்புகள் அவற்றினை உடனடியாக பிடுங்கி அழிக்குமாறு சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.**

சபைஎல்லைக்குட்பட்டபகுதிகளில்பல இடங்களில்பார்த்தீனியச்செடிவளர்ந்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆதன உரிமையாளர்கள் பார்த்தீனியச் செடியினை அழிக்காத நிலையில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் செடிகளை அழிப்பதற்கு ஒத்துழைக்காத குடியிருப்பாளர்கள் பொது அமைப்புகள்போன்றவற்றுக்கு ஒருலட்சம்ரூபா வரை தண்டத்துடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

பார்த்தீனியச் செடிகள் காணப்படுவதாக கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு அமைய அதிகாரிகளால்பார்வையிடப்பட்டுமஞ்சள்அறிவித்தல்வழங்கப்படுமெனவும் 14 நாள்களுக்குள் அவை அகற்றப்படாவிடின்சிவப்புஅறிவித்தல் வழங்கப்படும். அதற்கும்செவிமடுக்காமல்விடின் அவர்களுக்குஎதிராகவழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அறிவித்துள்ளார். இதேவேளையாழ்ப்பாண மாவட்டத்தில் பார்த்தீனியச் செடிகளைக் கட்டுப்படுத்தவதற்கு ஏதுவாக அலுவலங்களில் குறைந்தது மூன்றுபேர்கொண்ட அலுவலர்களை நியமிக்க அலுவலர்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு பிரதி மாகாணவிவசாயப்பணிப்பாளர்திருமதி ச.சிறிரங்கன் அறிவித்துள்ளார். (ஐ-9)



## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், டிசெ.19

வறுமை நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யேர்மனி ஸ்ருட்காட், உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர் ரவீந்திரன், தமது பிள்ளையின் முதலாவது பிறந்த தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

அமைப்பின் சார்பாக முல்லை மாவட்ட அமைப்பாளர் தனுசனால் கடந்த வியாழக்கிழமை இந்தக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கல்விக்கு கரம்கொடுக்கும் நோக்குடன், வன்னிநிலப்பரப்பில் மிகவும் வறுமையில் உள்ள கிளிநொச்சி, மலையாளபுரம், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் ஆகியபகுதிகளைச்சேர்ந்த 30 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் பாடசாலைக்கு தேவையான உபகரணங்களும்வழங்கப்பட்டன. (ஐ-159)



## பரிசளிப்பு நிகழ்வு

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்புநிகழ்வு வித்தியாலயத்தின்மண்டபத்தில்அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவரும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான பா.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். தரம்5புலமைப்பரிசில்பரீட்சையில்172 புள்ளிகளைப்பெற்றுசித்தியடைந்தமாணவன்அ.நிருபனுக்கு முதன்மைவிருந்தினரால் நினைவுக்கேடயமும், 10ஆயிரம்ரூபாபணப்பரிசும்வழங்கிமதிப்பளிக்கப்பட்டது. (ஐ-159)

## பேருரை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மறைந்த ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பத்தாவது அறக்கொடைப்பேருரைநிகழ்வுப் பாதுகாவலன்கேட்போர்கூடத்தில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்திரு ம. டேவிட் தலைமையில் இடம்பெற்றநிகழ்வில்முதன்மைவிருந்தினராகயாழ்ப்பாணம் மறைமாவட்டஆயர்அருட்கலாநிதியஸ்ரின்பேணாட்ஞானம்பிரகாசம் ஆண்டகை கலந்து கொண்டார்.

'வெற்றி மீதான மனப்பாங்கின் வகிபாகம்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதிபேராசிரியர்தி.வேல்நம்பிபேருரையைநிகழ்த்தினார். (ஐ-222)



## மதிப்பளிப்பு நிகழ்வு






யாழ்ப்பாணம், டிசெ.19

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தால் தரம் 5 புலமைப்பரிசில், ஜி.சி.ஈ சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரிட்சைகளில் திறமைச் சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிவைத்தார். (ஐ)

★★★



கொடிகாமம், டிசெ.19

யாழ்ப்பாணம் மீசாலை உமாதவா கல்வி நிலையத்தின் தரம் 5 புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில்கடந்தஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்குநிலையத்தலைவர் க.தவயோகராசா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில்முதன்மைவிருந்தினர்களாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஉயர்பட்டப்படிப்புக்கள்பீடத்தின்பீடாதிபதிபேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிவசாயபீடத்தின் விவசாய பொறியியல் துறை பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண திறைசேரியின் பிரதம கணக்காளர் வேலுப்பிள்ளை கலைச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-159)

## மானிய விலையில் பொருள்கள்

சாவகச்சேரி, டிசெ.19

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் பொருள்கள் வழங்குவதற்கான பதிவுகள் இடம்பெற்ற வருகின்றன.

நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள், விவசாய உபகரணங்கள்ஆகியவை50வீதமானியவிலையில் வழங்குவதற்கான பதிவுகள் விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றன. (ஐ-9)

## தவறியது கொதிகுழம்பு குழந்தைக்கு எரிகாயம்

சாவகச்சேரி, டிசெ.19

அடுப்பிலிருந்து இறக்கியகுழம்புச்சட்டிகை தவறிஒருவயதுகுழந்தையின்மீதுவிழுந்ததில் குழந்தை எரிகாயங்களுக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடிதெற்கில்இடம் பெற்றது. அதே இடத்தைச் சேந்த கஜேந்திரன் கிறிஸ்டியா என்ற குழந்தையே எரிகாயங்களுக்குள்ளானது.

சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் அங்கு வந்தகுழந்தைதாயின் சட்டையைப்பிடித்துக் கொண்டு நின்றதாகவும் அடுப்பிலிருந்த கறிச்சட்டியைஇறக்கிய போது கைதவறி குழந்தையின் உடலில் கொட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எரிகாயங்களுக்கு இலக்கான குழந்தை சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. (ஐ 9)

## கணினிக் கூடம் உடைப்பு கற்றல் செயற்பாடு பாதிப்பு

கணினி கற்கை கூடம் திருடர்களின் கைவரிசையினால் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டமையை அடுத்து மாணவர்களின்கற்றல்செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அளவெட்டி பன்னாலைப் பகுதியில் இயங்கிய சன சமூக நிலையத்தில் அப்பகுதி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக பயன் படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த கணினி வகைகளே களவாடப்பட்டுள்ளன. இந்தச் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிலையத்தில் இருந்த மடிக் கணினிகள் 2, மேசை கணினிகள் 2, பற்றறிகள் இரண்டு அதற்கான சீ.பிஎன சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியிலான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. குறித்த களவு தொடர்பில் சனசமூக நிலைய நிர்வாகத்தினரால் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-105)

## சாரதிக்கு பிணை

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றினார் என்று குற்றச்சாட்டப்படும் சாரதி உட்பட மூவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது. இதில் கசிப்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரும், அனுமதி இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் சாரதி ஒருவருக்குமே பிணை வழங்கப்பட்டது. இந்த வழக்குகள் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் சாவகச்சேரிநீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பருவகால விடுமுறை என்பதால் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து மூவரையும் பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டது. (ஐ-9)

## வெள்ளோட்டம்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கைலாசவாகனம் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)



யாழ்ப்பாணம் விளாவெளி இந்து மயானத்திற்கு செல்லும் உள்ளக மற்றும் வெளி வீதிகள் சீரமைக்கப்பட்டு கடந்த 13ஆம் திகதி தொடக்கம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தின் நிதிஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. (ஐ– 63)



செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் சேமக்காலை வீதிகள் மணலினால் சீரமைக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன் மற்றும் கேசவன் சயந்தன் ஆகியோரால் ஒதுக்கப்பட்ட 90ஆயிரம்ரூபாநிதியில்இந்த வீதிகள்சீரமைக்கப்பட்டன. (ஐ– 70)

# காணாமல் ஆக்கப்பட்டோர் பணியக பிரதிநிதி அகழ்வை அவதானித்தார்

**மன்னார், டிசெ. 19**

**மன்னார் மனித புதைகுழி அகழ்வுப் பணியை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதி மிராக் ரஹீம் நேற்றுப் பார்வையிட்டார்.**



புதைகுழி அகழ்வுப் பணிகள் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தலைமையில் 118 ஆவது நாளாக நேற்று இடம்பெற்றது.

மனித புதைகுழி அகழ்வை நேரடியாகப் பார்வையிடுவதற்காகவும் தகவல்களைப் பெறுவதற்காகவும் அங்கு வந்தேன் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக பிரதிநிதி தெரிவித்தார். அவர், அகழ்வுப் பணிக்குப் பொறுப்பாகவுள்ள சட்டமருத்துவ அதிகாரியுடன் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த சட்ட மருத்துவ அதிகாரி,

இதுவரை மீட்கப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் மனித எலும்புக்கூடுகளில் பரிசோதனைக்கு அனுப்பத் தகுதியான எலும்புக் கூடுகளைத் தெரிவு செய்யும் பணி இடம்பெறவுள்ளது. தற்போது அகழ்வுப் பணிகள் சற்று ஆழப்படுத்தப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார்.

இதுவரை 276 மனித எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 269 க்கும் மேற்பட்டவை முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டு நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (4.56)

### தெய்வீகக் கலையரங்கு

காரைநகர் கிழவன்காடு கலா மன்றம் நடத்தும் தெய்வீகக் கலையரங்கு கிழவன்காடு கலா மன்ற மனோன்மணி கலையரங்கில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வில் தென்னிந்திய மற்றும் ஈழத்து வேதவிற்பன்னர்களின் வேதபாராயணம், கலாமன்ற இசைத்துறையினரின் இசை அராதனை, கலாமன்ற நடனத்துறையினரின் புஸ்பாஞ்சலி, 'நாடகப்பாவை' என்ற தலைப்பில் தமிழருவி த.சிவகுமாரனின் சொற்பொழிவும், நாதஸ்வர இளவரசு கே.பி.குமரன் குழுவினரின் நாத சங்கமம் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஐ-250)



பொன்னாலை சிறி வரதராஜப் பெருமாள் ஆலய மார்கழி மாத வைகுண்ட ஏகாதசித் தேர் திருவிழா நேற்று முற்பகல் 11 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை 3 மணிக்கு பூசைகள் ஆரம்மாகி 5 மணிக்கு சுவர்க்க வாயில் பூசை நடைபெற்றது. தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் பெருமாள் தேரில் உலா வரும் காட்சி இடம்பெற்றது. இதில் அதிகளவான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ஐ– 7)

### சிகிச்சை பயனின்றி முதியவர் சாவு

சாவகச்சேரி, டிசெ.19

விபத்தில் காயங்களுக்குள்ளான முதியவர் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளார்.

ஈருருளியில் பயணித்த போது நாவற்குழி பாலத்தில் வீழ்ந்து காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன் பின்னர் சிகிச்சை பயனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவடைந்துள்ளார்.

நாவற்குழி பகுதியைச் சேர்ந்த சந்தியா இம்மானுவேல்(வயது 62) என்ற முதியவரே சாவடைந்துள்ளார் என சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முதியவரின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

அறிக்கையினைப் பார்வையிட்ட நீதிவான் பிரதேசதிடீர் சாவு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-9)

### மணிவாசகர் நிகழ்வு

காரைநகர், டிசெ.19

காரைநகர் மணிவாசகர் சபையின் 64 ஆவது ஆண்டு மணிவாசகர் நிகழ்வு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளன.

முதல்நாள் நிகழ்வு அமெரிக்கா எண்ணெய்வள ஆய்வு நிலையப் பொறியியலாளர் சி.சிவஞானசம்பந்தன் தலைமையில் நாளை மாலை 5.30 மணிக்கு இடம்பெறும்.

நிகழ்வினை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தொடக்கிவைக்க உள்ளார்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கலாபூஷணம் பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வு 22 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8.30 மணிக்கு சபைத் தலைவர் கலாபூஷணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெறும். (ஐ-250)



## உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், டிசெ.19

முகமாலை இளம்தென்றல் விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வழங்கிவைத்தார்.


விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளிற்கு அமைவாக நாடாளுமன்ற உறுப்பினரின் பண்முகப்படுத்தப்பட்ட நிதிஒதுக்கீட்டில் குறித்த உபகரணங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளந்தென்றல் முன்பள்ளியில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உபதவிசாளர் கஜன், உறுப்பினர் றமேஷ் மற்றும் கழக வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## குருதிக்கொடை நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.19

சாவகச்சேரி புனித லிகோரியார் இளையோர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு புனித லிகோரியார் ஆலய அரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த அமைப்பினர் வருடாந்தம் இரு தடவைகள் குருதிக் கொடை நிகழ்வைச் செய்து வருகின்றனர். (ஐ- 9)



# உணவு கையாளும் நிலையங்களில் ஆறு நோயாளர்கள் கண்டு பிடிப்பு

## வவுனியா பொது சுகாதார பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவிப்பு



வவுனியா,டிசெ.19

**வவுனியாவில் உணவு கையாளும் நிலையங்களில் கடமையாற்றிய ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளில் 6 பேருக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்தக் கூடிய நோய் காவி காணப்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின்மேற்பார்வைபொதுசுகாதார பரிசோதகர் க.தியாகலிங்கம் இந்த விடயத்தைதெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 11 சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் காணப்பட்ட உணவகங்களில் கடமையாற்றும் உணவு கையாளும் ஊழியர்கள் 382 பேருக்கு இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை மருத்துவ பரிசோதனைகள்மேற்கொள்ளப்பட்டு, உணவங்களில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன், இந்த மருத்துவ பரிசோதனையில்3பேருக்குநெருப்புக்காய்ச்சலை பரப்பக்கூடிய நோய்க்காவி காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதுடன், 3 பேருக்குகாசநோயை ஏற்படுத்தும்நோய் காவி இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களுக்குரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு, மீண்டும் அதே உணவகங்களில்கடமையாற்றஅனுமதிவழ்ங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (110)



# வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் அசௌகரியம்

வவுனியா,டிசெ.18

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீதியோரத்தில் வீசப்படும்கழிவுகளால் மக்கள்பெரும்அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வவுனியா ஈச்சங்குளம் பிரதான வீதியில் தாண்டிக்குளம் பகுதியில் உள்ள நீர் பாயும் கால்வாய், மற்றும் வீதியோரங்களில் கழிவுகள்வீசப்பட்டுவருகின்றன. வீட்டுகழிவுகள், கடைக்கழிவுகள், கோழிக் கழிவுகள் என்பன அந்தப் பகுதியில் வீசப்படுவதால், பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், வீதியால் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், நாய் மற்றும் காகம் போன்றவற்றினாலும்காவிச்செல்லப்படுவதுடன், வீதிகளிலும்பரவிகிடக்கின்றன. இதனால்சுகாதார சீர்கேடானநிலைமைஉருவாகியுள்ளதுடன்,

தொற்றுநோய்பரவக்கூடிய அபாயநிலையும்ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்துவவுனியாநகரசபை கவனம் செலுத்தி கழிவுமுகாமைத்துவத்தை சரியானமுறையில் ஏற்படுத்தவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

குறித்தபகுதிநகரசபையால் சுத்தப்படுத்தப்பட்டு வந்தாலும், சிலரால்மீண்டும்கழிவுகள் அப்பகுதியில் கொட்டும் நிலை காணப்படுகின்றது.

எனவேஅதற்கானசரியான வேலைதிட்டம்ஒன்றைநகரசபைமேற்கொள்ளவேண்டும் என்று வீதியால் பயணம்செய்வோர் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகரசபையின் உபநகரபிதாவின் கவனத்துக்குஉதயனால்கொண்டு வரப்பட்டது.

"குறித்த பகுதியில் உள்ள கழிவுகள் நகரசபையால் அண்மையில் அகற்றபட்டிருந்தது. எனினும் குறித்த சிலர்அப்பகுதியில்மீண்டும் மீண்டும் கழிவுகளை கொட்டி வருகின்றனர். பொதுச்சுகாதாரவிடயத்தில் அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்கினால் மாத்திரமே நகரைச் சுத்தமாக வைத்திருக்கமுடியும் என்றும்,

அப்பகுதியில் கழிவகற்றலை மேற்கொள்வதாகவும், முதற்கட்டமாககுப்பை கொட்டவேண்டாம் என்றவாறான பெயர்ப்பலகை ஒன்றை நட்டுவைப்பதாகவும்தெரிவித்தார். (110)



ஒட்டுசுட்டான்

# பொலிஸ் நிலையத்தில் ஒளிவிழா நிகழ்வுகள்

முல்லைத்தீவு,டிசெ.19

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் கேட்போர் கூடத்தில், வவுனியா இறம்பைக்குளம் ஈஷி பூரண சுவிஷேசசபையின் அனுசரணையில் நேற்று மாலை ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை ஒன்றிணைத்து, அங்கு பணியாற்றும் பொலிஸ் அலுவலர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில், பொலிஸாருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கிவைத்தல், முல்லைத்தீவுமாவட்டத்திலுள்ள7பொலிஸ்நிலையங்களுக்கு முதலுதவிப் பெட்டிகள் வழங்கல், பொலிஸாரின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் என்பனவும், கிறிஸ்மஸ் ஒளிவிழா நிகழ்வுகளுடன் இடம்பெற்றுள்ளன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்தின, லண்டனிலிருந்து வருகை தந்த போதகர் யூட் சந்திர ரமணன் குடும்பத்தினர். மதிப்புறு விருந்தினர்களாக பொலிஸ் அதிகாரி எஸ். பி. சேனநாயக்க, மாங்குளம், முல்லைத்தீவு தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், வவுனியா இறம்பைக்குளம் ஈஷி பூரண சுவிஷேச சபையின் பிரதான பிஷப்பி.எம்.இராஜசிங்கம்ஆகியோரும்கலந்துகொண்டனர்.


7 பொலிஸ் நிலையங்களுக்கு முதலுதவிப் பெட்டிகள், 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், 100 பொலிஸாருக்கானமூக்குக்கண்ணாடிகள்என்பனகிறிஸ்மஸ் நிகழ்வினை முன்னிட்டு இந்த நிகழ்வில் வைத்து பொலிஸாருக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

# கிளிநொச்சியில் அதிக பனிமூட்டம்

கிளிநொச்சி,டிசெ.19

கடந்த சில நாள்களாக கிளிநொச்சியின் பகுதிகள் அதிக பனி மூட்டத்துடன் காணப்படுகிறன. காலை ஏழு மணியைக் கடந்தும் பிரதேசங்கள் பனிமூட்டம் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. நேற்றுக் காலையும் கடுமையான பனிப்பொழிவு காணப்பட்டது. இதனால் குறிப்பிட்ட அளவு தூரத்தில்எதிரேஉள்ளவற்றைஅடையாளம்காணமுடியாத நிலை ஏற்பட்டதோடு, வீதியில் செல்லும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி செல்வதையும் அவதானிக்க முடிந்தது. இந்தகாலப்பகுதியில்அதிகபனிநிலவுவதுவ்ழமை ஆயினும் தற்போதைய காலச்சூழலில் அதிகளவு பனிப்பொழிவு நிலவுவதாக முதியவர்கள் தெரிவித்தனர்.

அதிகாலையில் கடுமையான குளிர் நிலை தொடர்வதால் சாதாரண இயல்புநிலை சற்றுப் பாதிக்கப்படுகிறது. (35)



# ஈருருளி வழங்கல்

முல்லைத்தீவு,டிசெ.19

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியால யத்தில் உயர்தரம் கற்றுக்கொண்டிருக்கும்பெற்றோரை இழந்து அம்மம்மாவின் அரவணைப்பில்வாழ்ந்துவரும்மாணவிசெல்வி. சுவேந்திரன் சுவேக்காவின் பாடசாலைப் போக்குவரத்துச் சிரமத்தை நீக்குவதற்காக ஈருருளி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அமரர்திருமதிமகேந்திரராசாசுந்தராம்பாளின் 31ஆம் நாள் நினைவு நாளை முன்னிட்டு, புலம்பெயர் நாட்டில் வசித்துவரும்அவரதுபிள்ளைகள், மருமக்கள் இணைந்து, அன்பளிப்பாக ஈருருளியை வழங்கியுள்ளனர். (222)





# காளானில் உணவு தயாரிப்பது தொடர்பில் செயல்முறைப்பயிற்சி

மாந்தை,டிசெ.19

மாந்தை கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் சிறப்பு உணவாக காளான் மூலம் உணவுகள் தயாரிப்பது தொடர்பான செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டதுடன், காளான் உணவுகள் தயாரித்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டனஎனபிரதேசசெயலர்றஞ்சனாநவரத்தினம் தெரிவித்தார். கடந்தவாரத்தில்அரசதலைவர்செயலகத்தின் போசாக்கு உணவுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் பிரதேச செயலகத்திலும் கிராம அலுவலர் பிரிவுகளிலும் நடத்தப்பட்டுள்ளன.

வேர்ள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் விவசாயப் போதனாசிரியர்களால்நிகழ்ச்சித்திட்டகருத்துரைகள்வழங்கப்பட்டன.

நிகழ்வுகளில் முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், அரசஅலுவலர்கள்உட்படபலர்பங்குபற்றியிருந்தனர். (9)

# தம்பிக்கு சிறுநீரகம் வழங்கிய அண்ணன்



வவுனியா,டிசெ.19


வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும், 12 வயதுடைய மாணவன் சசிக்குமாருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில், மூத்த சகோதரர் தயாளன் தனது சிறுநீரகங்களில் ஒன்றைத் தானமாக வழங்க முன்வந்துள்ளார். தந்தை இல்லாத குடும்பத்துக்குத் தற்போது பலரும் சிறிய அளவிலான நிதி உதவிகளை வழங்கி வருகின்றனர்.

சிவானந்தன் நற்பணி மன்றமூடாக, நோர்வேயில் வசிக்கும் சமூக ஆர்வலர் சுரேஷ் சிவானந்தன் தனது தந்தையின் நினைவு தினத்தை முன்னிட்டு ஒருமாதத்திற்குதேவையான17ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை, மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் செ.சிறிநிவாசன் ஊடாகவழங்கிவைத்தார். (222)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு எதிரான வணிகர்களின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

**புதுக்குடியிருப்பு,டிசெ.19**

**புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராக உடனடியாக எடுத்த துரித நடவடிக்கையால் வணிகர்களின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது.**



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கை காரணமாக. வணிக நிலையங்களின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக வணிகர் சங்கம் குற்றம்சாட்டி இருந்தது.

அத்துடன் 17 ஆம் திகதி பிரதேச சபைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாக தீர்மானித்து அறிவிப்பும் செய்திருந்தனது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் குழந்தையேசு கோவில் முன்பாக, நடைபாதை வியாபாரிகள் அதிகளவில் வணிகநிலையங்களில் விற்கும் பொருள்களை போட்டு விற்பனை செய்துவந்தனர்.

இதற்குப் பிரதேச சபை அனுமதிகொடுத்திருந்தமை வணிகர்களின் வியாபாரத்தினை பாதிக்கும் செயல் என கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு வணிகர் சங்கம் தீர்மானித்திருந்தனது.

இந்நிலையில் 17 அம் திகதி பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் எடுத்த துரித நடவடிக்கையினால் வணிகர்களின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நடைபாதை வியாபாரிகளின் நிலமை தொடர்பில் புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத்தின் அங்கத்தவர்களையும் குழந்தை யேசு ஆலயத்தின் பங்குத்தந்தையையும் அழைத்துத் தவிசாளர் ஆலோசித்தார்.

இதற்கு அமைய புதுக்குடியிருப்பு வணிகர்களின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபரிகளின் வியாபார நடவடிக்கைக்கு பிரதேச சபை அனுமதியளிக்கவேண்டாம் என வணிகர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொண்ட பிரதேச சபை உடனடியாக நடைபாதை வியாபாரிகள் தங்கள் வியாபார நடவடிக்கையினை நிறுத்த வேண்டும் என முடிவெடுக்கப் பட்டதற்கு அமைவாக, புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் நடைபாதை வியாபாரிக ளின் வணிக நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டுள்ளன.

(ரி 3)

## கரைச்சி பிரதேசபையால் உள்ளக வீதிகள் சீரமைப்பு

கிளிநொச்சி.டிசெ.19

கரைச்சி பிரதேசபையின் ஆளுகைக்குள் உள்ள கிளிநொச்சி நகரத்தின் மூன்று உட்புற வீதிகளை நிரந்தமாகச் சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் முன்மொழிவுக்கு அமைய, கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் 16 வீதிகளை நிரந்தரமாக சீரமைக்கும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கிளிநொச்சி நகரின் மத்திய கல்லூரி, ஆரம்பப் பாடசாலை வீதி, மின்சார சபை வீதி, நீதிமன்ற அருகாமை வீதி, ஆனந்தபுரம் தொண்டமான் இணைப்பு வீதி என்பன ஆறு மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், பிரதேச சபை உறுப்பினர் குமாரசிங்கம் தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் நேரில்ச் சென்று பார்வையிட்டனர்.



## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு: ஆஸி., பிரிட்டன், சீனா வரவேற்பு

கொழும்பு, டிசெ. 19

அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதை பிரிட்டன், ஆஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகள் வரவேற்றுள்ளன.

இதுதொடர்பாக பிரிட்டன் அயலுறவுத்துறைப் பணியகத்தின், ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான இணை அமைச்சர் மார்க் பீல்ட் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

‘இலங்கையின் அரசியல் நிலமைகளுக்கு, அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். நெருங்கிய நண்பனாகவும், பங்காளராகவும் இலங்கையுடன், பிரிட்டன் தொடர்ந்து ஆதரவாக இருக்கும். நாட்டின் பொருளாதார மீட்சி, மனித உரிமைகள் முன்னேற்றம் உள்ளிட்ட நிலையான அபிவிருத்திக்கு ஆதரவளிப்போம். இலங்கையின் மனித உரிமைகள் நிலமைய முன்னேற்றும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பிரிட்டன் கடமைப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கைக்கு 8.3 பில்லியன் பவுண்டுகளை முரண்பாடு, உறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பு நிதியில் இருந்து, பிரிட்டன் வழங்கியுள்ளது. பொலிஸ் மறுசீரமைப்பு, பயிற்சி, நல்லிணக்கம், அமைதியைக் கட்டியெழுப்பல், மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றல் போன்றவற்றுக்கு இந்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை வரவேற்றுள்ள ஆஸ்திரேலியத் தூதுவர், தொடர்ந்தும் இலங்கைக்கு உதவத் தயாராக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

‘இலங்கையுடன் கலாசார அடிப்படையில் நெருங்கிய தொடர்புடையதும், மிக முக்கியமான அபிவிருத்திப் பங்காளி என்ற வகையிலும் இலங்கையில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி நிலைக்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புடன் அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டுள்ளமையை வரவேற்கின்றோம். உள்நாட்டில் ஏற்படத்தக்க பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை தாமாகவே தீர்த்துக் கொள்ளல். நாட்டில் உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தியை ஏற்படுத்தல் என்பவற்றுக்கான திறன் இலங்கை அரசு, அரசியல் கட்சிகள் மற்றும் மக்களிடம் உண்டு என நம்புகின்றோம்" என்று ஆஸ்திரேலியத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை அரசு மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றுடன் நட்புறவை வலுப்படுத்திக் கொள்வதற்கு சீனா எதிர்பார்த்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவாக்கல், இரு நாடுகளினதும் மக்களுக்கான பரஸ்பர நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படல் என்பன தொடர்பிலும் செயற்படத் தயாராகவுள்ளோம், எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(5.61)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை சந்தேக நபர்கள் தப்பி ஓட்டம்

கிளிநொச்சி.டிசெ.19

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக் கணைக் காட்டுப் பகுதியில் இயங்கி வந்த, கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்றுப் பகல் கிளிநொச்சிப் பொலிஸ் சிறப்பு குழுவினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் சிறப்புக் குழுப் பொறுப்பதிகாரி டி.எம் சத்துரங்க தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்த முற்றுகை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரண்டு சந்தேகக நபர்கள் தப்பி ஓடியுள்ளனர். குறித்த பகுதியில் இருந்து பதின் மூன்று பெரல் கோடா மற்றும் மூன்று கான்களில் கசிப்பு. கசிப்பு வடிப்பதர்கான பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவரின்ஈருருளியும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

தப்பிச் சென்ற இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர். அவர்களை கைது செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்து வருவதுடன், குறித்த கசிப்பு உற்பத்தி நிலையம், கசிப்பு மொத்த விற்பனையாளரினது எனவும், சந்தேக நபர்களைக் கைது செய்ததன் பின்னர் பிரதான குற்றவாளியையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மீட்கப்பட்ட சான்றுப் பொருள்கள் இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும்.

(35)



கரைச்சி பிரதேச சபையின்

## சட்டத்துக்கு புறம்பான செயல்களை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது

*சபையின் உறுப்பினர் ஐ. மோகன்ராஜ் தெரிவிப்பு*

கிளிநொச்சி, டிசெ. 19



கரைச்சி பிரதேச சபையின் சட்டத்துக்கு புறம்பான செயற்பாடுகளைத் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர் ஐயாத்துரை மோகன்ராஜ் தெரிவித்தார்.

“கடந்த சில மாதங்களாக சட்டத்துக்கும் ,சுற்றறிக்கைகளுக்கும், நடைமுறைகளுக்கும் மாறாக பல விடயங்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இதனை நாமும் பல தடவைகள் சுட்டிக்காட்டிய போதும், அவர்கள் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே இவ்வாறான செயற்பாடுகளை நாம் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

நாம் மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல கடமைப்பட்டுள்ளோம். சபையும் மக்களுக்கு பொறுப்புக் கூறும் விடயத்தில் இருந்து தப்பிக்க முடியாது" எனத் தெரிவித்த மோகன்ராஜ்.

“சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் வியாபார நிலையங்கள் வழங்குதல். முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் விடயத்தில் சபையின் செயற்பாடுகள், சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், சபையின் நிதிப் பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் கரைச்சி பிரதேச சபை சட்டதிட்டங்களுக்கு புறம்பாகச் செயற்பட்டு வருகிறது. எனவே இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் இனியும் நாம் பொறுமையாக பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சபை மக்கள் நலன் சார்ந்து சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லத் தவறும் பட்சத்தில் நாம் மக்கள் மத்தியில் இந்த விடயங்களை வெளிப்படுத்த வேண்டிய நிலமை ஏற்படும்" எனவும் அவர் தெரிவித்தார்

இது தொடர்பாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாள்ர் அ.வேழமாலிகிதனிடம் கேட்டபோது “குறித்த உறுப்பினர் எமது சபையின் நிதி மற்றும் கொள்கைக் குழுவில் உள்ளார். அவர் இதுவரை இது தொடர்பாக எந்தவொரு விடயத்தையும் சபையில் தெரிவிக்கவில்லை. அவ்வாறு சபை சட்டத்திற்கு முரணாக செயற்படுகின்றது என்றால், அவர் சபைக் கூட்டங்களில் தெரிவித்திருக்கலாம். அவ்வாறு செய்யாது சபை சட்டத்திற்கு முரணாக செயற்படுகின்றது என்று கூறுகின்றார். சபையை எனது எண்ணத்திற்கு வழிநடத்த முடியாது. சபை தொடர்பாக பல்வேறு திணைக்களங்கள் உள்ளன, அவற்றில் சென்று முறையிடலாம்". - எனவும் தெரிவித்தார்.

(6)



# வெள்ளநீரை வெளியேற்றும் வேலைகள் ஆரம்பம்

மன்னார்,டிசெ.19

மன்னார்மாவட்டத்தில்வெள்ளப்பாதிப்பு அதிகம் ஏற்படும் கிராமங்களைக்கொண்ட ஜிம்ரோன்நகர், சாந்திபுரம்ஆகிய இரு பகுதிகளை மையப்படுத்திவெள்ளநீரைவெளியேற்றும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இரண்டு கிராமங்களையும் பிரதான பாதையுடன் இணைப்பதற்கான பாலம் அமைக்கும் பணி, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்மன்னார்மாவட்டதேசிய பிரதிநிதி ஜோசப் நயன் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சுமார்5வருடங்களுக்குமேல் இந்தக்கிராமமக்கள்டயர்களாலும் சிறிய போக்குகளாலும் பாலங்களை அமைத்து சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தினை மேற்கொண்டனர்.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அரச கரும மொழிகள் அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றுவருகின்றன.

இங்குள்ள கால்வாயானது ஆங்கிலேயர் காலத்தில் இருந்துபயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. வருடத்தில் 8 மாதங்கள்நீரினால்கால்வாய் நிரம்பி காணப்படுவதனால், கால்வாயினை கடப்பதற்கு பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர் கொள்கின்றனர். (60)

# கட்சி பேதமின்றி செயற்பட்டால் அபிவிருத்தியை அடையமுடியும்

## மன்னார்பிரதேசசபை தவிசாளர்முஜாஹீர் தெரிவிப்பு



மன்னார்,டிசெ.19

**நாம் கட்சி பேதமின்றி ஒற்றுமையுடன் செயற்பட்டால் மன்னார் பிரதேசப் பகுதியை அபிவிருத்தி செய்ய முடியும் என, மன்னார்பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் தெரிவித்தார்.**

சபைக்குட்பட்டபிரதேசத்தில்,பேசாலைப் பகுதிஅபிவிருத்திக்குசெலவழிக்கப்படும் நிதியைப் போன்று இன்னும் எந்த கிராமத்துக்கும் செலவழிக்கவில்லை.

வடக்குமாகாணசபையின்கிராமியஅபிவிருத்திக்கு குறித்து ஒதுக்கப்பட்ட நிதி திட்டத்தின்கீழ்,பேசாலையின்மூன்றுகிராம அலுவலர் பிரிவுகளுக் கான மூன்று மில்லியன்ரூபாநிதிப்பங்களிப்பில்நிர்மாணிக்கபட்ட பேசாலை பொது நூலகம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள்,பேசாலை உதவி பங்குத் தந்தை அருட்பணி பசில் கிளைன் ,மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். முஜாஹீர், முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம். அன்ரன், செயலர் திருமதி டீ.எம்.பி.லோகு ஆகியோர் பொது நூலக கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இங்கு மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹீர் தொடர்ந்து பேசுகையில் "பேசாலைஇந்தமாவட்டத்தில்ஒருபெரியபிரதேசம்.

பேசாலைபிரதேசசபைஉறுப்பினர்கள் கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்எனமுனைப்போடுஇருக்கின்றனர்.

நாங்கள் இந்த பிரதேச சபையைப் பொறுப்பேற்றபின்பு ஆறு மாதத்துக்குள் அமைச்சர் ரிஷாட் மூலம் பேசாலைக்கு மட்டும்ஒருகோடி97இலட்சத்து40ஆயிரம்ரூபாநிதிஒதுக்கீடுசெய்துஅபிவிருத்தி செய்துள்ளோம்.

எங்கள் பிரதேச சபைக்கு உறுப்பினர்களாகதெரிவுசெய்யப்பட்டபேசாலையைச் சேர்ந்த உறுப்பினர்களான என்.செபமாலைபீரீஸ்,திருமதிஆர்.டிப்னாகுரூஸ் ஆகியோரின்வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் தனது அமைச்சின் நிதியின் மூலம் கிராமத்தை அபிவிருத்தி செய்ய முற்பட்டார்.

மன்னார்பிரதேசசபைக்கு உட்பட்ட ஒவ்வொரு கிராமத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்புளங்கள் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இருக்கிறது.

உறுப்பினரான என்.செபமாலை பீரீஸ் எங்களது மாற்றுக் கட்சியாக இருந்தாலும், இவர் அமைச்சரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு கட்சி பேதமின்றி இணைந்துசெயல்படுகிறார். இவர்முன்னெடுத்து வரும் அபிவிருத்தியை சகிக்க முடியாத ஒரு சிலர் அமைச்சர் ரிசாட்டின் பணத்துக்கு அடிமையாகி விட்டார் என இவருக்குஎதிராகப்பேசுகின்றனர். இவர்கள் சொல்லுவதுபோல் அவர் அப்படி சோரம்போகவில்லை.

மாறாக அவருடைய ஒரே குறிக்கோள் யாரைப் பிடித்தாவது பேசாலைப் பகுதியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே.

நாம் 21 உறுப்பினர்களும் எமது ஒவ்வொரு கிராமத்துக்குமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களைதிட்டமிட்டுஒற்றுமையுடன்செயல்படுத்தமுன்வரவேண்டும் என வேண்டிநிற்கின்றேன்.

எமதுபிரதேசத்துக்குள்12ஆயிரத்து544 குடும்பங்கள் காணப்படுகின்றன. நாம் கட்சி பேதமின்றி யார் யாரிடம் சென்றும் நிதியை பெற்றுக் கொண்டு எமது பிரதேசத்தை அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டு செல்ல வேண்டுமோ அதற்கேற்ப நிதியைப் பெற முயற் சிக்க வேண்டும். நாம் 21உறுப்பினர்கள்செயலர் ஆகியோர் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனக் கேட்டு நிற்கின்றேன்.

பேசாலையில் ஒரு சிறப்பங்காடி கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம்.

ஆனால் ஓரிருவர் இதற்கான தவறான கருத்துக்களைப் பரப்பி இதைத்தடை செய்யும் நோக்கில் செயற்படுகின்றனர்.

புதிய வருடத்துக்கு முன் அமைச்சர் ரிஷாட்டின் நிதியிலிருந்து பத்து லட்சம் ரூபா செலவில் பேசாலை க்காட்டாஸ்பத்திரியிலிருந்துபேசாலைப்பிரதானவீதியிலுள்ள ஒவ்வொரு தூணுக்கும் மின்சார இணைப்பை பொருத்துவதற்கானநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (60)

# நகர்சபை தொழிலாளர்களின் ஒளிவிழா நிகழ்வு

வவுனியா,டிசெ.19

வவுனியாநகரசபைத்தொழிலாளர்களின் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 20 ஆம் திகதிசனிக்கிழமைகாலை10 மணியளவில் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக நகரசபை தொழிலாளர்கள் நலன்புரிச்சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனினியா நாற்சதுர சுவிசேஷ சபை மற்றும் பசுமைத் தொழிலாளர்கள் நலன்புரிச் சங்கம்ஆகியன இணைந்து, நகரசபைத் தொழிலாளர்களுக்காக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தநிகழ்வில்சிறப்புவிருந்தினராக நகரசபைத் தலைவர் இ.கௌதமன்,வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசா, வவுனியா தலைமைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்லோ ராச்சி ஆகியோர் கலந்துகொள்வதுடன், மதிப்புறு விருந்தினர்களாக நகரசபை உபதலைவர் சு. குமாரசாமி, நகரசபைசெயலர் ஆர். தயாபரன், முயற்சி அறக்கட்டளையின் நிறுவுனர் மற்றும் தலைவர் க. சிறிதரன், முயற்சி அறக்கட்டளையின் செயலர், திருமதி. ரி. அ. அமிலியா, உறுப்பினர்கள், நகரசபைசுகாதாரப்பரிசோதகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

# வீதிகளில்குப்பை வீசுபவர்களுக்கு கடும் நடவடிக்கை

வவுனியா,டிசெ.19

வவுனியாவிலுள்ள வீதிகளில்தமதுவீட்டுக்கழிவுகள், வியாபாரநிலையத்தின்கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும் அதனைச் செயற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா நகரசபை நகர உபபிதா சு. குமாரசாமி தெரிவித்தார்.

வீதிகளில் குப்பைகளை வீசுவதால்வீதியால்செல்பவர்களுக்கு பல அசௌரியங்கள்ஏற்படுகின்றன.

வீதியில் குப்பைகள் வீசப்பட்டு வருகின்றமை கண்காணிக்கப்படவுள்ளதுடன், குப்பைகளை வீசுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையும் இனிவரும் காலங்களில் இடம்பெறவுள்ளன.

வீதிகளில் வீசப்பட்டுள்ள குப்பைகளிலிருந்து பல ஆவணங்களும்மீட்கப்பட்டுள்ளன. அதில் அவர்களின்முகவரிகளும்இனங்காணப்பட்டுள்ளன.

இவ்வாறவணர்களுக்குஎதிராகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது, இவற்றைத் தடுக்கமுடியும்என்று நாங்கள்நம்புகின்றோம். என்று மேலும்தெரிவித்தார். (110)

# காணிப் பிணக்கு முறைப்பாடுகளை கோரியுள்ள காணி நடுவர்சபை

வவனியா,டிசெ.19

காணிப்பிணக்குகள்தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாக, வவுனியாமாவட்ட சிறப்பு காணி நடுவர் சபைத் தவிசாளர் இரட்ணசிங்கம்நவரட்ணம் தெரிவித்தார்.



அவர்இதுதொடர்பில்மேலும் தெரிவித்ததாவது:

"வவுனியாமாவட்ட காணிப் பிணக்குகளுக்குவிரைவாகவும், சுமுகமாகவும் தீர்வு காணும்முகமாகநீதிஅமைச்சின் கீழ் நடுவர் சபை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட சிறப்பு காணி நடுவர்சபைகடந்தமுதலாம் திகதி முதல் செயற்படத் தொடங்கியுள்ளது.

அதனடிப்படையில் தற்போது காணிப் பிணக்குகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கமுடியும். பெற்றுக் கொள்ளப்படும் பிணக்குகள் தொடர்பில்விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ''காணிப் பிணக்குகளை நேரடியாக அல்லது தபாலில் இ.நவரட்ணம், தவிசாளர், சிறப்பு காணி நடுவர்சபை, இல 384/1, மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்'' எனவும் அவர்மேலும்தெரிவித்தார். (110)



# மத நல்லிணக்க கண்காட்சி

மன்னார்,டிசெ.19

மன்னார்கறிற்றாஸ்வாழ்வுதயம்நிறுவனத்தின் ஏற்பாட்டில் மத ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மதங்கள் மூலம் நல்லிணக்கம்எனும்தொனிப்பொருளில் தயார்படுத்தப்பட்ட கண்காட்சிநடைபெறுகிறது.

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலமாக மத ரீதியானமுரண்பாடுகள்அதிகரித்து வருகின்றமை, மதச் சின்னங்கள் உடைக்கப்படுகின்றமை தொடர்பான விடயங்கள்மத ரீதியான குழப்ப நிலைகளைஏற்படுத்தாமல், மக்கள் மத்தியில் புரிந்துணர்வைஏற்படுத்தும்நோக்கில்குறித்தகண்காட்சி இடம் பெற்று வருகிறது.

வாழ்வுதய நிறுவனத்தின் இலக்குக் கிராமங்களான அளவக்கை, செம்மண்தீவு. வட்டக்கண்டல். ஆண்டாங்குளம். அடம்பன் ஆகிய கிராமங்களின் இளையோரால் மத நல்லிணக்கத்தையும் இன ஐக்கியத்தையும் வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட ஆக்கங்கள், சித்திரங்கள், வேலைப்பாடுகள் அடங்கிய ஆக்கப் பொருட்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. (60)

# வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நாளிலேயே நிறைவேற்றப்பட்ட வரவு–செலவுத்திட்டம்

கிளிநொச்சி,டிசெ.19

பூநகரிப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் சமர்பிக்கப்பட்ட நேற்றைய தினமே வாக்கெடுப்புக்கும் விடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு ஜனநாயக மரபை மீறிய செயற்பாடு என எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர்அ.ஐயம்பிள்ளையிடம்கேட்டபோது "சபையில் பிரேரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை முதலில்வரவேற்றவர் எதிர்த்தரப்பைச்சேர்ந்தநா.ரவிகரன்,பின்னர்வெளியே சென்று ஆலோசித்துவிட்டு வருகிறோம் எனக்கூறிவிட்டு வெளியேறியவர்கள் திடீரெனவந்துதாம்எதிர்ப்பதாகத்தெரிவித்தனர். சபையில் ஏற்கனவே இரண்டு தடவைகள் பாதீடு சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இன்று (நேற்று) நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரண்டு தடவை பாதீடு தயாரிக்கும் பணியிலும் எதிர்த்தரப்பைச்சேர்ந்தவர்கள் பங்கெடுத்து பாதீட்டை தயாரித்தனர் எனவும்,தற்போது குழப்பங்களை ஏற்படுத்தவே இவ்வாறு நடந்து கொள்கின்றனர்'' எனவும் குறிப்பிட்டார்.

ஒருசபையின்பாதீடுதயாரிக்கப்பட்டுஅதுமக்கள்பார்வைக்குகாட்சியப்படுத்தப்பட்டு,பொது மக்களின் கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்படல் வேண்டும், எனவும் எதிர்தரப்பு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சமர்பிக்கப்பட்டுள்ள பாதீடு ஆளும் தரப்பு உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.க உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்து நிறைவேற்றப்பட்டுள்ளது. (214)



## மிருக வதைக்கு எதிராக ஆடை களைந்துப் போராட்டம்


பார்சிலோனா.டிசெ.19

ஸ்பெய்னில் உள்ள பார்சிலோனா நகரின் சந்தைத் தொகுதி ஒன்றின் முன்னால் கூடியவர்கள் தமது ஆடைகள் அனைத்தையும் களைந்து முன்னாள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மிருக வதைக்கு எதிராக நடந்த இந்தப் போராட்டத்தில் ஏராளமான பெண்கள் கலந்துகொண்டனர். அவர்கள் தங்கள் உடலில் குருதியைப் போல் சிவப்பு வர்ணத்தைப் பூசிக்கொண்டு நிர்வாணமாக வீதியில் படுத்துப் போராட்டத்தில்ஈடுபட்டனர். மனிதர்களின் தேவைகளுக்காகமிருகங்கள் கொல்லப்பட்டு அவற்றின் உரோமம் மற்றும் தோல் போன்றவற்றை எடுப்பதற்கு எதிராகவே இந்த நிர்வாணப் போராட்டம் நடத்தப்பட்டது. 'ஒரு மனிதனுக்கு மேலாடை தயாரிப்பதற்கு எத்தனை கொலைகள்' என்ற பதாகைகளைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வைத்திருந்தனர். ஐரோப்பிய நாடுகளில் தோல், மற்றும் உரோமங்களைப் பெறும் நோக்கில் ஒரு வருடத்தில்32மில்லியன்மிருகங்கள் கொல்லப்படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

# உலகப்போருடன் ராணுவமற்றிருந்த ஜப்பான் போர்த்தளபாடங்களைவாங்கிக் குவிக்கிறது

டோக்கியோ, டிசெ.19

**சீனாவுக்கும்– ரஷ்யாவுக்கும்எதிராகப்போர்க்கொடிதூக்கியுள்ள அமெரிக்காவுக்கு உதவும் முகமாக ஜப்பான் போர்த் தளபாடங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுகிறது. இந்தப் போர்த் தளவாடங்களில் போர் விமானங்கள், கண்காணிப்புக் கருவிகள் நீண்டதூர ஏவுகணைகள் போன்றவை அடங்குகின்றன.**



ஜப்பான் இராணுவ ரீதியில் தங்களைப் பலப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கைகளாகவே இந்தத் தளவாடக் கொள்வனவு இடம்பெறுகிறது. பொருளாதாரத்தில் இரண்டாம் நிலையில் உள்ள சீனா ஜப்பானைக் கண்காணிக்கும் முகமாக ஜப்பான் கடலில் தன்னுடைய விமான மற்றும் கப்பல்களைநடமாடவிட்டுள்ளது. அத்துடன் வட கொரியாவும் தங்களின் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைத் தயாரிப்புக் களைமுன்னோக்கிக்கொண்டுசெல்கிறது. அமெரிக்காவுக்கு எதிராகப் போர்க்கொடிதூக்கியுள்ளவடகொரியா ஜப்பானையும் அச்சுறுத்துகிறது. ஜப்பான்தன்னிடம் ஏற்கனவே இருக்கும் 42 ஜெட் விமானங்களுக்கு மேலதிகமாக 45போர்விமானங்களை 5வருடங்களில் கொள்முதல் செய்துள்ளது.

இதற்கு ஏற்ப இரண்டு விமானம் தாங்கிக் கப்பல்களையும் திருத்தி அமைப்பதற்கு ஜப்பான் முடிவு செய்துள்ளது. ஜப்பானின்இந்தநடவடிக்கைகளுக்கு உதவியாக அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும்ஜப்பான் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரியை அமெரிக்கஅதிபர்ட்ரம்ப்நீக்கியுள்ளார்.

ஜப்பான்தனது உள்ளூர் உற்பத்திவருமானத்தின் 1 வீதத்தை மட்டுமே பாதுகாப்புநடவடிக்கைகளுக்காகச்செலவிடுகிறது. உலகப்போரின்பின்னர் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்புக்கு அமைய ஜப்பானின் இராணுவக் கட்டமைப்பு இல்லாமலாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டன் தலைமை அமைச்சர் மீது மீண்டும் நம்பிக்கை இல்லாத்தீர்மானம்

லண்டன்.டிசெ.19



பிரெக்சிட்விவகாரத்தில்பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசாமேவுக்குஎதிராகஅந்த நாட்டின் எதிர்க் கட்சி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் அங்கம் வகித்து வருகிறது. பிரிட்டனின் தனித் தன்மையைக் காப்பாற்றும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும்என்றகோரிக்கைமக்கள்மத்தியில்எழுந்தது. ஐரோப்பியஒன்றியத்தில்இருந்துவெளியேற வேண்டும் என்று இது சம்பந்தமான வாக்கெடுப்பில் மக்கள் வாக்களித்தார்கள். வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக தெரசா மே மீது அதிருப்தி நிலவி வருகிறது. அவரின் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் உறுப்பினர்களே அவர் மீது அதிருப்தி தெரிவித்தனர். எனவே அவருக்கு எதிராக கடந்த வாரம் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்கொண்டுவந்தனர். அந்தத்தீர்மானம் தோல்வி அடைந்தது. இப்போது எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி தெரசா மே மீது நாடாளுமன்றில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம்கொண்டுவந்துள்ளது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தஎதிர்க்கட்சித் தலைவர் ஜெரிமி கார்பின் கூறும்போது, தெரசா மே நாட்டு நலனுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். எனவே அவர் பதவியில் நீடிக்கும் தகுதியை இழக்கிறார். இதனால் தான் அவர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்துள்ளோம். அனைத்து உறுப்பினர்களும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் எனறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை650. தெரசாமேவின்கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 317 உறுப்பினர்களும் , எதிர்க்கட்சியானதொழிலாளர்கட்சிக்கு257 உறுப்பினர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நேபாளத்தின் முன்னாள் தலைமை அமைச்சர் சாவு

காத்மண்டு.டிசெ.19



நேபாளத்தின்தலைமைஅமைச்சராக இரண்டு முறை பதவி வகித்த துல்சிகிரி(வயது93) உடல்நலக்குறைவால் நேற்றுக் காலமானார். 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1965ஆம் ஆண்டு மற்றும் 1975ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இரண்டு தடவைகள் பதவி வகித்தவர் துல்சி கிரி. 1926ஆம் ஆண்டில் பிறந்த இவர் அந்த நாட்டின் நேபாளி காங்கிரஸ் கட்சியில் இணைந்து தனது அரசியல் பணியைத் தொடங்கியவர். நேபாளத்தின் மன்னராகப் பிரேந்திரா ஆட்சி செய்த காலக்கட்டத்தில் நாட்டைவிட்டு வெளியேறி இலங்கையில் அரசியல் தஞ்சம் அடைந்து, வாழ்ந்து வந்தார். பின்னர், மன்னர் கியானேந்திர ஷா ஆட்சிக்காலத்தில் 2005ஆம் ஆண்டு அவர் தாய் நாட்டுக்குத் திரும்பினார். அப்போது, தலைமை அமைச்சர் பதவிக்கு நிகராக கருதப்படும் நேபாள அமைச்சரவையின் துணைத் தலைவர் பதவியில் நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், சில ஆண்டுகளாக நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் தனது 93ஆவது வயதில் சாவடைந்துள்ளார்.

### ஜமால் கொலை விவகாரம்

## அமெ.தீர்மானம்குறித்து சவூதி அரேபியா கருத்து

றியாத்,டிசெ.19






சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர்ஜமால்கொலை விவகாரம் தொடர்பாக அமெரிக்கநாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட கண்டனத்தீர்மானத்தைச் சவூதி அரேபியா விமர்சித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை அமெரிக்கசெனட்சபையில்ஜமாலின் கொலைக்குக் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும்ஜமாலின் கொலைக்குக் காரணமான சவூதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எதிராக ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக்கட்சிஉறுப்பினர்கள் சார்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அமெரிக்காவின் கண்டனத் தீர்மானத்தைச் சவூதி விமர்சித்துள்ளது.

இதுகுறித்துச்சவூதிவெளியிட்டஅறிக்கையில், 'ஜமால் கொலை வழக்கில் சவூதிக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று சவூதி முன்னரே கூறி இருந்தது. அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல் விவாதங்களில்ஜமாலின்கொலை விவகாரம் பேசப்படவில்லை என்று கருதுகிறோம். இதன்காரணமாகஅமெரிக்கா–சவூதி இடையே பாதிப்பு ஏதும் இருக்காது என்று நம்புகிறோம்' என்றுதெரிவித்தது.

**பின்னணி**

சவூதி அரசையும் அதன் இளவரசர் முகமது பின் சல்மானையும் கடுமையாக விமர்சித்தவர்பத்திரிகையாளர்ஜமால். இவர் ஒக்ரோபர 2ஆம்திகதி இஸ்தான்புல்லிலுள்ள சவூதித்தூதரகத்தில்கொல்லப்பட்டார். இவருக்கும்சவூதியைச்சேர்ந்த15பேருக்கும்ஏற்பட்ட மோதலில்ஜமால்இறந்ததாகச்சவூதிகூறியது. இது வேண்டுமென்றே செய்யப்பட்ட படுகொலை, என்றும் இந்தக் கொலையில் இளவசர் முகமது பின் சல்மானுக்குத் தொடர்பு உள்ளதாகவும் கூறி ஆதாரங்களை வெளியிட்டதுடன் குற்றவாளிகளைத் தங்களிடம் ஒப்படைக்குமாறுதுருக்கிகுற்றம்சாட்டியது. ஆனால்சவூதி இந்தக் குற்றச்சாட்டை மறுத்தது. இந்தக் கொலை வழக்கில் சவூதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லைஎன்றுசவூதிகூறியது.



# நடைமுறைக்கு வந்த சில நிமிடங்களில் குழம்பிப்போனது ஏமனில் போர் நிறுத்தம்

சனா.டிசெ.19


**உள்நாட்டுப் போர் கடுமையாக நடந்துவரும் ஏமனில், போர் நிறுத்தம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. அந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் சில நிமிடங்களிலே மீறப்பட்டு ஆங்காங்கே மோதல்கள் ஆரம்பித்துள்ளன.**

ஏமனில் உள்நாட்டுப் போர் கடுமையாக நடந்து வருகிறது. அதற்குத் தற்காலிக முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் நேற்று முன்தினம் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. செவ்வாய்க் கிழமை நள்ளிரவு முதல் ஏமானின் ஹொடைட்டா மாகாணம் மற்றும் துறைமுக நகரமான ஹொடைடாவில் போர் நிறுத்தம் செய்வது என்று ஹவூத்திப் போராளிகளும் அரச தரப்பும் உடன்பாட்டுக்கு வந்திருந்தன.

ஹொடைடா துறைமுகம் நிவாரணப் பொருள்கள் செல்வதற்கான நுழைவாயிலாக இருக்கிற முக்கியத்துவம் வாய்ந்த நகரம். ஆனால், போர் நிறுத்தம் தொடங்கிய உடனேயே இந்த நகரில் ஆங்காங்கே மோதல்கள் நிகழ்ந்துள்ளன. கிழக்கு ஹொடைடாவில் அரச படைகள் மீது போராளிகள் ஷெல் வீச்சில் ஈடுபட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த வியாழக்கிழமை சுவீடனில் ஐ.நா. ஏற்பாடு செய்த பேச்சுக்களில் இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டன. நான்கு ஆண்டுகளாக நடந்து வரும் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தொடக்கமாக இது இருக்கும் என்று கருதப்பட்டது. ஆனால், ஆங்காங்கே நடந்து வந்த தாக்குதல்களாலும், மோதல்களாலும் அது குழம்பிப்போயுள்ளது.

**பின்னணி**

ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்திப் போராளிகளுக்கும் இடையே 2015ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெறுகிறது. அதிபர் மன்சூர் ஹைதிக்குச் சவூதி அரேபியாவும் ஹவுத்திப் போராளிகளுக்கு ஈரானும் ஆதரவு அளிக்கின்றன. தலைநகர் சனா உட்பட அதிக பகுதி ஹவுத்திப் போராளிகளின் வசம் உள்ளது.



## சிறப்புத் தேவையுடைய மாணவிக்கு உதவிய நாய்க்குப் பட்டமளிப்பு

கரோலினா.டிசெ.19

அமெரிக்காவில்சிறப்புத்தேவையுடையமாணவிஒருவர் வளர்க்கும்நாய்அவருக்குப்பல்வேறுஉதவிகளைச்செய்கிறது. அவர் கற்றுப் பட்டம் பெறுவதற்குத் துணையாக இருந்தமைக்காக அந்த நாய்க்கும் பல்கலைக்கழகம் பட்டம் வழங்கியுள்ளது.

பிரிட்னி ஹாலே என்ற மாணவி வளர்க்கும் கிரிவ்பின் என்கிற நாய்க்குத்தான் கிளார்க்ஸன் பல்கலைக்கழகம் குறித்த பட்டத்தை வழங்கியுள்ளது. வடக்குக் கரோலினா நகரைச்சேர்ந்தபிரிட்னிஹாலே. அங்குள்ளகிளார்க்ஸன் பல்கலைக்கழகத்தில் குறித்த ஒரு பிரிவில் முதுநிலை பட்டப்படிப்பு முடித்தவர்.

அவருக்கு முதுகுத்தண்டுவடப் பிரச்சினை இருப்பதால், எழுந்து நடக்க இயலாது. அவர் கடந்த 4 ஆண்டுகளாக 'கோல்டன் ரெட்ரீவர்' இன நாய் ஒன்றை வளர்த்து வருகிறார். அதற்கு'கிரிவ்பின்'என்றுபெயரிட்டுள்ளார். அதற்குப் பல்வேறு கட்டளைகளைக் சொல்லிக்கொடுக்கிறார்.

இதனால்அவர்சொல்வதைநாய்கேட்டு, கீழ்ப்படிந்துநடக்கிறது. சின்ன, சின்னவேலைகள்என அவருக்கு உதவும் வகையில் பலவற்றைச் செய்கிறது. இந்தக் காரணங்களால் கிரிவ்பினுக்கும் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

## "ஐ.எஸ். அமைப்பினரை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும்"

பக்தாத்.டிசெ.19



ஐ.எஸ். அமைப்பினரை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும் என்று அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நாடியா முராத் தெரிவித்தார்.

"ஐ.எஸ். அமைப்பின் பிடியில் சிக்கி உள்ள பெண்களை மீட்பதற்கான முயற்சியில் எவருமே ஈடுபடவில்லை. ஈராக்கிலும் சரி, பன்னாட்டு அமைப்பிலும் சரி யாரும் அந்தப் பெண்களைக் காப்பாற்ற வரவில்லை. ஈராக்கில் பெண்கள் ஐ.எஸ். அமைப்பினரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள். ஐ.எஸ். அமைப்பினர் பெண்களைப் பாலியல் வன்புணர்வு செய்யும் விடயம் வெளியில் பேசப்படக் கூடாது என்று நினைக்கிறார்கள். ஆனால் நான் என் முடிவில் உறுதியாக இருக்கிறேன். நான் அவர்கள் மேற்கொள்கின்ற பாலியல் வன்புணர்வு குறித்து உரக்கப் பேசுவேன். ஐ.எஸ். குற்றவாளிகளை நீதிக்கு முன்னால் கொண்டுவர வேண்டும். என்றார்.

குர்து இன மனித உரிமை ஆர்வலரான நாடியா முராத் சிறுபான்மையினரின் சமூகமான யாசிதி இனத்தைச் சேர்ந்தவர். ஈராக்கில் 2014 ஆம் ஆண்டு முதல் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்த ஐ.எஸ். அமைப்பால் தனது குடும்பத்தை இழந்து பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாவனர். பின்னர் பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு ஐஎஸ் அமைப்பிடமிருந்து தப்பி வந்து தற்போது ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள பெண்களின் நலனுக்காகக் குரல் கொடுத்து வருகிறார்.

# பிரான்ஸ் 'மஞ்சள் அங்கிப்' போராட்டம் அதிபர் மக்ரோன் சந்திக்கும் சவால்கள் பல

பாரீஸ், டிசெ.19



கடந்த வாரங்களாகவே பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மட்டுமல்லாமல் எங்கு பார்த்தாலும் போராட்டம், கலவரம் தான். இது அந்த நாட்டின் அதிபர் எம்மானு வேல் மக்ரோனுக்குப் பெரும் தலை வலியாக உருவெடுத்துள்ளது. டீசல் விலை உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய போராட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நினைக்கும் மக்ரோனின் அரசியல் கொள்கைகளுக்கு எதிரான போராட்டமாக மாறியது. கடந்த ஓராண்டில் பெட்ரோல், டீசல் விலைகள் 20 சதவீதத்துக்கு மேல் அதிகரித்த பிறகும், மீண்டும் விலையேற்றமா என எதிர்த்து தான் மக்கள் மஞ்சளாடையை அணிந்து போராட்டத்தில் குதித்தனர். பின்னர் இந்தப் போராட்டம் பெரும் பணக்காரர்களுக்கு



பிரான்ஸ் அரசு அளிக்கும் வரிச் சலுகைக்கும் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயத்துக்கும் எதிராகத் திரும்பியது. இந்தக் கலவரத்தில் 5 பேர் சாவடைந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

**தன்னிச்சையாகப் போராட்டம்**

எவர் தலைமையிலும் இல்லாமல் எந்தக் கட்சியின் ஆதரவும் இல்லாமல் தானாகத் தொடங்கியது தான் இந்தப் போராட்டம். நாடு முழுவதும் காட்டுத் தீயாகப் பரவியது. அடுத்த மாதம் முதல் அறிமுகம் செய்யத் திட்டமிட்டிருந்த சில விலையேற்ற நடவடிக்கைகளை அதிபர் மக்ரோன் திரும்பப் பெற்ற பிறகும் அது தணியவில்லை. போராட்டமும், வன்முறையும் மகிழுந்தை எரிப்பதும் தொடர்ந்தன. இடையில் வெளியான மக்ரோனின் அறிவிப்பும் போராட்டக்காரர்களைச் சமாதானப் படுத்தவில்லை.

**அதிகரித்த வரிவிதிப்புகள்**

பிரான்ஸில் அதிகரித்த வரி விதிப்பு என்பது எரிபொருளோடு நின்றுவிடவில்லை. சுகாதாரத் துறை உள்ளிட்ட பொதுத் துறை ஊழியர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதாகவும் போராட்டக் காரர்கள் குறிப்பிட்டனர். அவர்களுக்கு ஆதரவாகப் போராட்டக் களத்தில் குதித்த மாணவர்கள், கல்வித் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டுமென கோஷம் எழுப்பினர். போராட்டத்தால் ஏற்பட்ட இழப்பையும் குறைந்தபட்ச ஊதிய அதிகரிப்பு உள்ளிட்ட புதிய சலுகைகளால் அரசுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் வரி செலுத்தும் பொதுமக்கள் தான் தாங்க வேண்டியிருக்கும். இல்லாவிட்டால், கிராமப்புறங்களில் அளிக்கப்படும் பொது சேவைகளை அரசு குறைக்க வேண்டியிருக்கும். இந்த விடயத்தில் அதிபர் மக்ரோனை இடதுசாரிகளும் வலதுசாரிகளும் விமர்சனம் செய்து வருகின்றனர். இந்த நெருக்கடியால் மக்ரோன் அரசு ஆடிப்போயிருக்கிறது. மக்ரோனுககான ஆதரவு 25 சதவீதத்துக்குள் தான் இருக்கிறது.

**உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம்.**

பிரான்ஸின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவும் ரஷ்யாவும் தலையிடுவதாக எழுந்த குற்றச்சாட்டுகள் கவனம் பெறவில்லை. இதற்கு, எது எங்கு நடந்தாலும் அதற்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் செய்யும் சதி தான் காரணம் எனக் கூறும் வழக்கம் அதிகரித்திருப்பதுதான் காரணம். பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தால் பிரான்ஸில் எதிர்ப்பு கிளம்பி யிருக்கிறது. எங்கு பார்த்தாலும் போராட்டம் வன்முறை என்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் கீச்சகப் பதிவுக்குப் பிரான்ஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. எங்கள் விடயத்தில் தலையிட வேண்டாம் எனப் பிரான்ஸ் கூறியுள்ளது.

**நன்றி தீ ஹிந்து**



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒரு சண்டை முடிய மற்றது தொடக்கம்

ஒருவழியாக இலங்கையின் தலைமை அமைச்சர் யார்? என்கிற பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் யார்? என்கிற புதுக்குழப்பம் கிளம்பியிருக்கிறது. பதவியில் இருந்து ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு அரசு ஐப்பசி 26ஆம் நாளுடன் முடிவுக்கு வந்தது. தனித்து ஆட்சியைக் கைப்பற்றலாம் என்கிற கனவுடன் களத்தில் இறங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முயற்சி கனவாகவே போய்விட்டதால் இப்போது ஐக்கிய தேசிய முன்னணி தனித்து ஆட்சியை அமைக்கின்றது. இந்த அரசியல் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்துகொண்டாலும் கூட அது கட்சித் தாவலின் கீழே பார்க்கப்படுமேயன்றி கூட்டு அரசின் செயற்பாடல்ல என்பதில் அரச தலைவர் தெளிவாக உள்ளார். எனவே தற்போது நடப்பது ஐக்கிய தேசிய முன்னணியின் தனி ஆட்சி. இதனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே நாடாளுமன்றத்தில் அடுத்தபடியாக அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கக்கூடிய கட்சி எனவே அதுவே எதிர்க்கட்சியாக அமர்ந்திருக்கிறது.

இந்த அரசியல் நிலமை எதிர்பார்க்கப்பட்டபடியே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் பதவிக்கு ஆபத்தைத் தேடிக் கொண்டு வந்துள்ளது. நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கோரிக்கையின் பேரில் மகிந்தராஜபக்சவுக்கே செல்வதாக சபாநாயகர் அறிவித்தார். இதற்கு உடனடியாகவே ஆட்சேபனை கிளப்பப்பட்டது.


ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல அப்போது ஒரு பிரச்சினையை எழுப்பினார். மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்றப் பதவி விரைவில் பறிபோய்விடும், என்பதால் அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொடுப்பது ஏற்புடையதல்ல என்றார் அவர். மகிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாகத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார். ஆனால் அண்மையில் அவர் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து விலகித் தாமரைமொட்டைச் சின்னமாகக் கொண்ட பொது மக்கள் முன்னிணியில் இணைந்து கொண்டிருந்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன, எனவே அரசமைப்பின்படி மகிந்த நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி யில் இருந்து விலகி விட்டார் என்பதால் ஒரு மாத காலத்திற்குள் அவரது பதவி பறிக்கப்பட்டுவிடும், எனவே அவருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பது நியாயமானது அல்ல என்று தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அந்தக் கருத்தை வழிமொழிந்தார். அத்தோடு மற்றொரு காரணத்தையும் அவர் முன்வைத்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவரான மைத்திரிபால சிறிசேனதான் தற்போதைய ஆட்சியின் தலைவரும்கூட இந்த அரசின் அமைச்சுப் பதவி மூன்றை அவர் தன் வசம் வைத்திருக்கிறார். எனவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரே தற்போதைய ஆட்சியின் தலைவராகவும் இருப்பதால் அதே கட்சியைச் சேர்ந்தவர் எதிர்க் கட்சித் தலைவராகவும் இருக்க முடியாது என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ச சுதந்திரக் கட்சியில் இருந்து நீங்கினால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்தும் தானாகவே விலகியவராகக் கருதப்படுவார், இந்த விடயத்தில் கட்சியின் யாப்புகள் என்ன சொல்கின்றன என்று பார்த்து நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு தெரிவுக்குழுவை அமைக்கும்படியும் சுமந்திரன் கேட்டுக்கொண்டார். அதற்கான தீர்மான வரைவு இன்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரச்சினையினால் மகிந்த எதிர்க்கட்சித் தலைவராவது உடனடியாக நிறைவேறப்போவதில்லை. சம்பந்தரின் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்பதைப் போன்று இப்போதைக்கு மகிந்த எதிர்க் கட்சித் தலைவராகவும் பதவியேற்கப்போவதில்லை.

**இனி இந்தப் பிரச்சினை முடிவடைந்து நாடாளுமன்றம் இயல்பு நிலைக்குத் திரும்புவது எப்போது என்று மக்கள் காத்திருக்க வேண்டியதுதான்.**



# நம்பிக்கை இழக்க வைத்த துரோகம்!

செ.தமிழ்நம்பி


வள்ளுவர் தீமை தீ போன்று தீங்கிழைக்கும் என்றதுடன் தீமை தீயைவிட அச்சம் தரக்கூடியது என்றும் குறிப்பிட்டுள்ளார். துரோகமும் அதைப் போன்றதுதான். தீ பற்றியதை மட்டுமே அழிக்கும். ஆனால் தீமையாகிய 'துரோகம்' கண்ணில் காண்பதையெல்லாம் அழித்துவிடும். அதனால்தான், 'துரோகம் செய்ய அஞ்சவேண்டும்' என்று ஆன்றோர் குறிப்பிடுகின்றனர். ஒருமுறை துரோகத்துக்குத் துணை போய்விட்டால், பின்னர் அப்படியே அதில் தொடர்ந்து துணிந்து இறங்கிடுவார்கள்.

இங்கு நாம் நேர்மையாக இருந்து எதைச் சாதித்தோம்? என்று நினைத்துக் கொண்டு துரோகமே வெற்றிபெறத் துணையானது என்று கருதி அதைப் பின் தொடருபவர்கள் பலர். அதிலும் பலர் தங்களுக்கு உதவி செய்தவர்களையே துரோகம் செய்து அழிப்பார்கள். இதுதான் கொடுமையிலும் கொடுமை.

தன்னிடம் உதவி பெற்றவன் தனக்கே துரோகம் செய்து தன்னுடைய அழிவுக்கும் காரணமாக இருக்கிறான் என்பது தெரிந்தும் அதைப் பொறுத்துக் கொண்டு, அதற்காக நன்றியில்லாமல் நடந்து கொண்ட அவனுக்கு எந்தவிதமான பழியும் வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தியாகம் செய்தவர்களும் இந்தப் பூமியில் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள். அதுவிதமே அவர்கள் செய்வது துரோகம் என்றாலும் அதைச் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டு அழிவைத் தேடிக் கொள்ளும் புண்ணியவான்கள் பலரும் எம்மத்தியில் வலம் வருகின்றனர்.


**தமிழ் மக்கள் தியாகம் செய்தவர்கள்!**

உண்மையில் மேற்சொன்ன 'தியாகம் செய்தவர்கள்' என்ற வரையறைக்கு உரித்துடையவர்களாக தமிழ்மக்களே விளங்குகின்றனர். ஏனெனில், "கடந்து போன ஏழு தசாப்தகால உரிமை மீட்பு போராட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்குப் பொருத்தமான, ஏற்புடைய தீர்வைத் தருவதற்குச் சிங்களப் பேரினவாத அரசும், அதில் அங்கத்துவம் பெறுகின்ற பெரும்பான்மைச் சமூகம் சார்ந்த கட்சிகளும் இடம்தரவில்லை. மாறாக அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும், இனப்படுகொலையையும் செய்து மனித உரிமை மீறல்களை மேற்கொண்டனர். பன்னாடுகளின் உதவிக்கரம் கொண்டு மிகப் பெரிய உயிரழிவுகளைத் தமிழர்களுக்குப் பரிசளித்து வெற்றிக் கொண்டாட்டங்களில் திழைத்தனர். இன்னமும்



இங்கு நாம் நேர்மையாக இருந்து எதைச் சாதித்தோம்? என்று நினைத்துக் கொண்டு துரோகமே வெற்றிபெறத் துணையானது என்று கருதி அதைப் பின் தொடருபவர்கள் பலர். அதிலும் பலர் தங்களுக்கு உதவி செய்தவர்களையே துரோகம் செய்து அழிப்பார்கள். இதுதான் கொடுமையிலும் கொடுமை.

தமிழர்களுக்கு உரித்தானவற்றை தருவதற்கு மனமின்றி இருக்கின்றனர்." என்ற விடயங்களை தமிழ் மக்கள் அறிந்துகொண்டிருந்தும், ஜனநாயகத்தின் மீது பற்றுறுதிகொண்டு அவ்வப்போது தலைகாட்டுகின்ற 'தேர்தல்' சித்தாந்தங்களுக்கு தலைவணங்குகின்றனர். தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையின் உறுதிநிலையோடு பேராதரவை வழங்க முன்வருகின்றனர். கடந்த 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் இதுவிதமே 'நல்லாட்சி' என்ற கூட்டுக்கு பேராதரவைத் தந்தனர்.




**அழிவைத் தேடிக் கொள்ளும் புண்ணியவான்களாக தமிழர் பிரதிநிதித்துவங்கள்!**

இதிலிருந்து வேறுபட்டு 'அழிவைத் தேடிக் கொள்ளும் புண்ணியவான்' களாகத் தமிழர் பிரதிநிதித்துவங்கள் இருந்துவருவது கண்கூடு. ஏனெனில் ஆட்சி பீடத்தில் குழறுபடிகளும் குழப்பங்களும் அவ்வப்போது தலைகாட்டுகின்ற போது, மேலோட்டமான கண்டனங்களையும் அழுத்தங்களையும் பிரயோகிக்கின்றனர். தாம் சார்ந்துள்ள இனக்குழுமத்துக்கு எத்தகைய பரிகாரங்களை செய்ய வேண்டும் என்பது குறித்து ஆத்மார்த்தமான ஈடுபாடு இன்றிப் பயணிக்கின்றனர். ஒவ்வோர் சந்தர்ப்பங்களிலும் தமக்கு இழைக்கப்படுவது துரோகம் என்று தெரிந்திருந்தும் அதைச் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொள்கின்றனர். அரசுக்கு ஆதரவுக் கரங்களை நீட்டி ஆரத் தழுவிக்கொள்கின்றனர். இந்தக் கைங்கரியங்களுள் தமிழர்களுக்கான தீர்வு என்ற சீட்டு பயனற்றுக் கசங்கிப்போகிறது. பொருள் கோடலோடு அழிந்தும் அமிழ்ந்தும் போகிறது. இவை குறித்து யாரும் மறுபட்ட கருத்தைக் கொண்டிருக்க முடியாது. இதுவே யதார்த்தம்!

**நம்பிக்கையீனமான அதிகாரப் பீடம்!**

இந்த சந்தர்ப்பத்திலே ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று, 'தீ பற்றியதை மட்டுமே அழிக்கும். ஆனால் தீமையாகிய 'துரோகம்' கண்ணில் காண்பதையெல்லாம் அழித்துவிடும்.' என்ற உண்மையை தற்போது மீண்டுமொருமுறை உணர்ந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் அமைந்துள்ளது. ஆம், 'ஒக்ரோபர் சூழ்ச்சி'யின் அடையாளம் என்று கருதப்படுகின்ற 'மைத்திரி - மகிந்த' கூட்டின் 50 நாள் பயணம் முடிவுக்கு வந்ததன் பிற்பாடு மீண்டும் தலைமை அமைச்சர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்டுள்ளார். செய்வதைச் சொல்வேன்! சொன்னதைச் செய்வேன்! என்ற பாணியில் "ஒன்றிணைந்த இலங்கையில் அனைவருக்கும் நீதியான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினருடன் பேச்சுக்கள் இடம்பெறும். நிறைவேற்று அரசதலைவர் முறையை இல்லாதொழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மக்களின் கருத்துக்களை செவிமடுத்து அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்போம்." என்று சூளுரைத்துள்ளார்.

> உண்மையில் மேற்சொன்ன 'தியாகம் செய்தவர்கள்' என்ற வரையறைக்கு உரித்துடையவர்களாக தமிழ்மக்களே விளங்குகின்றனர். ஏனெனில், "கடந்து போன ஏழு தசாப்தகால உரிமை மீட்பு போராட்டத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்குப் பொருத்தமான, ஏற்புடைய தீர்வைத் தருவதற்குச் சிங்களப் பேரினவாத அரசும், அதில் அங்கத்துவம் பெறுகின்ற பெரும்பான்மைச் சமூகம் சார்ந்த கட்சிகளும் இடம்தரவில்லை. மாறாக அடக்குமுறைகளையும், அட்டூழியங்களையும், இனப்படுகொலையையும் செய்து மனித உரிமை மீறல்களை மேற்கொண்டனர்.



**'துரோக'த்தில் வீழ்ந்த துரோகத்தின் அடையாளம் 'மைத்திரி'**

இதற்கு முற்றிலுமாக மாறுபட்ட விதத்தில் மைத்திரிபால சிறிசேன இனவாதக் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக, மனித நேயத்திற்கு ஆட்பட்டு தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் நிலையில் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்களை அல்லது தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் அதீத கரிசனை கொண்டு 'அடிக்கு அடி, உதைக்கு உதை' என்ற சித்தாந்தத்தின் வழி, தியாகத்தின் உன்னத மாந்தர்களாக அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக போர் புரிந்த துடிப்பும் வேகமும் உடைய தமிழ் இளைஞர்களை அவமரியாதை செய்யும் விதமாகப் பேசியுள்ளார். மிலேச்சத்தனமான போர் குற்றங்களை செய்த இலங்கை இராணுவப் படைகளை பன்னாடுகள் தண்டிக்க முடியாது என்றும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால் இலங்கை இராணுவத்தையும் விடுவிக்க வேண்டும் என்றும் கூறி இறுமாப்போடு கொந்தளித்திருக்கிறார்.

இந்த மனக்கிலோசமும் நடத்தைக்கோலமும் எங்கிருந்து தோற்றம் கொண்டது என்பது குறித்து இவ்விடம் சிந்தித்தால், ஒக்ரோபர் 26 ஆம் திகதி நள்ளிரவில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் தலைமைச் சூத்திரதாரியான மகிந்த ராஜபக்சவிடம் இருந்து தொற்றிக் கொண்டது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

உண்மையைக் கூறுவதாயின், நிறைவேற்று அதிகாரத்தையும், அதிகாரத் திமிரையும் இராஜதந்திரமாக்கி தமிழர்களுக்கு எப்போதுமே அழிவு என்ற அறிவுரைப் பாடத்தை போதித்த மகிந்தவோடு கரம் பற்றிக் கொண்டதன் பலாபலனாகவே இந்த மாறுதல் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. தவிர மேற்சொன்னது போன்று, ஒருமுறை துரோகத்துக்குத் துணை போய்விட்டோம் அப்படியே அதில் தொடர்ந்து துணிந்து இறங்கிப் பயணித்தால் என்ன?' என்ற எண்ணவெளிப்பாட்டின் உத்வேகமாகவும் இதை நோக்க முடியும்.

**உப்பிட்டவரை உள்ளளவும் நினை!**

அத்தோடு இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பிறழ்வுகள் இனவெறியோடு சுயநலமாக கலந்து மனித உரிமைகளின் நிலையை போர்காலச்சூழலை விடவும் மேசமானதாகவும், கொடியதாகவும் மாற்றம்பெறச் செய்துவிடுமோ என்ற அச்சமும் இயல்பாகவே எழுந்து மறைகிறது. அரசின் செயல்பாட்டை அளவிடும் ஓர் அளவுகோலாக மனித உரிமைகள் இலங்கையில் கீழ்நிலைப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. எனவே, மைத்திரி என்கிற தனிமனித ஆளுமை தற்போது கண்டுகொண்டுள்ள சிந்தனை, உணர்வுகள், நடத்தை ஆகியவற்றின் ஒட்டுமொத்த விளைவும் எதிர்காலத்தில் எப்படி அமையப்போகின்றது என்பது குறித்து தமிழர் பிரதிநிதித்துவங்கள் சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதை யாரும் மறுதலித்துவிட முடியாது.

## ஆசிரியருக்கான கடிதம்

# இந்த நோய் அறிகுறிக்கு தீர்வு தருவார் யாருளர்?

மல்லாகம் சந்தியில் இருந்து மேற்காக வழி தருகின்ற சங்கானை வீதி கண்டுகொண்டுள்ள ரணங்கள் சொல்லி மாளாதவை. 'வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், அளவெட்டி அந்தோனியார் ஆலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி பிரதேச அரச மருத்துவமனை, அளவெட்டி பிரதம தபாலகம், பிரதேச கலாசார மத்தியநிலையம்' என மக்கள் நல மேம்பாடு சார் நிறுவனங்கள் அனைத்துமே இந்த வீதியின் இரு மருங்கிலும் அமைந்து அந்தரிக்கின்றன.

அளவெட்டி தொடங்கி குறிப்பாக சித்தங்கேணி, பண்டத்தரிப்பு வரையான நீண்ட தூரப் பயணங்களுக்கு வழிகாட்டி ஆரம்பம் தருகின்ற இந்த வீதி, மழை காலங்களில் குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றது. அன்றாடம் அந்த வீதி வழியாகப் பயணிப்போரை நிலைகுலையச் செய்துவிடுகிறது. மழைக்காலம் முடிவடைந்ததும் ஒப்பந்த அடிப்படையில் வீதியைச் செப்பனிட நியமிக்கப்படுகின்ற 'ஆள்கள்' வீதிக்கு ஒப்பாசாரமான கட்டமைவையே தர முயற்சிக்கின்றனர். இதனால் இந்த வீதிகள் சீரின்றி உப்பிப் பெருத்து, பெருத்த புடைப்புகளோடு காட்சி தருகின்றன.

இது குறித்துச் சிந்திக்க வேண்டிய அதிகாரத் தரப்பினரான வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் செயலின்றி மௌனம் காத்துவருகின்றனர். 'அபிவிருத்தி' என்ற செயல்முனைப்பின் கீழ் பெருவாரியான பண ஒதுக்கீடு ஆண்டு தோறும் இடம்பெற்று வருகின்ற போதும், இந்த வீதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை கவலை தரும் விடயம். எதிர்வருகின்ற ஆண்டின் தொடக்கத்திலாவது இந்த வீதிக்கு விமோசனம் கிட்டுமா? இந்த வீதிக்குப் பூரண ஆயுளை தருவதற்கு உரித்துடையவர்கள் இது குறித்து கவனம் செலுத்துவார்களா? வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் இது விடயம் தொடர்பில் உரியதரப்புக்குத் தெரியப்படுத்தி கவனமெடுத்துச் செயற்படுவாரா?

*நலன்விரும்பி*



**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# விரைவில் இயக்குநராகவுள்ளார் நயன்தாரா



தற்போது தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை நயன்தாரா, இவர் விரைவில் புதிய இயக்குநராக அவதாரம் எடுக்க இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

நயன்தாரா தமிழ் மட்டும் அல்லாது தெலுங்கிலும் முன்னணிக் கதாநாயகியாக விளங்குகிறார். முதன்மைக் கதாபாத்திரங்களில் மட்டுமல்லாது பெரிய கதாநாயகர்களுக்கு ஜோடியாகவும் நடித்து வருகிறார். தான் நடிக்கும் படங்களின் படப்பிடிப்புகளில் நயன்தாரா நடிப்பில் மட்டும் இன்றி கேமரா, எடிட்டிங் ஆகியவற்றிலும் ஆர்வம் செலுத்திவருகிறார். நயன்தாராவுக்கு விரைவில் இயக்குநர் ஆகும் எண்ணமும் இருப்பதாகக் கூறுகின்றனர். 2019 ஆம் ஆண்டு நயன்தாரா, தான் ஒப்புக்கொண்டுள்ள படங்களை எல்லாம் நடித்து முடித்த பிறகு ஒரு படத்தை இயக்கவாய்ப்பிருப்பதாகதிரையுலகவட்டாரங்களில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.


Thasim SAfran
16 hrs

ஒரு மணித்தியாலத்தில் பதவி விலகிவிடுவேன் என்று விளையாட்டாகச் சொன்னதை நீங்கள் நம்பிவிட்டீர்கள்!







ஒரே ஒரு மைத்திரிதான்! ஆனால், ஒட்டுமொத்த நாட்டுக்கும் பைத்தியம் பிடிச்சுப் போய் கிடக்கு!



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** எதிர்கால நலனில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நவீன மாற்றம் பின்பற்றுவீர்கள். இலாபம் உயரும்.

**இடபம்:** திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார அபிவிருத்தியால் புதிய சாதனை உருவாகும்.

**மிதுனம்:** உங்களின் கருத்தை குடும்பத்தினர் ஏற்கத் தயங்குவர். தொழிலில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** பகைமைக் குணம் உள்ளவர் அவமதித்துப் பேசுவர். பெருந்தன்மையுடன் விலகிச் செல்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**சிங்கம்:** இளமைக்கால இனிய நிகழ்வுகளை பேசி மகிழ்வீர்கள். நேர்த்தியுடன் பணிபுரிந்து தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். மேலதிக பணவரவு சேமிப்பாகும்.

**கன்னி:** அவசரப் பணி உருவாகி சிரமம் தரலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பிள்ளைகளின் வழியில் செலவு அதிகரிக்கும்.

**துலாம்:** சிந்தனை செயலில் புதிய மாற்றம் உருவாகும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்: தொழிலில் உற்பத்தி விற்பனை திருப்திகரமாக இருக்கும்.

**விருச்சிகம்:** சமூக நிகழ்வுகள் இனிதாக அமைந்திடும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்வால் இலாபம் கூடும்.

**தனுசு:** சமூக நிகழ்வுகள் இனிதாக அமைந்திடும். மனதில் உற்சாகம் மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை உயர்வால் லாபம் கூடும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி வந்து சேரும்.

**மகரம்:** வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்புக் கிடைக்கும். உறவினர் மூலம் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள்.

**கும்பம்:** மனதில் சங்கடம் ஏற்பட்டு மறையும். சொந்த பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை ஓரளவுக்கு இருக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழிலில் திட்டமிட்ட இலக்கை அடைய கூடுதல் அவகாசம் தேவைப்படும். அளவான பணவரவு கிடைக்கும்.

# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | 1 | 2 | | | 4 |
| 7 | | | | 4 | | | 8 | 5 |
| | | | | | 3 | | 2 | |
| 9 | | 5 | | 2 | | | 6 | |
| | | 2 | | 6 | | 7 | | |
| | 8 | | | | | 5 | | 2 |
| | 1 | | 2 | | | | | |
| 2 | 5 | | | 8 | | | | 6 |
| 8 | | | 7 | 9 | | | | 1 |

நேற்றைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 8 | 5 | 6 | 9 | 1 | 3 | 4 |
| 3 | 9 | 5 | 4 | 2 | 1 | 7 | 6 | 8 |
| 6 | 1 | 4 | 7 | 8 | 3 | 9 | 2 | 5 |
| 7 | 2 | 1 | 3 | 4 | 6 | 5 | 8 | 9 |
| 4 | 5 | 6 | 9 | 1 | 8 | 2 | 7 | 3 |
| 9 | 8 | 3 | 2 | 5 | 7 | 6 | 4 | 1 |
| 1 | 4 | 9 | 8 | 7 | 2 | 3 | 5 | 6 |
| 8 | 3 | 7 | 6 | 9 | 5 | 4 | 1 | 2 |
| 5 | 6 | 2 | 1 | 3 | 4 | 8 | 9 | 7 |

## வறுமை கொடுமை



சிந்திக்க...





வெண்பா@urs_venbaa

அதிகாலையில் எழுந்திருக்கலாமா அல்லது வேண்டாமா என்பதே பனிப்போர்!

ரணிலுக்குச் சிம்ம சொப்பனமா இருந்த நான், இன்றைக்கு சிரிசேனத்தனமா நிக்கிறேன் என்றால்,



அதற்கு யார் காரணம்? இந்த மூதேவி தான் காரணம்!

அடி மேல் அடி விழுந்தால் புத்தி வருகிறதோ இல்லையோ, வலி உணர்வு பழகிவிடும்.

க.சேதுராமன்

# பெருந்தீனிக்காரன்!

## நோய் குடிகொண்ட மனிதம்

வள்ளுவர் கூறும் 'மருந்தில்லா மருத்துவம்' குறித்த பார்வை



நோயின்றி வாழவே அனைவரும் விரும்புவர். எப்படித்தான் முன்னெச்சரிக்கையுடன் வாழ்ந்தாலும் எவ்வாறேனும் நோய் வந்துவிடுகின்றது. நோய் வந்தால் மருந்து உட்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நோய் தீரும். ஆனால் நோயே வராமல் நம்மைக் காத்துக் கொள்வது எப்படி? அதிலும் நோயுற்றால் மருந்தில்லாமல் மருத்துவம் செய்ய இயலுமா? அவ்வாறு மருத்துவம் செய்தால் நோய் நீங்குமா? இவ்வாறு பல்வேறு வினாக்கள் நம் உள்ளத்தில் எழுகின்றன. இவற்றுக்கெல்லாம் விடையளித்து மருந்தில்லா மருத்துவத்தையும் தமிழ் சித்தர் திருவள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

**உணவே நோய்!**

பெரும்பாலான நோய்களுக்கு மூல காரணமாக உணவு அமைகின்றது. உணவின் வாயிலாகவே நோய்க்கிருமிகள் பரவி உடலில் நோயை ஏற்படுத்துகின்றன. நாம் உண்ணும் உணவு தூய்மையானதாக இருத்தல் வேண்டும். உணவு தூய்மையானதாக இருப்பினும் அந்த உணவை அவரவர் உடற் தேவைக்கேற்ப உண்ணல் வேண்டும். உணவைச் சுவைக்காக உண்ணுதல் கூடாது. பசிக்கின்றதே என கிடைக்கின்ற தூய்மையற்ற உணவையும் உண்ணுதல் கூடாது. உடல் நலத்துக்கு உகந்த உணவை உண்ணல் வேண்டும்.

சுவையுடன் இருக்கின்றது என்பதற்காக உணவை அளவுக்கு அதிகமாக உண்ணுவதும் நோயைத் தரும். மேலும் சிலர் உணவு கிடைக்கின்றதே என்பதற்காக முன்பு உண்ட உணவு சமிபாடடைந்த பிறகு உண்ணாது உடனேயே அதை உண்பர். இதனால் முன்னர் உண்ட உணவு விசமாக மாறி உயிருக்குக் கேடுவிளைவிக்கும். அதனால் முன்பு உண்ட உணவு முழுமையும் சமிபாடு அடைந்ததன் பிற்பாடு உணவை உண்ணுதல் வேண்டும். நோய் வருமுன் காப்பதற்கு இதுவே சிறந்த வழி. இத்தகைய மருந்தில்லா மருத்துவத்தின் முதற்படி நிலையை,

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அற்றது*
*போற்றி உணின்! (குறள்-942)*

என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகின்றார்.

**உணவை அளவாக உண்ணுதல்!**

எதற்கும் ஒரு அளவுண்டு என்று வழக்கத்தில் அனைவரும் கூறுவது இயல்பு. இது ஏனைய விடயங்களுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ நாம் உணவுக்கு அளவு உண்டு என்பதை எடுத்துரைக்கின்றது. அவரவர் உடற்கூறுக்கு ஏற்ப, தேவைக்கு ஏற்ப அறிந்து உண்ணுதல் வேண்டும். உணவின் அளவு கூடினாலும் குறைந்தாலும் உடலில் நோய் ஏற்படும். அளவு குறைந்தால் சிலருக்கு குறைந்த அழுத்த நோய் ஏற்படும். இதை 'குறைந்த குருதி அழுத்தம்' என்று கூறுவர். உணவு சரியாக உண்ணாமையால் வரக்கூடிய நோயே இந்தக் குறைந்த குருதி அழுத்த நோயாகும். உணவு சரியான நேரத்தில் உண்ணாமலோ, குறைந்த அளவிலோ உண்டால் உடலில் உள்ள குளுக்கோஸின் அளவு குறைந்து உடலில் படபடப்பு ஏற்பட்டு குறைந்த குருதி அழுத்தம் ஏற்பட்டு உயிருக்கே ஊறுநேரக்கூடிய அளவுக்கு இது கொண்டு சென்று விடும். தேவைக்கு அதிகமாக உண்டாலும் 'உயர் குருதி அழுத்தம்' ஏற்படும்.

சிலர் இறைச்சி உணவை அதிக அளவில் உண்டு தங்களின் உயிருக்கு இறுதியைத் தாங்களே தேடிக்கொள்வர். இறைச்சியில் உள்ள கொழுப்பு குருதியில் கலந்து அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி குருதிக் குழாயில் 'உயர் குருதி அழுத்தம்' ஏற்படச் செய்கின்றது. தேவையான கொழுப்பை மட்டுமே உடல் எடுத்துக் கொள்கின்றது. தேவையற்ற கொழுப்பு குருதியிலும், உடலில் ஆங்காங்கே தங்கிவிடுகின்றது. அவ்வாறு தங்கிவிடும் கொழுப்பு குருதிக் குழாயை அடைப்பதும் உண்டு. இதனால் குருதி உடலுக்கு அல்லது இதயத்துக்குப் போகின்ற தமனிகளில் உள்ள சிறிய வழியை அடைத்து இதயத் தாக்குதல் ஏற்படவும் வழி ஏற்படுத்தி விடுகிறது. இதை அறிந்தே வள்ளுவர் மருந்தில்லா மருத்துவத்தின் இரண்டாவது படிநிலையாக,

*மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று! (குறள்-941)*

என்று குறிப்பிட்டு அவரவர் உடற்திறத்துக்கு ஏற்ப உண்டால் மருந்து தேவையில்லை என்று குறிப்பிடுகின்றார்.

**நீண்ட நாள் வாழ்தல்!**

உலகில் தோன்றிய மக்கள் நீண்டநாள் வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். அதற்காகப் பல்வேறு வகையான மருந்துகளை உட்கொள்கின்றனர். காயகல்பம் உண்கின்றனர். சிலர் தங்கபஸ்பம் உண்கின்றனர். இவ்வாறு பல்வேறு வகையான பஸ்பங்களையும் உண்ணுகின்றனர். எவ்வகையிலேனும் தங்களது வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள அவரவர்க்குத் தகுந்தவாறு முயல்கின்றனர். இந்த முயற்சியிலேயே சிலர் தங்களது குறிக்கோளை அடைய முடியாமல் இறந்தும் விடுகின்றனர். பல்வேறு காலங்களில் பல நாட்டினரும் தமது வாழ்நாளை நீடித்துக் கொள்ள முயன்றிருக்கின்றனர்.



இவ்வாறு பல்வேறு வகையான மருந்துகளைத் தேடி அலைவது வீணானன செயலாகும். வாழ் நாளை நீடித்துக் கொள்வதற்கு மருந்துகளோ, பஸ்பங்களோ, காயகல்பங்களோ தேவையில்லை. அவ்வாறெனில் எங்ஙனம் வாழ்நாளை நீட்டித்துக் கொண்டு நோயின்றி வாழலாம்? என்ற வினாவும் நம்முள் பலருக்கு எழுகின்றது. நலமுடன் நீண்ட நாள் வாழ மருந்தே வேண்டாம். அதற்கு அளவுடன் உண்ண வேண்டும். அதுமட்டுமல்லாது தாம் முன்னர் உண்ட உணவு முழுமையாக சமிபாடடைந்த பின்னர் உண்டாலே போதுமானது. இவ்வாறு தொடர்ந்து முன்னர் உண்ட உணவு முழுமையாக சமி பாடடைந்த பின்னர் அளவுடன் உணவு உண்டாலே நீண்ட நாள் வாழலாம். இத்தகைய மருந்தில்லா மருத்துவத்தை,

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கு மாறு! (குறள் - 943)*

என்ற திருக்குறள் நமக்கு எடுத்துரைக்கின்றது.



நாம் அளவில்லாது சமிபாடடையாது தொடர்ந்து உணவை உண்டு கொண்டு இருப்பதனால்தான் உடலில் நோய் ஏற்படுகின்றது. அளவறிந்தும் நாம் உண்பதில்லை. இதனால் தேவையற்ற கொழுப்பு நமது உடலில் சேர்ந்து விடுகின்றது. அதிகப்படியான சதைப்பிடிப்பு உடலில் ஏற்படுகின்றது. தகுந்த உடற்பயிற்சியும் இல்லாத நிலையில் நாம் உண்ட உணவே நமக்கு நோயை உண்டாக்கும் விசமாக மாறிவிடுகின்றது. எனவே நீண்ட நாள் நோயின்றி வாழ வள்ளுவர் கூறும் மருந்தில்லா மருத்துவத்தை அனைவரும் கடைபிடித்து வாழ்தல் வேண்டும்.

**உணவு உண்ணும் முறை!**

நம்மில் பலருக்கு எவ்வாறு உண்ண வேண்டும் என்பதும், எவ்வளவு, எவ்வெப்போது உண்ண வேண்டும் என்பதும் தெரிவதில்லை. இத்தகைய உணவு உண்ணுகின்ற முறையை நாம் நன்கு அறிந்து கொண்டோமானால் நம்மை நோய் என்பது அணுகாது. நன்கு பசித்த பின்னர் தான் நாம் உணவை உண்ண வேண்டும். அதுவே சரியான உணவு உண்ணும் முறையாகும். "பசித்துப் புசி" என்ற பழமொழியும் உணவு உண்ணும் முறையை நன்கு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு உண்ணுவதே ஒரு மருந்தில்லா மருத்துவ முறையாகும். இத்தகைய மருத்துவ முறையை,

*அற்றது அறிந்து கடைபிடித்து மாறல்ல*
*துய்க்கத் துவரப் பசித்து! (குறள்-944)*

என எடுத்துரைக்கின்றார் வள்ளுவர். "உண்ட உணவு சமிபாடடைந்ததை அறிந்து அந்தப் பழக்கத்தை முறையாகக் கடைபிடித்து மாறுபாடில்லாமல், நன்றாகப் பசித்த பின்னர் உணவை உண்க. அதுவே மருந்தில்லா மருத்துவம்."; என்று இந்தக் குறள்பாவில் வள்ளுவப் பெருந்தகை தெளிவுறுத்தியிருக்கிறார்.

**உணவு வகை மற்றும் உண்ணும் நேர காலத்தை மாற்றியமைத்தல்!**

பசித்தவுடன் உண்ண வேண்டும். ஆனால் பலர் பசி எடுத்தாலும் அந்த நேரத்துக்கு உண்பதில்லை. அப்போது தேநீரை அருந்திவிட்டு காலம் தாழ்த்தி உண்கின்றனர். இன்னும் சிலர் காலை உணவை பதினொரு மணி, மதிய உணவை மூன்று மணி, இரவு உணவை பன்னிரெண்டு மணி என சரியான நேரத்துக்கு என்று இல்லாமல் மனம் போன போக்கில் உண்பர். இது வலியச் சென்று நோயை நாமே வரவழைத்துக் கொள்வது போன்றது. இவ்வாறு சரியான நேரத்துக்கு உண்ணாமல் இருப்பதும் நோயை உடலில் உண்டாக்கும். இதனால் பலருக்கு தீராத வயிற்று வலி ஏற்படுகின்றது. பசி எடுத்தவுடன் உண்ணாமல் இருப்பதால் இரைப்பையில் சுரக்கும் அமிலத்தால் குடல் புண்ணாகி விடுகின்றது. இ வ்வாறு ஏற்படுகின்ற புண்ணால் சில சமயங்களில் குடலையே வெட்டி எடுக்கக்கூடிய சூழலும் ஏற்படுகின்றது. அதனால் பசி ஏற்பட்ட சிறிது நேரத்தில் உணவு உண்பது உடல் நலத்துக்கு நல்லது.

சரி பசிக்கிறது கிடைக்கும் உணவை உண்ணுவது நல்லதா? எனில் அவ்வாறு செய்யக் கூடாது. அவரவர் உடல் நிலைக்குத் தக்கவாறு ஏற்ற உணவை உண்ணுதல் நலம் பயக்கும். சிலருக்கு எண்ணெய் அதிகம் ஊற்றிச் செய்யப்பட்ட உணவோ அல்லது அதிகமான காரம், உப்பு, புளிப்பு உள்ள உணவோ ஒத்துக் கொள்ளாது. மேலும் சிலர் சைவ உணவைச் சாப்பிட்டுவிட்டு மாமிச உணவு கிடைக்கின்றது என்பதற்காக சைவத்திலிருந்து அசைவ உணவு முறைக்கு மாறுவர். இவ்வாறு உணவை மாற்றுவதும் நோய்க்கு இடங்கொடுக்கும் செயலாகும். அதனால் அவரவர் உடலுக்கு உகந்த உணவை உட்கொள்ள வேண்டும். அவ்வாறு உண்டு வந்தால் நோயும் வராது. மருந்தும் வேண்டாம். இத்தகைய எளிய மருந்துவத்தை,

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு! (குறள் -945)*

என வள்ளுவர் நவில்கிறார்.

**அதிகம் உண்ணுதல்!**

தமக்குப் பிடித்த உணவு இருந்தால் சிலர் அளவைவிட அதிகமாக உண்பர். இது மிகப்பெரிய உடல்நலக் கேட்டைத் தரும் செயலாகும். எப்போதும் உணவை மிதமாக உண்ண வேண்டும். அது உடல் நலத்தைப் பாதுகாக்கும் செயல் எனலாம். உண்ணும் போது சிறிது பசி இருக்கும் நிலையிலேயே நாம் உண்ணுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அது உடலுக்கு எப்போதும் துன்பத்தைத் தராது. அதிகம் உண்பவரை வழக்கில் 'பெருந்தீனிக்காரன்' என்று குறிப்பிடுவர். இந்தப் பெருந்தீனிக்காரனிடத்தில் எப்போதும் நோய் குடிகொண்டி ருக்கும். இவ்வாறு உண்பவர்களுக்கு, இதயத்தாக்குதல், உடல் எடை கூடுதல், உடல் பருமனாதல், உடலில் கொழுப்பு அதிக அளவில் ஏற்படுதல், தொப்பை ஏற்படுதல் உள்ளிட்ட பல உடற்கோளாறுகள் ஏற்படும். மிதமாக உண்டால் உடலில் மகிழ்ச்சி என்றும் நிலைத்திருக்கும். அதிகம் உண்டால் நோய், துன்பம் நிலைத்தி ருக்கும். நோய் வராமல் செய்யும் வழிமுறையாகவும் இதைக் கொள்ளலாம். இத்தகைய அரிய மருத்துவ முறையை,

*இழிவறிந்து உண்பான்கண்*
*இன்பம்போல் நிற்கும்*
*கழிபே ரிரையான்கண் நோய்!*
*(குறள் -946)*

என வள்ளுவப்பெருந்தகை குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இன்னும் பலருக்குச் சில ஐயங்கள் எழலாம். நல்ல பசி. பசித்த பின்னர் தானே உண்ண வேண்டும். அதை எப்படி உண்டால் என்ன? என்று கருதுவாருமுளர். அது தவறான ஒன்றாகும். நமக்குப் பிடித்தமான உணவை உண்டாலும், பசி அடங்கும் வரை மட்டுமே உண்ண வேண்டும். அதுவே மகிழ்வைத் தரும். பசியடங்கிய பின்னரும் எழாது உணவை உண்டு கொண்டு இருத்தல் கூடாது. அவ்வாறு அதிக அளவில் உண்பதே பெருந்தீனி தின்பது என்று கூறுவர். பசி அடங்கியவுடன் உண்பதை நிறுத்தி விடுதல் நல்லது. உணவின் ருசிக்காக அதிக அளவு உணவை உண்டால் அதிகமான நோய்கள் நமது உடலில் தங்கி உடலை வருத்தும். எனவே அதிகம் உணவை உண்ணுவதைத் தவிர்த்தல் வேண்டும். இத்தகைய அரிய மருத்துவ அறிவுரையை,

*தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றயிப் படும்! ( குறள் -947)*

என வள்ளுவப் பேராசான் குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. இவை மருந்தில்லா மருத்துவத்தின் நோய்த் தடுப்பு முறைகளாகும்.

**மருத்துவம் பார்க்கும் முறைமை!**

இவ்வாறெல்லாம் இருந்தும் நோய் வந்துவிட்டால் என்ன செய்வது? நோய் வந்தவுடன் மருத்துவரை நாடிச் சென்று பார்த்தல் வேண்டும். அந்த மருத்துவர் அது எத்தகைய நோய், அது எதனால் வந்தது? அதை எந்த வழியில் தீர்க்கலாம் என அறிந்து சிகிச்சையைத் தொடங்க வேண்டும். இன்று சில மருத்துவர்கள் எந்தவிதமான நோய்? அந்த நோய் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? என்பதையெல்லாம் அறிந்து கொள்ளாமலேயே ஏதோ ஒரு சிகிச்சையைத் தொடங்கி விடுகின்றனர். அது முடிவில் நோயாளியின் உயிருக்குக் கேட்டை விளைவித்து விடுகின்றது. இந்தக் கேடுகளையெல்லாம் தவிர்க்கவே திருவள்ளுவர்,

*நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்! (குறள் -948)*

என்ற மருத்துவம் பார்க்கும் முறையையும் எடுத்துக் கூறுகின்றார்.

'நோயாளி, மருத்துவர், மருந்து, மருந்தைக் கொடுப்பவர்' என்ற நான்கும் மருத்துவமுறையில் முக்கியமான வையாகும். இவை ஒன்றைஒன்று சார்ந்திருக்கின்றது. இந்த நான்கும் ஒன்றிணையும் போதுதான் நோயாளி நோயிலிருந்து முற்றிலும் குணமடைகின்றார். இத்தகைய மருத்துவ முறையை,

*உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று*
*அப்பால்நாற் கூற்றே மருந்து! (குறள்-950)*

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

நோயின் தன்மை, வந்த காரணம், அதனைப் போக்கும் பொருத்தமான மருத்துவமுறை இவற்றையெல்லாம் அறிந்து ஒரு மருத்துவர் செயல்பட வேண்டும். பணத்தின் பொருட்டு, அல்லது நோயாளிக்கு வந்திருப்பது இத்தகைய நோய் என்பது தெரியாமல் மருத்துவம் செய்தல் கூடாது என்ற மனிதநேயத்துடன் கூடிய மருத்துவ முறையை வள்ளுவர் கூறியிருப்பது இன்றைய சமுதாயத்துக்கு வழி காட்டுவதாக அமைகின்றது.

**மருந்து கொடுத்தல்**


நோய் பற்றி தெரிந்து கொண்டபின் அதற்குரிய மருந்தை அளவுடன் கொடுத்தல் வேண்டும். அனைவருக்கும் நோயின் தன்மைக்கேற்பவும், நோயாளியின் வயது, நோயின் அறிகுறி ஏற்பட்ட காலம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மருந்து கொடுப்பது நல்லது. இவற்றை மீறி மருந்தை அளவுக்கு அதிகமாகக் கொடுத்தால் நோயாளிக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டு நோயாளியின் உயிருக்கு ஊறு நேரும். இதை மருத்துவர் நன்கறிதல் வேண்டும் என்பதை,

*உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்! (குறள் - 949)*

என்று குறிப்பிடுகின்றார். வள்ளுவரின் கூற்று மிகச் சிறந்த மருந்தாளரின் கூற்றைப் போலவும், அனுபவம் நிறைந்த மருத்துவரின் செயலை நினைவு றுத்துவதைப் போன்றும் அமைந்திருப்பது நோக்குதற்குரியது. மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர் நோயாளியின் தன்மை, வயது, போன்றவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு மயக்க மருந்தை சரியான அளவில் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு கொடுக்காவிடில் நோயாளி நீள்துயிலில் ஆழ்ந்துவிட நேரிடும். இத்தகைய மருந்தளிக்கும் முறையை அனைத்துத் தரப்பு மருத்துவர்களும் நன்கு அறிந்திருப்பது மருத்துவத்துறையை மென்மேலும் சிறப்புடையதாக ஆக்கும்.

உடலை நலமுடன் வைத்திருக்க உதவும் வள்ளுவர் கூறும் மருந்தில்லா மருத்துவத்தை அனைவரும் கையாள்வது எளிதாகும். வள்ளுவர் வழி வாழ்க்கையை அமைத்து சமுதாயத்துக்குப் பயன்படுமாறு வாழ்வோம்!

> “ நம்மில் பலருக்கு எவ்வாறு உண்ண வேண்டும் என்பதும், எவ்வளவு, எவ்வெப்போது உண்ண வேண்டும் என்பதும் தெரிவதில்லை. இத்தகைய உணவு உண்ணுகின்ற முறையை நாம் நன்கு அறிந்து கொண்டோமானால் நம்மை நோய் என்பது அணுகாது. நன்கு பசித்த பின்னர் தான் நாம் உணவை உண்ண வேண்டும்.

















# கலை இலக்கியப் பெருவிழா!

வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து, வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்திய 'கலை இலக்கியப் பெருவிழா-2018' நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை, வவுனியா புளி யங்குளம் ஆரம்பப் பாடசாலை மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் க. பரந்தாமன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.ஹனீபா முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார்.

கலை இலக்கியப் பெருவிழாவின் தொடக்க நிகழ்வாக புளியங்குளம் விஷ்ணு ஆலய முன்றலில் இருந்து பண்பாட்டு பேரணி ஆரம்பமானது. பண்பாட்டு பேரணியில் மாவீரன் பண்டார வன்னியனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியும், பழந்தமிழர் பண்பாட்டை பறை சாற்றும் விதமாக சமையல் உபகரணங்களைத் தாங்கிய ஊர்தியும் பார்வையாளர் கவனத்தை ஈர்த்தன. பண்பாடுகளின் வழி அவர்களை ஒருமுகப்படுத்தின. அதுவிதமே நாதஸ்வரக் குழுவினரின் நாதகானம் முழங்க அசைந்து வந்த பொய்க்கால் குதிரை ஆட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பண்பாட்டு நிகழ்வுகளும் தமிழ் பெரியார்களைப்போன்று வேடமணிந்த சிறுவர்களின் நயனமும் பண்பாட்டுப் பேரணியை கலைத்துவமாக அலங்கரித்துமெருகூட்டின.

நிகழ்வின் சிறப்பம்சமாக மாவீரன் பண்டாரவன்னியன் அரங்கில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் 'மருதமுகில்' நூலுரு வெளியிட்டு நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது. தவிர வவுனியா வடக்கு பிரதேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்து மொழி, கலை,கலாசாரத் துறை சார்ந்து குறிப்பாக இயல்,இசை மற்றும் நாடகத்துறையில் பங்களிப்புச் செய்தோர் 'சமூக நலனோம்பி' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் மதிப்புறு விருந்தினராக பதில் நீதவான் ரி.கெங்காதரனும், சிறப்பு விருந்தினர்களாக விரிவுரை யாளர்களான இளையதம்பி ஜெயேந்திரன்,பஞ்சாட்சரம் கெங்காதரன், மருத்துவர் செல்வராசா மதுரகன்,கலாசார உத்தியோகத்தர் மாலினி கிருஷ்ணானந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ -110)

# தென்மராட்சிப் பிரதேச கலாசார விழா







வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு, தென்மராட்சி பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய 'தென்மராட்சிப் பிரதேச கலாசார விழா - 2018 ' நிகழ்வு கடந்த சனிக்கிழமை வரணி மத்திய கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நாடறிந்த வானொலி நாடக கலைஞர் அமரர் வரணியூரான் எஸ்.எஸ்.கணேசபிள்ளை அரங்கில் பிரதேச செயலரும் , கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி தேவந்தினி பாபு தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர், மூத்த பேராசிரியர் ப.புஷ்பரத்தினம், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மதிப்புறு விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலக மாவட்ட கலாசார அலுவலர் மா.அருள்சந்திரன், மாவட்ட கலாசார அபிவிருத்தி அலுவலர் இ.கிருஷ்ணகுமார், சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன், ஓய்வு நிலை அதிபர் க. அருந்தவபாலன், தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் க.வினோஜிதா, தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தவிர, கலைஞர்கள், மாணவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பாரம்பரிய பனம்பொருள்களால் ஆக்கப்பட்ட வாகனக் கண்காட்சி ஊர்வலம் கொடிகாமத்திலிருந்து வரணி பிரதேச கலாசார நிலையம் வரை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள் சிட்டிபுரம் ஆலய முன்றலில் இருந்து ஊர்வவலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக பிரதேசம் சார்ந்து கலைத் துறைக்கு நீண்ட காலம் சேவையாற்றிவருகின்ற கலைஞர்களுள் எண்மர் 'கலைசாகரம்' விருதும், இளந் தலைமுறைக் கலைஞர்கள் 7 பேர் 'இளங்கலைஞர் விருதும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

கலைச்சாகரம் விருதை முறையே, "கவிஞர் த.நாகேஸ்வரன் ( இலக்கியம் ), சி.சபாரத்தினம் ( இலக்கியம்), திருமதி ஆ.சுந்தரவல்லி ( இசை ), திருமதி சி.சுப்புலட்சுமி (கிராமியக்கலை), ஆ.கதிரன் (நாடகம்) ,வ.பத்மநாதன் (நாடகம் ), கா.சிவஞானசுந்தரம் (சமூகசேவை ), ஆ.கனகரத்தினம் (ஓவியம்)" என துறை சார்ந்து பெற்றுக்கொண்டனர்.

அதேபோன்று இளஞ்கலைஞர் விருதை முறையே, "வி.சித்தார்த்தன் (நாதஸ்வரம் ), வி.பிரதித்தன் (நாதஸ்வரம் ), தெ.திருவேரகன் ( இசை ), இ.பிரதீபர் ( ஓவியம் ), கே.ரீ.குமாரநாதன் ( சிற்பம் ), ம.சங்கீதா (நடனம்), வ. ஜசிந்தன் ( இலக்கியம்)" என துறை சார்ந்து பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. சிறப்பு கலைநிகழ்வாக கைதடி மின்னொளி நாடகமன்ற அண்ணாவியார் அ.சிவஞானத்தின் நெறியாள்கையில் உருவான 'காத்தவராயன் சிந்து நடை'க் கூத்து இடம்பெற்றது. .

(ஒ - 159)

# சிறப்புற இடம்பெற்ற 58 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும்!



அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய 58 ஆவது பட்டமளிப்பு விழாவும், சைவமாநாடும் கடந்த சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில், நல்லை ஆதீன இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திரு முன்னிலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ து.கு.ஜெதீஸ்வரக்குருக்கள் , சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவி) , கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன், மதிப்புறு விருந்தினர்களாக ச.விநாயகமூர்த்தி (கரவெட்டி), ச.தட்சணாமூர்த்தி (மீசாலை) , திருமதி புனித வதியார் சிவக்கொழுந்து (வவுனியா) ஆகியோர் கல்ந்து கொணடனர்.

வரவேற்புரையை சைவப்புலவர் சா. பொன்னுத்துரை நிகழ்த்தினார். ஆசியுரையை சிவஸ்ரீ து.ஜெகதீஸ்வரக்குருக்கள் வழங்கினார். தொடர்ந்து அருளுரையை ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும், சிறப்புரையை செந்தமிழ்ச்செல்வர் ச.விநாயகமூர்த்தியும் ஆற்றினர்.

மதிப்பளிப்பு நிகழ்வு அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொருளாளர் ச.முகுந்தன் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

கௌரவப் பட்டங்களுள் 'சைவாகமபூஷணம் பட்டத்தை' முறையே சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் , சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவி) ஆகியோர் பெற்றுக்கொண்டனர். சைவப்புரவலர் பட்டத்தை யாழ்ப்பாணம் சிவகணேசன் ரெக்ரைல்ஸ் உரிமையாளர் கனகசபை அருள்நேசன் பெற்றுக்கொண்டார். பௌராணிகர் மதிப்பளிப்பை முறையே 'பௌராணிகர்கள்' ச.விநாயகமூர்த்தி , ச.தட்சணாமூர்த்தி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மூத்த சைவப்புலவர் மதிப்பளிப்பை சைவப்புலவர் திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணி பட்டம் பெற்ற சைவப்புலவர்கள் மதிப்பளிப்பை முறையே சாமித்தம்பி பொன்னுத்துரை , திருமதி பத்மாவதி தங்கராசா , திருமதி புஸ்பலட்சுமி விமலகாந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பட்டமளிப்பு நிகழ்வில், இளஞ்சைவப்புலவர் பட்டத்தை முறையே, "கலாமோகன் பிரகான் (வாழ்வகம், சுன்னாகம்) , செல்வி கோகிலா சிதம்பரப்பிள்ளை (கோவிற்குளம், வவுனியா) , செல்வி அன்னலட்சுமி இராமர் (கண்டி) , ஆறுமுகம் சசிநாத் (கனகராயன்குளம், வவுனியா) , செல்வி ஷமந்தி சந்திரசேகரம் (கொழும்பு) , திருமதி சுசிலாதேவி கிருஷ்ணராஜன் (வவுனியா) , இந்திரராசா மோகன் (உடுவில் ) , செல்வி ரேபிகா சண்முகலிங்கம் (முழங்காவில்) , செல்வி சுதேந்தினி கணபதிப்பிள்ளை (வெற்றிலைக் கேணி, முள்ளியான்) , திருமதி புவனராணி இரகுநாதன் (அரியாலை) , செல்வி லோஜிதா மகேந்திரன் (மீசாலை), பகீரதன் சுகிர்தன் (திருக்கோவில், மட்டக்களப்பு) , சாமித்தம்பி திருநாவுக்கரசு (கோட்டைக்கல்லாறு, மட்டக்களப்பு) , திருமதி மகேஸ்வரி விஜயரத்தி னம் (சாவகச்சேரி) , செல்லத்துரை பிருந்தாபரன் (திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)" ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சைவப்புலவர் பட்டத்தை முறையே, "திருமதி காந்திமதி சூரியகுமார் (லண்டன்) , முருகப்பன் சேமகரன் (ஆஸ்திரேலியா), திருமதி கமலாதேவி சபாரத்தினம் (அரியாலை) , திருமதி லீலாவதி அருளையா (தெல்லிப்பளை) , கணபதிப்பிளைளை வெற்றிவேல் (கிளிவெட்டி, திருகோண மலை) , நாகமணி நித்தியானந்தன் (லண்டன் ) , இராமையா ஜீவன்பிர சான் (மாத்தளை) , திருமதி சற்சொரூபவதி சுபமுரளிதரன் (கொழும்பு) , திருமதி பத்மாவதி தியாகராசா (லண்டன்) , , சிவஸ்ரீ கறுவல் தம்பி குமராசாமி (மண்டூர்) , செல்வி மந்தாகினி பாலச்சந்திரன் (மல்லாகம்)" ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 'சைவநாதம் 8' மலர் வெளியீட்டில் வெளியீட்டுரையை சைவப்புலவர் சி.கா.கமலநாதன் வழங்கினார்.

முதற்பிரதியை செ.சற்குணம், சிறப்புப் பிரதியை அலங்கார வித்தகன் க.வரததாசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நன்றியுரையை அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் த.குமரன் வழங்கினார்.

(ஓ -222)



*வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு, யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழாவில் மூத்த கலைஞர் லயன் கலாநிதி நா.தனேந்திரன் 'யாழ் ரத்தினா' விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார்.*

## நூல் வெளியீட்டு நிகழ்வு

ச.லலீசன்



மூத்த ஆங்கில ஆசிரியர் த.ந.பஞ்சாட்சரம் எழுதிய, 'சிவதொண்டன் தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்' என்ற நூலருவின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் க.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். சிவதொண்டன் நிலைய அடியவர் வி. முரளிதரன் சுவாமிகள் மங்கல விளக்கேற்றினார்

நீர்வைக் குருமார் சார்பில் பிரம்மஸ்ரீ நீர்வை மணி கு. தியாகராஜக் குருக்கள், தியாக. மயூரகிரிக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர். ஆசிரியர் சீ.கமலதாஸ் வரவேற்புரையையும், ஆலய பரிபாலன சபைப் பொருளாளர் ச.க. முருகையா நூல் வெளியீட்டுரையையும், பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு நூல் ஆய்வுரையையும் நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்புரைகளை கலாநிதி ஆறு. திருமுருகன், ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், கிராம அலுவலர் சு.சண்முகவடிவேல், சமாதான நீதிவான் த.பரராசசிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

நூலுருவை கலாநிதி செ.திருநாவுக்கரசு, கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர். நூலுருவின் முதற்பிரதியை இருதய சத்திரசிகிச்சை மருத்துவ நிபுணரும் நூலாசிரியரின் மாணவருமாகிய சி.முகுந்தன் பெற்றுக்கொண்டார். ஆசிரியர் த.ந்.பஞ்சாட்சரம் அவர்கள் சிவதொண்டன் நிலையத்தின் அடியவராகத் தனது 89 ஆவது வயதில் இந்த நூலுருவை வெளியீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'தெல்லியூர் கதிரவேல்பிள்ளை சிவானந்தம்'




தோன்றின் புகழோடு தோன்றுக! என்பதற்கு இணங்க எடுத்துக்காட்டான மனிதமாக விளங்கியவர் தெல்லியூர் கதிரவேல்பிள்ளை சிவானந்தம். இவர் தெல்லிப்பழை காலஞ்சென்ற பல் மருத்துவர் வ.கதிரவேல்பிள்ளை மாமாங்கம் ஆகியோரின் புதல்வனும், துர்க்கா ஆய்வுகூட சேவை உரிமையாளரும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவருமாவார். இவர் சுகாதாரத் திணைக்களத்தில் 28 வருடங்கள் சேவையாற்றிதோடு, யாழ்.மருத்தபீடத்தில் 13 வருட காலம் மகத்தான சேவைபுரிந்து இரண்டு பதவி உயர்வுகளைப் பெற்றார். இறுதியாக 1997ஆம் ஆண்டு ஆய்வுகூட பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தராக நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

**மதிப்பளிப்பு**

29.12.2013 இல் ஞானாஸ் உணவகம், யாழ்ப்பாணம் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியம், இணைந்து நடத்திய வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வில் சமூகத்துக்குப் பெறுமதிமிக்க சேவை ஆற்றியமைக்காக இவர் மதிப்பளிக்கப்பட்டார். தொடர்ந்து 24.04.2018 இல் மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம், கொழும்பு ஸ்ரீலங்கா நோயியல் மருத்துவ நிபுணர்கள் கல்லூரி ஆகியன இணைந்து நோயியல் மருத்துவ நிபுணர் கலாநிதி பாலித ரத்நாயக்க தலைமையில் ஏற்பாடு செய்த நிகழ்விலும் மதிப்பளிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் நோயியலில் அதிசிறந்த சேவையாற்றி அகில இலங்கை பல்கலைக்கழகங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 10 தொழில்நுட்ப அலுவலர்களுள் ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தராக தெரிவுநிலைக்குட்பட்டார். தவிர அகில இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் 07 தொழில்நுட்பவியலாளர்களுள் வடமாகாணத்திலிருந்து அழைக்கப்பட்ட ஒரே ஒரு தமிழ் உத்தியோகத்தராகவும் தன்னை முன்னிலைப்ப டுத்திக்கொண்டார்.

மேலும் யாழ். மருத்துவபீடம் நடத்திய 40ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இவர் மருத்துவபீடத்துக்கு ஆற்றிய சேவை நன்றியுணர்வோடு நினைவுகூரப்பட்டமை குறித்து நோக்கத்தக்கது.

# முதுமையின் முதன்மைப் பே(கூ)றுகள்!



த.மலர்விழி

மூத்தோர் சொல்லும் முதிர் நெல்லிக்காயும் முன்னே கசக்கும்பின்னே இனிக்கும். ஆனால், மூத்தோரைக் கசப்பென்று தள்ளிக் கொண்டிருக்கிறது நிகழ்காலம். எனவே வாழ்வின் கடைசிக் கட்டத்தில் வாழக்கூடிய முதியோர்களின் உடலில் ஏற்படும் தோற்ற மாற்றங்களைச் செவ்வியல் இலக்கியங்களின் வழி நோக்குவோம்.

**மூப்பு வயது!**

மூப்பு பருவத்தினரது வயதைக் கால அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும், உளவியல் அடிப்படையிலும் அணுகலாம். கால அடிப்படையிலான வயது மனிதன் பிறந்த ஆண்டின் அடிப்படையில் அமையும். இது உடலியல் சார்ந்தது. சராசரி வளர்ச்சியுடன் நோய்கள் அணுகாமல் நலமான சூழலில் உடலில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாக வைத்துக் கணிக்கப்படும்.

சமுதாய அடிப்படையிலான வயது, சமுதாயத்துக்குச் சமுதாயம் மாறுபடலாம். சராசரி வாழ்நாள் அளவு குறைவாக அமையும் சமுதாயத்தில் நாற்பது வயது கூட மூப்பு பருவத் தொடக்கமாக இருக்கலாம்.

உளவியல் அடிப்படையிலான வயது, ஒரே சமுதாயத்திலும் மக்களின் வாழ்க்கைத் தரத்துக்கேற்ப அவர்களுடைய மனப்பாங்கு வேறுபடக் காணலாம். அத்தகைய வேறுபாட்டை மூப்பு வயது பற்றிய கருத்திலும் காணமுடியும்.

பன்னிருபாட்டியல், முப்பது ஆண்டுகள் கடந்துவிட்டால் முதுமைப் பருவம் வந்துவிடுவதாகக் கூறுகிறது. முதுமையைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் காணப்பட்டாலும், தற்காலத்தில் அறுபது வயதுக்கும் மேற்பட்டவர்களையே முதுமைப்பருவம் அடைந்தவர்களாகக் கருதுகின்றனர்.

மனிதனின் தோற்றத்தில் புறவயமாக முடியிலும் தோலிலும் ஏற்படும் நரை, திரை மாற்றங்கள் முதுமையின் முகவரியாகின்றன. முதுமை அடைந்து விட்டவர்கள் இளமைப் பருவத்தில் இருப்பவர்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்ட தோற்ற மாற்றங்களுக்கு ஆட்படுகின்றனர். முதுமைப்பருவம் அடைந்து விட்டவர்களுக்கு உடலில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. மூப்பு என்றவுடனே நம் நினைவுக்கு வருவதும் முதலில் புலனாவதும் நரை ஆகும்.

**நரை!**

கறுத்த தலைமுடி வெளுத்துப் போவது நரை. இலக்கியங்கள் முதியோரைப் பற்றிக் குறிப்பிடும் எல்லாச் சூழல்களிலும் நரை சுட்டப்படுகிறது. மூப்புக்கு உரைகல்லாக நரை அமைகிறது.

*யாண்டு பலவாக நரையில வாகுதல்! (புறநானூறு.191.1)*

எனும் வரியில் உள்ள நரையில வாகுதல்எனும்சொல்மூப்படையாமையைக் குறிப்பால் புலப்படுத்தி, மூப்பினைச் சுட்டும் சொல்லுக்குச் சமமாகி நிற்கிறது.

*நரை முதிர் யாக்கை நீயுங் கண்டனை!*
*(சிலப்பதிகாரம்.28.158)*

*நரைவரும் என்றெண்ணி நல்லறிவாளர்*
*குழவி யிடத்தே துறந்தார்! (நாலடியார்.11.12)*

எனும் செய்யுள் வரிகளும் மேற்கூறிய கருத்துக்குச் சான்றாகின்றன. மனிதன் முதுமைப் பருவம் அடையும் போது கறுத்த தலைமயிர் நரைத்த தோற்றம் பெறுகிறது. கறுத்த தலைமுடி கொஞ்சம் கொஞ்சமாக நரைக்க ஆரம்பிக்கும். கம்பராமாயணத்தில் தசரதனின் கன்னமூலத்தில் நரை தொடங்குவதாக கம்பர் குறிப்பிடுவார். கண்ணாடியில் காதோரம் நரையைப் பார்த்த தசரதன் தான் மூப்பு அடைந்து விட்டதை உணர்கிறான்.

*கடனிரை திரையிற் கருநரையோர்!*
*(பரிபாடல் 1:42)*

எனும் செய்யுள்வரி வெண்மை நிறமான அலைகளால் வெண்மையும் கருமையுமாய்க் கடல் காட்சியளிக்கும் தன்மையைப் போல் நரைத்த மயிரும் கருமயிரும் இடையிடையே விரவி அமைந்த நிலையை விளக்குகின்றது.

"மயிரின் வேர்ப்பகுதியில் நிறமி அணுக்கள் குறைந்து வருவதால் மிளகும் உப்பும் கலந்தது போன்ற தோற்றம் பெறுகிறது" என்று விரவு நரையின் தோற்றத்தை அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

மூப்புற்ற ஆடவர், மகளிர் ஆகிய இருபாலரைக் குறிப்பிடும்போதும், மூப்புக் கூறுகளைக் காட்சிப்படுத்தும் போதும் பொதுவாக 'நரை' என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. எனவே, 'நரை' என்று மட்டும் குறிப்பிட்டுள்ள இடங்கள் முற்றிலும் நரைத்த நிலையைச் சுட்டுவதாகும்.

தலைமுடி முழுவதும் நரைத்த நிலையையே நரைத்தலின் இறுதி நிலையாகக் கருதலாம். தலைமுடி தவிர, புருவம், தாடி நரைத்துள்ளமையை,

*பிறைநுதல் வண்ணம் காணாயோ நீ*
*நரைமயிர் நிரைதோற் றகையின் றாயது!*
*(மணிமேகலை 20.4344)*

*நரைமுது தாடி எயினார்!*
*(சிலப்பதிகாரம். 12.16)*

எனும் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. தலைமுடி முழுவதும் நரைக்கும் நிலையில் புருவமுடிகளும் நரைக்கின்றன. ஆண்களுக்கு மீசைமுடிகளும் தாடியும் நரைத்துப் போகின்றது. வயது முதிரும்போது தலைமயிர் உதிர்ந்து அடர்த்தி குறையும்.

*இன்று*
*இலையுதிர் காலம்*
*தலைமுடிகள்*
*ஒன்றிரண்டாய்*
*பத்து நூறாய்*
*உதிர்கின்றன*
*உச்சியில் பிறைநிலா*
*மெல்லப் படர்ந்து*
*முழுநிலவாகும்!*

எனும் கவிதை வரிகள், தலைமயிர் உதிர்வதை இலையுதிர் காலமாகக் கூறுகின்றன. கவிஞர், தலை வழுக்கையை முழுநிலவாகக் காண்கிறார். பிறைநிலா மெல்ல மெல்ல வளர்ந்து முழுநிலவு தோன்றுவது போல தலைமயிர் சிறிது சிறிதாகக் குறைந்து வழுக்கை ஏற்படுவதாகக் குறிப்பிடு கிறார்.

"வயதாகும் போது மயிர் உதிர அவற்றினுக்கு இணையான வீரியமுள்ள மயிர் மீண்டும் தோன்றுவதில்லை புதிதாகத் தோன்றுபவையும் சிறிது காலத்தில் உதிர்ந்து தலைமயிரின் அடர்த்தி குறையக் காரணமாகின்றன" என அறிவியலாளர் கருதுகின்றனர்.

நரையை மட்டுமே வைத்து முதுமையைக் கணிக்க இயலாத நிலை தற்காலத்தில் உள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக சிறு குழந்தைகளுக்குக் கூட நரை காணப்படுகிறது.

**திரை!**

"வயது செல்லச் செல்ல மனித உடலின் தோல் மாற்றத்துக்கு உள்ளாகி வற்றி உலர்ந்து சுருங்குவதைத் திரைதல்" என்கிறோம். திரை உடலின் அனைத்துப் பகுதிகளிலும் மேல்தோலில் நிகழும் செயல்பாடு ஆகும். முகம், நெற்றி போன்ற பாகங்களில் தோல் திரைதல், தோல் உலர்தல், தோலின் நிறமாற்றம், குருதிக் குழாய்கள் புலப்படல் பற்றிய செய்திகளும் இலக்கியங்களில் காணப்படுகின்றன. முதியோர்களின் தோலில் இரத்தக் குழாய்கள் புடைத்துக் கொண்டு காணப்படும்.

*நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்!*
*(புறநானூறு 2781)*

எனும் செய்யுள் வரி, குருதிக்குழாய் புடைத்தப்படி காணப்படுவதைக் குறிப்பிடுகிறது. முகத்தில் குறிப்பாக நெற்றியில் உண்டாகும் தோல் திரைதலைப் பற்றிய செய்தியை,

*பிறைநுதல் வண்ணம் காணாயோ நீ*
*நுரைமயிற் நிரைதோற் றகையின் றாயது!*
*(மணிமேகலை 20.4344)*

எனும் செய்யுள் வரிகள் நெற்றித்தோல் திரைந்த தன்மையக் குறிப்பிடுகின்றன.

*ஆவக் கணைக்கால் காணா யோநீ*
*மேவிய நரம்போடு என்புறங் காட்டுவே!*
*(மணிமேகலை)*


எனும் செய்யுள் வரிகள் கணைக்காலில் சிரைகள் புறந்தெரியப் புலப்படலைக் குறிப்பிடுகின்றன. முதுமையில்தோலின் நிறமும் மாறுகிறது.

"தோலில் குருதியைச் செலுத்துகின்ற தந்துகிகளின் மறைவால், மூப்பில் தோலின் நிறம் மாறுகிறது" தோல் தன் இயல்பான நிறத்தில் இருந்து மாற்றமடைகிறது. இது ஒரு அருவெருப்பான தோற்றத்தை முதியவர்களிடம் ஏற்படுத்துகிறது. இளம் பருவத்தினரின் தோல் முன்பனி, பின்பனிக் காலங்களில் தன்னியல்பு நிலையில் இருந்து மாற்றமடையும். முதியவர்களின் தோல் பருவகால வேறுபாடு இல்லாமல் நிலைத்த மாற்றத்திற்கு உள்ளாகுகிறது.

"வாழ்க்கையில் மிகவும் விரும்பப்படும் பருவமான மிகவும் பயனுடையதாகக் கருதப்படும் பருவமான வாலைப்பருவத்தினின்றும் விலகிச் செல்லும் காலகட்டமே" முதுமைப்பருவம் என்பர்.

வெறுக்கப்படும் பருவமான முதுமையில் தலைமுடி முழுவதும் நரைத்து முடி அடர்த்தி குறைந்து தோலில் விரும்பத்தகாத மாற்றங்கள் உருவாகுகின்றன. நரையும், திரையும் தவிர்க்க இயலாதவையாகின்றன எனலாம்.

முதியோரின் தோற்றத்தில், புறவயமாக முடியிலும், தோலிலும் காணப்படும் நரை, திரை மட்டுமல்லாமல் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், ஐம்பொறிகளில் உணர்வு மாற்றங்களும், முதியோர்களிடம் விருப்ப மாற்றங்களும் (சொந்த, பொழுதுபோக்கு, சமய விருப்பார்வங்களில் மாற்றம்) உடல் இயக்க மாறுபாடுகளும் (உடல் வளைதல், தோள் சரிதல், உடல் வலிமை குன்றுதல், உடல் நடுக்கம், தண்டூன்றல், நடையின் தன்மை மாறுதல்) ஞாபகமறதி, சொன்னதையேத் திரும்பத் திரும்பக் கூறுதல் போன்ற உளவியல் மாற்றங்களும் ஏற்படுகின்றன என்றாலும் வெளுத்த அடர்த்தி குறைந்த தலைமயிரும் சுருங்கிப் போன தடித்த தோலுமே முதியோர்களின் தோற்றத்தில் முதன்மை பெறுவதாக செவ்வியல் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன எனலாம்.



# ‘மார்கழித் திருவெம்பாவை’

## ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும்சோதியை வணங்கிப் பணிவோம்!

கந்தையா கனகசபை

சிவன் மூவருக்கும் மேலான கடவுள். சைவ சித்தாந்த விதிமுறைகளின்படி இறைவன் பிறப்பற்றவன். இதையே "ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும்சோதி" அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாத சோதிவடிவம் என்பதாக மாணிக்கவாசகர் திருவெம்பாவையின் முதற்பாடலிலேயே மிக அழகாக குறிப்பிடுகின்றார். சிவபெருமான் ஒருவனே முதல்வனாக, முழு முதற் பொருளாக, அழியாப் பொருளாக நிலைபெற்று பின் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு பிரணவத் தத்துவத்தை சார்ந்து நிற்பவன் என்பது இந்துக்களின் மீளா நம்பிக்கை. இதையே "ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை ஏழை பங்காளனைப் பாடேல் ஓரெம்பாவாய்" என மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடல்களில் குறிப்பிடுகின்றார்.

இன்றவனின் பெருமை கூறி, ஆணவ மலம் நீங்கப் பெற்று ஆன்மாக்கள் இறைவனை அடைவதையே உயர்ந்த தியானமாகக் கொண்டு அதன் அடிப்படையாய் திருவெம்பாவையில் வரும் 20 பாடல்களையும் மிகுந்த கருத்துச் செறிவோடு மாணிக்கவாசகர் இயற்றி உள்ளார். இறுதியாக உள்ள பாடலில், 'போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்' என ஆரம்பித்து, 'போற்றியாம் மார்கழி நீராடேல் ஓரெம்பாவாய்' என முடிவுறுத்துகின்றார். அற்புதமான செயல்நிலைகள் பாடல்களினுள் காட்சிப்படுத்தப் படுகின்றது.

இங்கு, "பெருமானே எம்மைக் காப்பாற்றி ஆதியாயும் அந்தமாயுமுள்ள பாதங்கள் காக்க, தோற்றம் காப்பு அழிவு மூன்றிற்கும் காரணமான பாதங்கள் காக்க, மால் பிரமன் காணாத பாதங்கள் காக்க, நாங்கள் உய்ந்து பிழைத்திட ஆட்கொண்டருளும் பாதங்கள் காக்க என்றும் நாம் நீராடி மார்கழி நீரை வணங்குவோம் என்றும்" அழைப்பிடுகிறார்.

வீதியிலே ஒன்றுகூடி நகர்ந்து செல்லும் பல மங்கையர்கள் தம் தோழியரைத் துயிலெழுப்பி மார்கழி நீராட அழைத்துச் செல்லும் காட்சிகள் பலவும் அற்புதமாகச் சித்திரித்துக் காட்டப்படுகின்றன.


மாணிக்கவாசகர்

**பிட்டுக்கு மண் சுமந்த மேனியன்!**

திருவாதவூரடிகளைக் கொண்டு திருவாசகம் பாடுவிக்க எண்ணிய சிவபெருமான் மானிட வடிவம் கொண்டு குருந்த மரநிழலில் அமர்ந்திருந்தார். தென்னவன் பிரமராயன் என்னும் பெயரோடு பாண்டிய மன்னனிடத்தில் முதன்மை மந்திரியாக இருந்த திருவாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குதிரைகளை வேண்டுவதற்காக பெரும் தொகையான பொன்களுடன் செல்கிறார்.

குருந்த மர நிழலிலே மானிட வடிவம் கொண்டு அமர்ந்திருந்த இறைவனைக் கண்டு தன்னை மறந்து, தன்னுடன் வந்தவர்களையும் மறந்து ஓடோடிச் செல்கின்றார். அங்குள்ள அடியார்களுள் ஒருவாராகத் தானும் சேர்ந்து கொண்டார்.

குதிரைகளை வாங்கவென கொண்டு சென்ற பொன் பொருள் அனைத்தையும் செலவு செய்துவிடுகிறார். இந்தச் சந்தர்ப்பத்திலே உதவிக்கு வந்தவர்கள் ஓடோடிச் சென்று பாண்டிய மன்னனிடம் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்தையும் முறையிடுகின்றனர். இதற்கிடையே குருவும் அங்குள்ள அடியார்களும் மறைந்து விடுகின்றனர். வாதவூரர் அவர்களை எங்கும் தேடினார். செய்வதறியாது அழுதார், புலம்பினார்.

இந்தநிலையிலே பாண்டிய மன்னன் சேவகரை அனுப்பி வாதவூரரை தன்னிடம் அழைத்துக்கொள்கிறான். "குதிரை வாங்கத் தந்த நாற்பத்திஒன்பது பொன்களும் எங்கே?" என்று கேட்கிறான். வாதவூரரிடம் சொல்வதற்கும் கொடுப்பதற்கும் எதுவுமே இருக்கவில்லை. மெய்ஞானத்தில் இறைவனையே சிந்தித்தபடி இருந்தார்.

பொறுமை இழந்த பாண்டிய மன்னன் வாதவூரருக்குத் தண்டனை வழங்குகிறான். வைகை ஆற்றுச் சுடுமணலில் நிற்கவைத்துத் தண்டிக்கிறான். தனது அடியவன் படுகின்ற துன்பங்களையும், கொடுமைகளையும் அருவுருவப் பொருளாகக் கண்டுகொண்ட இறைவன் காட்டில் உள்ள நரிகளை எல்லாம் பரிகளாக்கிக் கொள்கிறான். தானே அவற்றுக்கு தலைமை தாங்கி வந்து குதிரைப் படைகளை பாண்டிய மன்னிடம் ஒப்படைத்து விடுகிறான். அன்றிரவு தொழுவத்தில் நின்ற பரிகள் அனைத்தும் நரிகளாக மாறி தொழுவத்தில் நின்ற குதிரைகளைக் கடித்துக் குதறியது. இதைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் மீண்டும் சீற்றம் கொண்டு வாதவூரடிகளுக்கு பல தண்டனைகளை வழங்கி கொடுமை புரிகிறான்.

மீண்டும் அருவுருவாக வாதவூரர் அனுபவிக்கின்ற கொடுமைகளை முழுமுதற்பொருளான சிவபெருமான் கண்டு கொள்கிறார். தன் அடியவனைக் காக்கவும், அருளுரைகளை படிப்பினையாகச் சொல்லிவிடவும், வைகை ஆற்றை பெருக்கச் செய்து செம்மனச் செல்வியின் அழைப்பை ஏற்று வைகை ஆற்றை அடைக்க மானிடவேடம் பூண்டு செல்கிறான். கூலியாக பிட்டுக்கு மண் சுமந்து கொண்டு ஆற்றை அடைக்காமல் சதா உறங்குகிறான். கோபம் கொண்ட சேவகனோ சவுக்கினைக்கொண்டு வந்தவர் இறைநிலையுடையவர் என்பதை அறியாது முதுகில் ஓங்கி அடிக்கிறான்.

அடித்தஅடியானது பாண்டிய மன்னவன் உட்பட எல்லா உயிர்கள் மீதும் பட்டது. அடிவாங்கிய மன்னவனும் வாதவூரரை அழைத்து தான் செய்த பிழை குறித்து வருந்தி மன்னிப்புக்கேட்கிறான். மீண்டும் அவரை முதன்மை மந்திரியாகப் பணிபுரிய அழைத்தான். ஆனாலும் எந்தப் பதவியும் வேண்டாம் எனக் கூறி ஞானச்செம்மலாக வெளியேறினார் வாதவூரடிகள்."



> இறை மகிமையை பேசும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி போன்ற திருவாசகப் பாடல்களைப்பாடிய திருவாதவூரடிகள், புராணத்தை படித்துப் பயன் சொல்லும் நிகழ்வுகள் அன்றும் இன்றும் இடம்பெற்று வருகிறது. எமது சைவ ஆலயங்களில் பக்தி பூர்வமாக எழுந்தருளல் பெற்றுவருகிறது. ஆக, அதிகாலையில் எழுந்து பத்துதினங்களும் மார்கழிகுளிர் நீரில் நீராடி ஆலயங்களுக்குச் சென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுவோம்.

**திருவாசகம்!**

திருவாதவூரர் தனது அனுபவங்களை பாடல்களாக்கி மக்களை இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தார்.

அந்தப் பாடல்களே மணிவாசகங்கள் ஆகின. அதன் பேறுகளே திருவாசகம் என்னும் தேனாய் நமக்குக்கிடைத்தது. திருவாதவூரடிகள் மாணிக்க வாசகர் ஆனார். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்' என்ற ஆன்றோர் வாக்குப் பலதை மெய்யுரைக்கிறது.

இறை மகிமையை பேசும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி போன்ற திருவாசகப் பாடல்களைப்பாடிய திருவாதவூரடிகள் புராணத்தை படித்துப்பயன் சொல்லும் நிகழ்வுகள் அன்றும் இன்றும் இடம்பெற்று வருகிறது. எமது சைவ ஆலயங்களில் பக்தி பூர்வமாக எழுந்தருளல் பெற்றுவருகிறது. ஆக, அதிகாலையில் எழுந்து பத்துதினங்களும் மார்கழிக் குளிர் நீரில் நீராடி ஆலயங்களுக்குச் சென்று மிகவும் பக்தி சிரத்தையுடன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுவோம்.


அரும்பெரும் சோதியாகிய சிவனை வணங்கி அவன் அருள்பெற சைவசமயிகளாக முன்வந்து என்றும் அழியாத சைவசமயத்தை நிலை பெறச்செய்வோம்.

முழுமுதற்பரம்பொருளாக, அர்த்தநாரீஸ்வரனாக நர்த்தனிக்கும் சிவகாம சுந்தரி சமேத சிவசிதம்பர நடராஜப்பெருமான் மானிடராகப் பிறந்த அனைவரும் மண்ணிலே நல்ல வண்ணம் வாழ அருள் பாலிப்பாராக!




# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் இராசையா



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் இராசையா 17.12.2018 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகளும் ஆறுமுகம் - தெய்வானை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, விசாலாட்சி, பொன்னம்மா, முருகேசு, பொன்னுச்சாமி, அன்னபூரணம் மற்றும் மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அம்பலவாணர், பொன்னுச்சாமி, கந்தசாமி, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலாம்பிகை (தவம்), பரமானந்தன், சண்முகநாதன் (UK), தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் அப்புலிங்கம் (லிங்கம் கூல்பார்), நாகேஸ்வரி, ராகினி, சிவபாதசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மாமியாரும் கீதா, கீதராஜ், கீதகரன், கீதரமணன் கீதசயிலன், கவிதா, லக்சா, இந்துகன், சுவஸ்திகா, பிரிந்திகா, கீர்த்திகா, தனுறிக்கா, வசந்தகுமார், கலா, அகல்யா, ரேகா, அனுசன், செந்தூரன், சிவரூபன் ஆகியோரின் பேர்த்தியும் கபியலன், வேணுகன், பானுகன், ஹரிஸ், பிரவீணா, பிரீத்திகா, சயனுகா, மகதீஸ், பவனேஸ், சாய்ஷா, விகாசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2018) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.**

(CS/21900)(11,17)

**077 711 1410**

## நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை




இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911 / 076 821 9418 / 077 358 3879

## After O\L

**DMI COMPUTER EDUCATION**

புதிய பிரிவு ஆரம்பம்
20/12/2018 (THU) 9:30 a.m. or 3:30 p.m.
26/12/2018 (WED) 9:30 a.m. or 3:30 p.m.

IT + ENGLISH DIPLOMA

**Professional IT Courses**

- Diploma in PC Application
- Diploma in Office Automation
- Diploma In Web Designing & Development
- Diploma in Computerized Accounting
- Diploma in Business Management
- Adv. Diploma in Hardware & Networking
- Diploma in Video Production & Multimedia
- Diploma in AutoCAD
- JAVA , C#, C++ , PHP

DiTEC

DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

DIPLOMA IN ENGLISH (PART 1 + PART 2)

☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ Microsoft Online பரீட்சைகளுடாக Microsoft - அமெரிக்காவில் இருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft Specialist சான்றிதழ்கள்.
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள்

## யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்



- அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம்
- கணினி மூலமான Online Listening பயிற்சிகள்உள்ளடக்கப்பட்டுள்ளது .

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

புதிய பிரிவுகள் ஆரம்பம் Reading Writing Speaking Listening

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | |
|---|---|---|---|
| Mon,Wed,Fri 8:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 3.30 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Sat, Sun 3:30 p.m. | Tue, Thu 08.30 a.m.<br>Tue, Thu 03.30 p.m. | சுன்னாகம் Mon,Wed,Fri 11:00 a.m<br>சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 2:30 p.m<br>கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**IELTS** •Unique Test Tips •Latest course Materials

**IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

மூன்றாம் நிலைக்கல்வி, தொ[illegible] கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (ஸ்ரான்லி றோட் ஆதரவு) | M.M.V.வீதி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | சீரணிச் சந்தி | No.19,A9 வீதி, |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021 225 6665 | Tel.: 021-228 5655 |

## நத்தார், புதுவருட விசேட தள்ளுபடி



Discount 5,000/= to 50,000/=

We Accepted MasterCard VISA

நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.

SATISFACTION 100% GUARANTEE

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம் , மக்னீசியம் , மாசுக்கள் , கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.



**Water Softener System**

Tiles , Bathroom Fittings , Washing Machine களில் படியும் கல்சியம் , மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு , தொழிற்சாலை , உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.



**நீச்சல் தடாக வடிவமைப்பு**



உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து , நிறுவி , பராமரித்துத் தரப்படும்.

## Everpure Hi-Tec (Pvt) Ltd.

Jaffna: No.341, K.K.S Road, Jaffna. Tel: 021 222 6888 | 077 362 6230 Kilinochchi: 677, A9 Road, Kilinochchi, Tel: 021 228 4888 | 075 3313302

---

உதயன் விளம்பரங்களுக்கு advt@uthayan.com

## தங்கம்மா முதியோர் இல்லம்

புதுக்குளம், கனகராஜன் குளம்
இலவச சேவை

மேற்படி முதியோர் இல்லத்தில் முதியோர் தங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 55 வயதுக்கு மேற்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். எதுவித வாழ்வாதாரமும், ஆதரவும் இல்லாதவர்கள் விண்ணப்பிக்கலாம். கடும்நோயாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

024 493 1455, 077 449 9619 (AVA/444) (11.17)

## இலங்கை வங்கி
## ஏல விற்பனை அறிவித்தல்

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

**கடன் தொடர் இல. 77608724, 77608818 மற்றும் 77696682**

சுழிபுரம், தொல்புரம் என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. சண்முகசுந்தரம்பிள்ளை கஜமுகன் மற்றும் திருமதி சண்முகசுந்தரம்பிள்ளை பத்மாதேவி ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் **21.09.2018 ஆம் திகதி 2090 ஆம்** இலக்க வர்த்தமானியிலும் **10.09.2018 ஆம் திகதி "தினமின", "தினகரன்" மற்றும் " டெய்லி நியூஸ்"** ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விவரித்த சொத்தையும் நிலமனையையும் **இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ** என்னும் முகவரியைச் சேர்ந்த T&H ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்ன அவர்கள் 29.12.2018 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**
**ஆதனத்தின் விவரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைகளுள் பண்ணாகம் J/175 ஆம் இலக்க. கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த **" இத்திப்புளோ"** என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.ராமசந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188 இல் விவரித்த **துண்டு 2** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித் துண்டு **கிழக்கில்** சண்முகசுந்தரம்பிள்ளையின் விதவை பத்மாதேவி மற்றும் சண்முகசுந்தரம் பிள்ளை கஜமுகன் ஆகியோரின் சொத்தும். **வடக்கு மற்றும் மேற்கில்** குமாரமூர்த்தி விஜய குமார் மற்றும் மனைவி தமிழினியின் சொத்தும். **தெற்கில்** யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.5188 இன் பிரகாரம் 4 லாச்சம் VC மற்றும் 14.52 குளிகளும் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன். **மேற்கில்** அமைந்துள்ள கிணற்றின் மீதான பங்கும் வரைபடம் இல.3815 இல் துண்டு 5 என அடையாளமிட்ட பாதை ஊடாக கிணற்றுக்கான வழி உரிமையும் நீர்ப்பாய்ச்சல் உரிமையும் ஆகும். இக்காணி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் S17/131 இல் பதிவு செய்யப்பட்டது.

2. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வட்டுக்கோட்டை பகுதியில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைகளுள் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பகுதியில் வலிகாமம் மேற்கில் பண்ணாகம் J/175 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் வட்டுக்கோட்டை கிழக்கில் அமைந்த **" இத்திப்புளோ"** என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.ராமசந்திரன் தயாரித்த 01.12.2012 திகதியிட்ட வரைபடம் இல.5188 இல் விவரித்த **துண்டு 3** என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு **கிழக்கில்** ராமநாதனின் மனைவி ஷாந்தினியின் சொத்தும். **வடக்கில்** குமாரமூர்த்தி விஜயகுமாரின் மனைவி தமிழினியின் சொத்தும். **மேற்கில்** வரைபடம் இல.5188 இல் துண்டு 2 என அடையாளமிட்டு ராமநாதன் மால்முருகனின் சொத்தும் தெற்கில் காரைநகர் யாழ்ப்பாணம் பிரதான வீதியும் (R.D.A) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.5188 இன் படி 8 லாச்சங்கள் VC மற்றும் 7.41 குளிகள் அளவைக் கொண்டதும் அங்கு அமைந்துள்ள வீடு. கிணறு. கட்டடம் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி (யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் S14/132 இல் பதிவு செய்யப்பட்டது)

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி**

**இலங்கை வங்கி**
**யாழ்ப்பாணம் இரண்டாவது மேற்தரக்கிளை**
**திகதி :- 12.12.2018**

G.பரதன்
**கிளை முகாமையாளர்**



# பாதாம் அரிசிக் கஞ்சி

**பாதாம் : 6 அல்லது 8**
**புழுங்கல் அரிசி : 1 மேசைக் கரண்டி**
**நாட்டுச்சர்க்கரை : இனிப் புக்கேற்ப**
**உப்பு : தேவையான அளவு**
**பால் : 2 கப்**

செய்முறை:
இரவு பாதாமை சிறிது நீரில் ஊறவைக்கவும். அரிசியையும் நன்றாகக் களைந்து சிறிது நீர் சேர்த்து ஊறவைக்க வும். மறுநாள் மிக்ஸியில் (அம்மியின் பயன் பெருமளவு குறைந்து விட்டதால்) ஊறவைத்த அரிசியை நன்கு அரைத்து, பாதாமையும் தோல் உரிக்காமல் சேர்த்து நன்கு அரைத்தெடுக்கவும். அகன்ற பாத்திரத்தில் அரைத்த விழுதைச் சேர்த்து தேவையான அளவு தண்ணீர் சேர்த்து அடுப்பை மிதமானத்தீயில் வைத்து கைவிடாமல் கிளறவும். நன்றாகக் கொதி வந்ததும் பால் விட்டு, இனிப்புக்கேற்ப நாட்டுச்சர்க்கரை சேர்த்து எல்லாம் நன்றாக கலந்ததும் இறக்கி ஆறியதும் பரிமாறவும். நாட்டுச்சர்க்க ரைக்குப்பதில் உப்பும் சேர்க்கலாம்.


## விற்பனைக்கு

கிளிநொச்சியில் நவகல இன புறொய்லர் கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு. விலை 85/= ஊர்க் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. (AKN 617)(04.17)

**077 933 7287**


## கண்ணீர் அஞ்சலி



கடந்த 15.12.2018 சனிக்கிழமையன்று இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **திரு. நற்குணநாதன் சந்திரசேகரன்** அவர்களின் அன்புத் தந்தை

**ஐயாத்துரை நற்குணநாதன்**

அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி.**

## யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.12.2018) முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எமது ஒன்றுகூடல் நடைபெறும்.
பொதுச்சபை உறுப்பினர்கள் தவறாது சமுகம் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். வதிவிட மாற்றம் உடையவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள புதிதாக இணைய விரும்பும் பழைய மாணவர்களும் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். முன்மொழிவுகள் பிரே-ரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 21.12.2018 இற்கு முன்னர் எழுத்துமூலம் சமர்ப்பிக்கவும்.

**குறிப்பு :** ஆசிரியர் பழையமாணவர்களுக்கிடையில் மென்பந்து துடுப்பாட்ட (கிரிகெட்) விளையாட்டுப் போட்டியும் இடம்பெறும்.

**எம்.ஜெகதீசன்,**
**செயலாளர்,**
**190, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்**
**076 897 7875**
(CS 21910)(04.17)

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

**திருமதி விஜயலட்சுமி அம்பலவாணர்**



தோற்றம்
17.10.1945

மறைவு
21.11.2018

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரது இல்லத்தில் 21.12.2018 வெள்ளிக்கிழமை நடைபெற்று, **நண்பகல் 12 மணியளவில் தாவடி அம்பலவாண வேதவிநாயகர் திருமண மண்ட-பத்தில்** நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.60, மானிப்பாய் வீதி,**
**தாவடி, கொக்குவில்.** (CS/21867)(11.17)

**குடும்பத்தினர்.**

## நினைவலைகள்

**5 ஆம் ஆண்டு** | **26 ஆம் ஆண்டு**



தோற்றம் 23.09.1970 — மறைவு 12.01.2014

**அமரர் இரத்தினவேலு சிவகுமார்** (பெரியதம்பி)



தோற்றம் 25.02.1943 — மறைவு 09.02.1992

**அமரர் முத்துத்தம்பி இரத்தினவேலு** (சந்தனம்)

திதி:- துவாதசி

ஆண்டுகள் நகரட்டும் உருவங்கள் மறையட்டும் எம் உள்ளம் இருக்கிறதே - இதில் உங்கள் நினைவு நீங்காதிருக்கின்றது உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

தகவல்
பிறேம் நகைமாடம், மானிப்பாய் வீதி, மானிப்பாய்.

ஆலடி வைரவர் கோயிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.

மனைவி, மக்கள், மருமகன்,
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.


**கோடிபதி சனிதா** KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 382
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.18

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 106,484,163/-

A 08 48 56 59

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 468
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.18

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,177,035/-

வெற்றி இலக்கங்கள்
13 29 65 71 B

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**நியத ஜய** நியத்த ஜய Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம் : 729 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2018.12.18

வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
22 25 39 59 T

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 19,485,548/-

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 896
சீட்டிழுப்பு திகதி 2018.12.17 திங்கட்கிழமை

M 45 52 53 63

அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 41,834,692/-

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

பச்சை நிற டிக்கட்டுகள் 2018.12.20ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 18.12.2018 | 2419 | நீலம் |

துலாம்
வெற்றி இலக்கங்கள் 04 34 53 54

புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,221,660 /=

2018.12.19 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் பட்டதாரிக் கற்கைகள் பிரிவு திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

நீங்களும் ஒரு பட்டதாரி ஆகலாம்!

**Fast Track Degree Programme - One Year**

**கல்வியாண்டு 2019 / 2020 (ஆங்கிலம் / தமிழ்)**

கற்கைகள்

*BA in English
* BBA in Management
*BA in Education
*BSc in Engineering
* BSc in Psychology
*BA in Fine Arts
* BSc in Computer Science
*BSc in Nursing

UGC APPROVED

▾ அடிப்படை தகைமை GCE (A/L) விரிவுரைகள் வாரத்தில் ஒருநாள்
▾ விண்ணப்ப முடிவு திகதி :- 21.12.2018 ▾ கருத்தரங்கு : 23.12.2018

புதிய பிரிவுகள் ஆரம்பம் – 05.01.2019

குறிப்பு:- கல்வியாண்டு 2017/ 2018 இல் இதுவரை ஆய்வுச்சுருக்கம், ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்காதவர்களுக்கான இறுதித் திகதி 31.12.2018

**IPS City Campus**
கலாநிதி N.தணிகாசலம்பிள்ளை - இணைப்பாளர்
T.P:- 021 450 8489/ 077 602 1794
Email:- degreeinfo08@gmail.com
(CS/21916)(11.17)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23.10.1936 — மறைவு 30.12.2017

**கனகம்மா நடராசா**

*திதி :துவாதசி (19.12.2018)*

எம் உயிரின் பாதி
உங்களுடன் உதிர்ந்ததம்மா
ஆருயிர் அன்னையே...
நீர்தந்த அன்பின் நிழலில் வாழும் உன்.......

**குடும்பத்தினர்.**
**(பாலாவி)**
(IN/8749)(04.17)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 20.11.2018 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர்



## கதிரவேற்பிள்ளை அரியரட்ணம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (20.12.2018) வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனை 21.12.2018 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ் நிலைய வீதி,
வல்வெட்டி. 021 226 5932, 077 159 0630

**குடும்பத்தினர்.**

---

# எகிப்தில் 4,400 ஆண்டுகளுக்கு முந்தைய பிரமிட்டுகளுடன் கூடிய கல்லறை கண்டுபிடிப்பு



எகிப்து தலைநகர் கெய்ரோவில் சுமார் 4,400 ஆண்டுகள் பழமையான பிரமிட்டுக்களைக் கொண்ட கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டில் தலைநகர் கெய்ரோ அருகில்புதைபொருள்ஆராய்ச்சியாளர்கள் பழமையான புதைபொருள்கள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஆராய்ச்சியில் 4,400 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையான கல்லறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்லறை, கெய்ரோவில் உள்ள சக்காராபிரமிட்வளாகம்அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கல்லறை, அங்கு வாழ்ந்த 'வாட்யே' என்னும்அரசகுருவுக்கு உரியது எனத் தெரியவந்துள்ளது. அந்தக் கல்லறையில் பல்வேறு அழகிய ஓவியங்கள், சிற்பங்கள் உள்ளன. மேலும், அரசகுரு மற்றும் அவரது குடும்பத்தினரின்சிலைகளும், பல்வேறுகல்வெட்டுகளும் காணப்படுகின்றன. அரசகுரு இந்தஇடத்தில்புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. எகிப்து ஆராய்ச்சியாளர்கள் இதுகுறித்து தொடர்ந்து ஆராய்ச்சி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் அரச குடும்பத்தினர் மற்றும் பழமையான நிகழ்வுகள் குறித்த தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி (லண்டன்)



*பிறப்பு* *14.02.1943* *இறப்பு* *17.12.2018*

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானில் வசித்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி நாகரத்தினம் இரத்தினேஸ்வரி 17.12.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - காசுவதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும் சிறிரங்கேஸ்வரன் (சிறி - இந்தியா), தனேஸ்வரி (ஈஸ்வரி - லண்டன்), கேதீஸ்வரி (பேபி - லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்), காலஞ்சென்ற லோகேஸ்வரன் (ராசன்), சத்தியேஸ்வரன் (ஈசன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நவலட்சுமி (கொழும்பு), தயாளினி (இந்தியா), ஸ்ரீகணநாதன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), எழிலரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகலிங்கம், கலைவாணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் நாகம்மாவின் அண்ணியும் நவரூபன் (லண்டன்), பானுஜா, பதுஜா (இந்தியா), ஸ்ரெப்பான், சந்துரு, சந்துவி, சங்கவி, சந்துஜன், சாகசன், ஹரீஸ், அருண், ஆரணி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆரன், ஆசன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: சகோதரர்கள் - புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரன், வில்வராசா.**

---

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 • 07 • 1934



மறைவு 17 • 12 • 2018

## திருமதி. தயாநிதி செல்வநாயகம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாநிதி செல்வநாயகம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகம்) 17.12.2018 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம் சென்ற மேவின்.சீனித்தம்பி பொன்னையா, காலம்சென்ற மீனாட்சி பொன்னையாவின் சிரேஸ்ட புதல்வியும், காலம் சென்ற Professor சோமசுந்தரம் செல்வநாயகம் (Dept of Geography, யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு மனைவியும், Dr.செல்வநாயகம் நிரஞ்சன், காலம் சென்ற செல்வநாயகம் நிர்மலன், Dr.செல்வநாயகம் நிர்த்தனன், செல்வநாயகம் நிருத்திகா அவர்களின் அன்புத் தாயாரும், காலம் சென்ற பொன்னையா தயாபரன்(Engineer), காலம் சென்ற பொன்னையா தயாநேசன், திருமதி தயாரதி சீவரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.யயோதா சண்முகராஜா, Dr.பத்மினி சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியும், நவின், நிர்த்தின், நித்தாரா ஆகியோரின் அன்புப்பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் புதன்கிழமை 19.12.2018 காலை 8.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரை வைக்கப்பட்டு வியாழக்கிழமை 20.12.2018 காலை 8.30 மணி முதல், கிரியைகள் நடைபெற்று, பி.ப 2.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதன்பின் பொரளை கனத்தை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர். தொடர்பு : 0773492504**

---

THE HALO TRUST

# அனுபவமுள்ள வாகனத்திருத்துனர்களுக்கான (MECHANICS) பதவி வெற்றிடம்

ஹலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக்கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமது வாகனத்திருத்தகத்திற்கும் மற்றும் இயந்திர மூலம் மிதிவெடி அகற்றும் உபகரணங்களைத் திருத்துவதற்காகவும் அனுபமுள்ள இயந்திரத்தொகுதி. வாகனத்திருத்துனர்களை (MECHANICS) ஆட்சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

**அத்தியாவசிய தகுதிகள்:**

- குறைந்தது மூன்று வருடங்கள் இத்தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- கடினவேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகாரோக்கிமுடையவராகவும் இருக்க வேண்டும்.
- கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
- செல்லுபடியான வாகன ஓட்டுனர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

பயனுள்ள (இருப்பினும் அத்தியாவசிய) அனுபவம்/ தகுதிகள்:

- இலத்திரனியல் கட்டுப்பாட்டு முறைகள்/நீரியல் முறைகள் பற்றிய அறிவு.
- ஆங்கிலப்பேச்சுத்திறன்

அனுபவம் மற்றும் திறனைப் பொறுத்து சம்பளம் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விபரங்கள் அடங்கிய விபரங்களைக் கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

**ஹலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

**அனைத்து விண்ணப்பங்களும் 26 மார்கழி 2018 புதன்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

(CS 21904)(4.17)

---

# கண்ணீர் அஞ்சலி



*மலர்வு* *உதிர்வு*
*26.09.1960* *17.12.2018*

எமது நிறுவனப் பணியாளர்

**மதுர்சன்**

அவர்களின் அன்புத் தந்தை

## கந்தையா கேதீஸ்வரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**பணிப்பாளரும் பணியாளர்களும்**
**கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்.**

(C 8754/15/18)

## சம்பந்தனுக்குச்...

வல் பூத்தார். இரா.சம்பந்தனும் சிரித்தவாறு இருந்தார். நாடாளுமன்ற அமர்வில் இருந்து வெளியே சென்றபோது மகிந்த ராஜபக்ச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்குக் கைலாகு கொடுத்து சிரித்தவாறு சில விநாடிகள் உரையாடினார்.

நாடாளுமன்ற அமர்வுகள் நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. அதில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் சூடு பிடித்தது. அது தொடர்பில் விவாதங்கள் நடைபெற்றன. எதிரணி வரிசையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அருகில் அமர்ந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச, இரா.சம்பந்தனைப் பார்த்துப் பல தடவைகள் புன்முறுவல் பூத்தார். அந்தச் சந்தர்ப்பங்களில் இரா.சம்பந்தனும் சிரித்தவாறு இருந்தார்.

பிற்பகல் 2.15 மணியளவில் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமையை ஒழிப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் ஆரம்பமானது. மகிந்த ராஜபக்ச தனது சகாக்கள் சிலருடன் சபையை விட்டு வெளியேறினார். அப்போது சபையில் இரா.சம்பந்தனுக்குப் பின் இருக்கையில் அமர்ந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்குக் கைலாகு கொடுத்தார். அவரின் கைகளைச் சில விநாடிகள் பற்றியவாறு சிரித்தவாறு உரையாடிவிட்டுச் சென்றார்.

நேற்றை அமர்வில் மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றியிருந்தார். (ற-10)

## அரசு...

மன்ற உறுப்பினர்கள் அரசின் பக்கம் தாவினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களான விஜித் விஜிதமுனி சொய்சா, இந்திக பண்டார நாயக்க, லக்ஸ்மன் செனவிரட்ண ஆகியோர் சபைக்குக் குறுக்காகச் சென்று அரசின் பக்கம் சென்று அமர்ந்து கொண்டனர்.

அவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் பெரும் வரவேற்பளித்ததுடன், கட்டித் தழுவி ஆரவாரித்து முன்வரிசை ஆசனங்களில் அமரவைத்தனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குத் தாவிய பியசேன கமகேவும் அரசின் பக்கம் சேர்ந்து கொண்டுள்ளார். (ற-10)

## கட்சி...

பதவிகள் வழங்க மாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கட்சியின் மத்திய குழுவுக்கு உறுதியளித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முடிவுக்கு அப்பால் செயற்படுபவர்களுக்கு எந்த அமைச்சரவையும் வழங்கப்படாது என்று அரச தலைவர் உறுதியளித்துள்ளார் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித் விஜிதமுனி சொய்சா, இந்திக பண்டாரநாயக்க, லக்ஸ்மன் செனவிரட்ன ஆகியோர் நேற்று நாடாளுமன்றில் ஆளும்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டனர்.

ஆளும் கட்சிக்கு வருவோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியிலேயே அரச தலைவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்க மாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய விஜித் விஜிதமுனி செய்சா, மகிந்த ராஜபக்ச நல்லவர். ஆனால் அவருடன் நாய்கள், ஓநாய்கள் கூட்டம்தான் உள்ளது என்று தெரிவித்திருந்தார்.

நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவனே. நான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவில்லை. அரசில் நிலைத்தன்மைக்காகப் போராடும் ஒரு கூட்டமைப்புடன் என்னை இணைத்துக் கொண்டுள்ளேன். மக்களையும் எனது ஆதரவாளர்களையும், எமது மாவட்டத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்று அவர் தெரிவித்திருந்தார். (ற-10)

## போர்க்குற்றம்...

ஆனால் இராணுவத்தினர் எவரும் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது உரை ஒன்றில், போர்க் காலத்தில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு பக்கத்திலும் தவறுகள் நடந்தன. தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் பலர் வெளிநாடுகளில் சுதந்திரமாக வாழ்கின்றனர். அப்படியிருக்கையில் இராணுவத்தினர் மீது மாத்திரம் குற்றஞ்சுமத்துவதை ஏற்க முடியாது. சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமாயின் போர்க் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இராணுவத்தினருக்கும் அதிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே இராணுவப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது;

அரச தலைவரின் உரையை நான் முழுமையாகக் கேட்டிருந்தேன். அதில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற தொனியிலான கருத்தை அவர் முன்வைக்கவில்லை. போர்க் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினர் எவரேனும் இருப்பார்களானால் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேயே அரச தலைவரின் கருத்து அமைந்திருந்தது.

நேரடியான கருத்து என்னவெனில் இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை. அவ்வாறு ஈடுபட்டவர்கள் இருப்பின் மாத்திரம் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதாகும். இராணுவத்தினரும் அதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். நாம் எந்தவிதமான போர்க் குற்றங்களிலும் ஈடபடவில்லை - என்றார்.

அதேவேளை, இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று இதுவரை காலமும் அரசும், ஏனைய தரப்பினரும் தெரிவித்து வந்தனர். தற்போது அரச தலைவர் குறிப்பிட்டுள்ள கருத்து இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என்ற மறைமுகப் பொருளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். (ற-31)

## பைத்தியத்துக்கு...

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்று அதிகார முறைமையை ஒழிக்கக் கோரும் சபை ஒத்திவைப்பு வேளைத் தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகார முறையை ஒழிக்க வேண்டும் என்பதற்குக் கடந்த 50 நாள்களே போதுமானவை. நிறைவேற்று அதிகாரத்தின் கொடிய முகத்தை மக்கள் நேரடி அனுபவத்தில் கண்டுள்ளனர். நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பேன் என்று வாக்குக் கொடுத்தவர். அந்த அதிகாரத்தைக் கொண்டு 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழிக்கப் பார்க்கின்றார்.

கலாநிதி என்.எம்.பெரேரா, நிறைவேற்று அதிகாரக் கதிரையில் ஒரு பைத்தியக்காரன் அமர்ந்தால் என்ன நடக்கும் என்று கேட்டிருந்தார். அதற்கான விடை எமக்கு 40 ஆண்டுகளில் கிடைத்துள்ளது. அப்படி ஒருவர் அமர்ந்தால் என்ன நடக்கும் என்பதைக் கடந்த 50 நாள்களில் நேரடியாகக் கண்டுள்ளோம். நிறைவேற்று அதிகார முறைமையை மட்டுமன்றி, அரச தலைவர் முறைமையைக் கூட ஒழிக்க வேண்டும் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துள்ளனர்.

19 தடவைகள் அரசமைப்புத் திருத்தப்பட்டபோது மக்களின் அபிப்பிராயம் பெறப்படவில்லை. நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் தீர்மானம் தொடர்பாக மக்களின் அபிப்பிராயம் பெறப்பட வேண்டும். அதை 225 பேர் தீர்மானிக்கக் கூடாது. 159 லட்சம் மக்களும் தீர்மானிக்க வேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்த அரச தலைவர்கள் அனைவரும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்போம் என்றனர். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. தற்போது தலைமை அமைச்சராகியுள்ள ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றுத் தாருங்கள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்போம் என்கின்றார். ஆனால் அவரும் அதைச் செய்யப் போவதில்லை.

எவருக்கும் பெரும்பான்மை இல்லாத தற்போதைய தருணமே நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கான சிறந்த தருணம் - என்றார். (ற-10)

## வடக்கு...

விழுந்துள்ளன.

முல்லைத்தீவுக் கடல்பகுதியும் கடந்த சில தினங்களாக அசாதாரண நிலையுடன் காணப்படுகின்றது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். முல்லைத்தீவு, மாத்தளன், புதுமாத்தளன், பொக்கணை, செல்வபுரம் ஆகிய இடங்களில் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகுந்துள்ளது. அதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. செல்வபுரத்தில் கடல் சீற்றத்தால் கடல் அட்டைகள் சில கரைகளில் ஒதுங்கின என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் தென்னைகள் பாறி விழுந்துள்ள நிலையில் மருதங்கேணி கிழக்குப் பிரதேச செயலகத்தினர் அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

"வழமையாக சுண்டிக்குளம் கடற்பரப்பில் இப்படியான மாற்றங்கள் தென்படுவதில்லை. இப்போது தென்னை மரங்கள் பாறி விழுந்துள்ளன. கடல் அலையின் வேகம், காற்றின் வேகமும் அதிகரித்துள்ளது. 18 தென்னை மரங்கள் பாறி விழும் நிலையில் உள்ளன. தற்காலிக ஏற்பாடாக ஜேசிபி இயந்திரம் மூலம் மண் அணை ஏற்படுத்தவுள்ளோம் - என்று மருதங்கேணி கிழக்குப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ற-7,26)

(தொடர்புடைய செய்தி 28ஆம் பக்கத்தில்)


## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை நற்குணநாதன்

(ஓய்வு பெற்ற கணக்காளர் – திறைசேரி, கொழும்பு, உணவுக் கட்டுப்பாடு திணைக்களம், அகில இலங்கை சமாதான நீதவான், இணக்க சபை உறுப்பினர், வலிவடக்கு, முன்னாள் வலி வடக்கு, பிரதேச சபை உறுப்பினர் )



தோற்றம் 25.02.1939 மறைவு 15.12.2018

குட்செட் வீதி காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, மருதனார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நற்குணநாதன் 15.12.2018 சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை — விசாலாட்சி தம்பதியரின் அன்புமகனும் காங்கேசன்துறை சந்தை வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா — சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இந்திராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் நேச மலர், இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரசேகரன் (நூலக உதவியாளர் - வலி வடக்கு, பிரதேசசபை), நிரஞ்சலா (டடா - கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் இந்திராகாந்தி, நந்தகுமார் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் அபிராம், சாய்சங்கர், வித்தியா, விதுர்சன், வைஷ்ணவி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2018) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருப்பதி,
மானிப்பாய் வீதி, மருதனார்மடம். (CS 21917/15/18)

தகவல் :
ந. சந்திரசேகரன் (மகன்)
077 430 6678, 021 224 1330

### திருமதி நகுலேஸ்வரி நவரத்தினம்



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் நகுலேஸ்வரி கடந்த (14.12.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் வைத்திலிங்கம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் கதிர்காமநாதன், சண்முகநாதன் ஆகியோரின் ஆசைத் தங்கையும் கீதறஞ்சினி, காலஞ்சென்றவர்களான கீதநஞ்சன், ஞானறஞ்சன் மற்றும் சாந்தி, தீபறஞ்சன், நித்தியானந்தன், வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவறஞ்சினி, காந்தமலர், கயந்தா, சிவசங்கர் ஆகியோரின் அன்பு மாமியாரும் துர்ஷாணியா, யவர்ணிகா, அஸ்வந்னா ஆதிரை, ஹம்சன், சஞ்ஜனா, ஹரீஸ், அனுஸ்கா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் செல்லம்மா, செல்லத்துரை, இராசமணி, துரைராசா, கணேசலிங்கம், பாலசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2018) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தி தச்சுச்தொழிலகம்,
சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்.

(C 8756/15/18)

பிறப்பு 14 . 01 . 1966



இறப்பு 18 . 12 . 2018

### ஆறுமுகம் சிவகுமார் (சிவா)

ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவகுமார் (சிவா) 18.12.2018 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சரஸ்வதி தம்பதியரின் மகனும், வசந்தாவின் அன்புக் கணவரும், மங்கையகரசி, பரமேஸ்வரன், காலஞ்சென்றவர்களான கமலாவேணி, விசுவநாதன், யோகேஸ்வரி மற்றும் மணி (சுவிஸ்), உருத்திரகுமார் சற்குணாநாதன், உமா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2018) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா தெக்கவத்த மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரிகள் (சுவிஸ்)

(CS/21912)(10)

# அம்பாறையில் மினி சுனாமி!



அம்பாறை.டிசெ.19
அம்பாறை மாவட்டத்தின் நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரப் பகுதிகளை நேற்றுமுன் தினம் வழமையிலும் பார்க்க வலுக்கூடிய கடல்அலைகள்தாக்கின. அண்ணளவாகப் பத்து அடிவரை உயர்ந்து வந்து அலைகள் கரையைத்தாக்கின. வங்கக்கடலில் நகர்ந்து செல்லும் புயல் காரணமாக அம்பாறை, கல்முனை, பாண்டிருப்பை அண்மித்த கடல் பகுதியில் அலைகளின் சீற்றம் அதிகரித்துக் காணப்பட்டது. நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரத்தில் உள்ள மீனவர்களின் வாடிகள், வலைகள், படகுகள்என்பன இதனால்சேதமாகின. பாண்டிருப்பு, கல்முனை வரையானபகுதிகளில்தென்னை மரங்கள், மீனவர்களது உடமைகள் இழுத்துச்செல்லப்பட்டன. இந்தச் சேத விவரங்களைத் திரட்டும் பணியில் கிராம அலுவலர்கள் ஈடுபட்டார்கள்.

# கடனட்டையைக் களவாடி இலட்சக்கணக்கில் பண மோசடி

பதுளை.டிசெ.19
சுற்றுலாப் பயணியாக இலங்கைக்கு வருகை தந்தஆஸ்திரேலியாநாட்டு யுவதிஒருவரின்கடன்அட்டையிலிருந்து 10இலட்சத்து 8ஆயிரத்து 40 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. பதுளை - எல்ல பிரதேசத்துக்குச் சுற்றுலா நிமித்தம் பயணித்து, அங்குள்ள விடுதியொன்றில் தங்கியிருந்தபோது குறித்த பெண்ணின் கடன் அட்டை திருட்டுப்போயுள்ளது.
போயுள்ளது. பின்னர் அந்தக்கடனட்டையைப்பயன்படுத்தி வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பியிருப்பதும், பண்டாரவளை மற்றும் கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பிரபல வர்த்தக நிலையங்களில் ஆடம்பரப் பொருள்கள், உயர் ரக மதுபான வகைகள் ஆகியவை கொள்வனவு செய்திருப்பதும் பதுளைப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையிலிருந்து தெரிய வந்தது. பின்னர் அந்தக் கடனட்டையைப் பயன்படுத்துவது நிறுத்தப்பட்டது.
இந்த அட்டையைப் பயன்படுத்திப் பண மோசடியில் ஈடுபட்டவர்கள் குறித்துப் பதுளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# விண்ணப்பங்கோரலை உடன்நிறுத்துக கிழக்கின்முன்னாள்முதல்வர்அறிவிப்பு

கிழக்குமாகாணப்பாடசாலைகளில்நிலவும்ஆசிரியர்வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கோரப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் உடன் நிறுத்தப்பட்டுமீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். என்றுகிழக்குமாகாணமுன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்அறிவிப்புவிடுத்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
"கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பட்டதாரிகளுக்கு மேலதிக மாகபதுளை,பொலநறுவை, அனுராதபுரம், கண்டி, மாத்தறை, குருநாகல் மாவட்டத்தில் வாழும் பட்டாதாரிகளுக்கும் நியமன வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆராய்வது அவசியம். கிழக்கில் கிட்டத்தட்ட 5 ஆயிரத்து400இக்கும்அதிகமான பட்டதாரிகள் இந்த வேலைவாய்ப்புக்காகக் காத்திருந்தனர். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொண்ட ஆலோசனைக்கு அமைய இவர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்குவது எனவும், முதற்கட்டமாக ஆயிரத்து 700 பேருக்கு வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. மாகாணசபைஊடாக நியமனங்களை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள்நடந்தன.
வெளிமாவட்டங்களைச் சேர்ந்தோர் உள்வாங்குவதை ஏற்கவில்லை.
மாகாணசபைகலைக்கப்பட்டதும் இது காலதாமதத்துக்கு உள்ளானது. பின்னர் ஆயிரத்து 300 நியமனங் களை 2017 நவம்பரில் ஆளுநர் வழங்கினார். அதில்விடுபட்டவர்களுக் கான நியமனங்களை வழங்குவதற்கே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டன. கிழக்கு மாகாணப்பட்டதாரிகளின்வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டுமேற்கொள்ளப்பட்ட இதைநியாயமற்றமுறையில் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.
கடந்தகாலங்களில்ஆளுநர்களின் அதிகாரங்களின் ஊடாக மாகாணத்தைத் தவிர்ந்த பட்டாதாரிகள் நியமனங்களைப் பெற்றுச் சிறிது காலத்தில் இடமாற்றங்களைப்பெற்றுதத்தமதுமாவட்டங்களுக்குச்சென்றதன்காரணமாகவெற்றிடங்கள்ஏற்பட்டன.
எனவே, இந்த விண்ணப்பங்கோரலை உடன் நிறுத்த வேண்டும்" - என்றார்.

# வவுணதீவு விவகாரத்தில் கைதானவரின் மனைவி கைக்குழந்தையுடன் இரவு பகலாக உணவு தவிர்ப்பில்

## தொடர்ந்த போராட்டத்தை நிறுத்தினர் பொலிஸார்

மட்டக்களப்பு.டிசெ.19
வவுணதீவில் பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில்கைதுசெய்யப்பட்டவரைவிடுதலைசெய்யுமாறு கோரி, கைதானவரின் மனைவி தனது நான்கு பிள்ளைகளுடன் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கடந்த திங்களன்று உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். இரவு பகலாகத் தொடர்ந்த அவருடையபோராட்டம்பொலிஸாரின்தலையீட்டால்முடிவுக்குக்கொண்டு வரப்பட்டது.



வவுணதீவில் பொலிஸார் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பில் சி.இராஜகுமாரன் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவரது மனைவிசெல்வராணிமற்றும் பிள்ளைகளே இவ்வாறு உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். கணவன் கைதுசெய்யப்பட்டு 18நாள்கள் கடந்துள்ள நிலையில், இதுவரையில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது தொடர்ந்தும் அவர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், அவரை விடுவிப்பதற்கு நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனவலியுறுத்தியே இவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். "எனதுகணவர்எந்தக்குற்றமும் செய்யவில்லை. அதைப்பொலிஸாரும்கூறுகின்றனர். ஆனால் அவரை ஏன் தொடர்ந்து தடுத்துவைத்துள்ளார்கள் என்று தெரியவில்லை. எனதுகணவனேஎங்கள்அன்றாட வாழ்வை நகர்த்தி வந்தார். இப்போது அவர் இல்லாமல் கைக்குழந்தைகளுடன் கடுமையானதுன்பத்தைநான்எதிர்நோக்குகிறேன்" என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த செல்வராணி தெரிவித்தார்.
திங்கட் கிழமை காலையில் ஆரம்பமான இவர்களின் போராட்டத்தை மறுநாள் மட்டக்களப்பு மாவட்டப் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரிநிறுத்திவைத்தார். போராட்டத்தில் ஈடுபட்ட செல்வராணியிடம் மேற்கொண்ட பேச்சுக்கு இணங்கப் போராட்டம் கைவிடப்பட்டது.
இந்தப்போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாகத்தேசத்தின்வேர்கள் அமைப்பின்உறுப்பினர்கள், மட்டக்களப்பு மாவட்டப் பெண்கள் அமைப்புக்கள், பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# செய்தியாளர் மீது தாக்குதல்

அம்பாறை - அட்டாளைச்சேனையைச் சேர்ந்த செய்தியாளர் கே.ஏ. ஹமீட் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தாக்குதலுக்குள்ளான செய்தியாளர் அட்டாளைச்சேனை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார். சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மருமகன் தன்னைத் தாக்கியதாகப் பொலிஸ் முறைப்பாட்டில் அவர் தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை இரவு அவர் தனது வீடுநோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகவும், அதன்போது வழிமறித்த குறித்த நபர் தன்னைத் தாக்கியதாகவும் அவர் பொலிஸ் முறைப்பாட்டில் கூறியுள் ளார். அதே பகுதிலுள்ள ஓர் இளைஞரையும் செய்தியாளரைத் தாக்கிய அதே நபர் தாக்கியுள்ளார். அந்த இளைஞரும் அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தியத்தலாவையில் திருட்டு

பதுளை.டிசெ.19
பதுளை தியத்தலாவை நகரில் ஓர் இரவில் ஐந்து வர்த்தக நிலையங்களில் பெருந்தொகையான பொருள்கள் மற்றும் பணம் திருடப்பட்டன. இந்தச்சம்பவம்நேற்று இரவு இடம்பெற்றது. தியத்தலாவை நகரிலுள்ள பலசரக்குப் பொருள்கள் விற்பனை செய்யும் கடைகள் இரண்டிலும், வாகன உரிதிப் பாகங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலும், அழகியல் பொருள்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலும், எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றிலுமாக ஐந்து வர்த்தக நிலையங்களில் இந்தத் திருட்டுக்கள் இடம்பெற்றன. இவற்றில் ஒரு கடையில் கூரையைப் பிரித்து உட்புகுந்தும், ஏனைய நான்கு கடைகளில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு உட்புகுந்துமே, திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன. திருடப்பட்டவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு வருகிறது.
தியத்தலாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த பண்டார தலைமையிலான குழுவினர் இது குறித்து, விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

# விழிப்பூட்டும்ஊர்வலம்





மட்டக்களப்பு.டிசெ.19
போதைப் பாவனை, சிறுவர்களைத் தவறாகக் கையாளுதல், புகைத்தல் மற்றும் குடும்பவன்முறைஎன்பவற்றுக்கு எதிராக மட்டக்களப்பில் பொதுமக்கள் நேற்று விழிப்புணர்வு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.
மட்டக்களப்பு -செங்கலடி கிறிஸ்தவ குடும்ப சபையால் இந்த ஊர்வலம்ஏற்பாடுசெய்யப்பட்டது. போதகர்எஸ். ஜேசுதாசன் இதற்குத் தலைமை தாங்கினார். இதுசெங்கலடிப்பிரதேசத்தில்ஆரம்பமாகி மட்டக்களப்பு - திருகோணமலை முதன்மை வீதிவழியாகப் புன்னக்குடா சென்று ஏறாவூர் பொதுச்சந்தை முன்றலில் தரித்துப் பின்னர் அங்கிருந்து ஏறாவூர் ரயில் நிலைய வீதிவழியாக ஏறாவூர் காளி கோவிலைச் சென்று நிறைவடைந்தது. கிட்டத்தட்ட 3கிலோ மீற்றர்கள் வரை நடந்த இந்த விழிப்பூட்டும் ஊர்வலத்தில், பெரும்தொகையான வாகனங்கள், பொதுமக்கள் கலந்துகொண்டதுடன்துண்டுப்பத்திரிகைகளும்விநியோகிக்கப்பட்டன.

## புதிய...

பட்டுள்ளது. அந்தப் பட்டியல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளது.

அபிவிருத்தி, மீள்குடியேற்றம் ஆகிய அமைச்சுக்களுக்கு நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட மலிக் சமரவீர அமைச்சரவைப் பட்டியலில் ஏற்பட்ட நெருக்கடி நிலமை காரணமாக விலகியதால் அந்த அமைச்சுக்கள் மங்கள சமரவீரவின் வசம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிதி, உட்கட்டுமானம், அபிவிருத்தி என்பன தலைமை அமைச்சர் ரணில் வசம் செல்லும் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, நாளை (இன்று) அமைச்சரவை பதவியேற்பு நடைபெறும். நிதி அமைச்சர் உட்பட 15 தொடக்கம் 20 வரையான அமைச்சர்கள் நாளை (இன்று) பதவியேற்பார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

சட்டம், ஒழுங்கு அமைச்சர் தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. எஞ்சிய அமைச்சர்கள் அடுத்த சில நாள்களில் பதவியேற்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-105.10)

## வடக்கு, கிழக்கு...

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் ஜயதிஸ்ஸ நேற்று நாடாளுமன்றில் முன்வைத்த நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை இல்லாதெழிக்கும் தீர்மானம் மீதான ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் பலவந்தமாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தை 19ஆவது திருத்தத்தில் நீக்கினோம். அவ்வாறு செய்திருக்காவிடில் நாடாளுமன்றத்தைத் தற்போது எம்மால் நடத்த முடியாது போயிருக்கும்.

உயர்நீதிமன்றின் தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது. தான்தோன்றித்தனமான அதிகாரம் நிறைவேற்றுத் துறைக்கு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 50 நாள்களில் நிறைவேற்று அதிகார முறைமை எவ்வளவு பாதகத் தன்மை வாய்ந்தது என்று நாட்டு மக்களுக்குப் புரிந்திருக்கும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் நிறைவேற்று அதிகார முறைமை பாதுகாப்பானது என்று எண்ணினர். அதன் பாதகத் தன்மை இப்போது அவர்களுக்கும் விளங்கியிருக்கும். தமிழ், சிங்களம், முஸ்லிம் என அனைத்து மக்களின் அடிப்படை உரிமைகள் கடந்த 50 நாள்களில் நிறைவேற்று அதிகாரம் மூலம் பறிக்கப்பட்டிருந்தது.

நிறைவேற்று அதிகாரம் இல்லாவிட்டால் நாடு பிளவுபடும், அரசியல் நிலையற்ற நிலமை ஏற்படும், நாடு 9 துண்டுகளாகப் பிளவுபடும் என்று பொய்ப் பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் அவை அனைத்தும் நிறைவேற்று அதிகாரத்தால் தான் இவை அனைத்தும் ஏற்பட்டுள்ளன. பௌத்த தலைவர்கள் அரசியல்வாதிகளின் பேச்சைக் கேட்டு, நிறைவேற்று அதிகாரத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றனர். அவர்களும் உண்மை நிலமையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

20ஆவது திருத்தச் சட்டத்தில் நாட்டைப் பிளவுபடுத்தும் சரத்து எதுவும் இல்லை. பொய்யான பரப்புரைகளை முன்னெடுத்து மக்களைக் குழப்பப் பார்க்கின்றனர். நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் நாம் என்றும் செயற்பட்டதில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டது. அவை பலவந்தமாக இணைக்கப்பட்டன என்று நாம் போராடி வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரித்தோம். மீண்டும் அவை இணைய அனுமதிக்க மாட்டோம். நாட்டைப் பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். நாட்டை ஒன்றிணைப்பதற்காக 60 ஆயிரம் பேர் வரையில் எமது போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்தனர்.

தேசிய சகவாழ்வை ஏற்படுத்தப் போராடுபவர்கள் நாங்கள்தான். எம் அனைவருக்கும் சிவப்பு இரத்தமே ஓடுகின்றது. நாட்டின் சமத்துவத்தை ஏற்படுத்தி அனைத்து இன மக்களினதும், உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அரச தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற முடியாது. அதனால் நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்து அவருக்கான பாதையை ஜே.வி.பி. திறந்துவிடப் பார்க்கின்றது என்று எம்மீது சேறு பூசுகின்றனர்.

நாங்கள் ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றோம். இதனால் அதிகம் நன்மை மகிந்த ராஜபக்சவுக்கே கிடைக்கும். மக்களிடம் அவர் மீண்டும் அரச தலைவர் வேட்பாளராகச் செல்ல முடியாது. ஆனால் தலைமை அமைச்சர் வேட்பாளராகச் சென்று வாக்குக் கோர முடியும்.

நிறைவேற்று அதிகாரத்தால் மைத்திரிபால சிறிசேன, மகிந்தவைத் தூக்கி நிலத்தில் அடித்துள்ளார். 20ஆவது திருத்தத்தை நாங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளோம். அதில் திருத்தங்கள் செய்ய நாங்கள் தயாராகவுள்ளோம். அனைவரினதும் விருப்பத்துடன் அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும் - என்றார். (ந-10)

## எதிர்க்கட்சித்...

வேண்டும். அதுவரையில் சம்பந்தனே எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர வேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றம் நேற்று முதல் தடவையாகக் கூடியது. ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இணைந்து இதுவரை கூட்டு அரசு அமைத்திருந்தன. கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி கூட்டு அரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு விலகுவதாக அறிவித்தது.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி வரிசையில் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினர் அமர்ந்திருந்தனர். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினர் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தமது தரப்பு எதிர்க்கட்சியாகச் செயற்படும் என்றும், எதிர்க்கட்சித் தலைவராக மகிந்தவை நியமிக்குமாறும் சபாநாயகரிடம் கோரிக்கை முன்வைத்தது. அந்தக் கோரிக்கையை சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்புக்கு உடனடியாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல எதிர்ப்பு வெளியிட்டார்.

'மகிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் இருந்து விலகி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் உறுப்புரிமை பெற்றுள்ளார். நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்படாத கட்சியொன்றில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு மாதத்தில் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்க நேரிடும். சபைக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே பலர் வந்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் ஒருவருக்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஒருவருக்கு அந்தக் கட்சியின் பெயரில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்குவதை ஏற்க முடியாது" என்று லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக நியமித்த தீர்மானத்தில் இரண்டு சிக்கல்கள் உள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு எதிர்க்கட்சியில்தான் உள்ளதா? ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர், நாட்டின் அரச தலைவர். அதில் பிரச்சினையில்லை. ஆனால் அவர் வசம் மூன்று அமைச்சுக்கள் உள்ளன. அமைச்சுக்களை வைத்துக் கொண்டு அமைச்சரவையின் தலைவராகவும் அவர் செயற்படுகின்ற நிலையில், அவரது கட்சி எப்படி எதிர்க்கட்சியாகச் செயற்பட முடியும்?

அரசமைப்பின் 99ஆவது உறுப்புரிமையின் அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலகினால் அல்லது நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படாத வேறு கட்சியில் இணைந்து கொண்டால், அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாது போகும். மகிந்த ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் இருந்து விலகியுள்ளார். இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து விரைவில் இதற்குத் தீர்வு காணவேண்டும். அதுவரை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மாற்றக் கூடாது. அரசமைப்பை மீறக்கூடாது - என்றார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருப்பவர் அரச தலைவராகச் செயற்பட்ட சந்தர்ப்பங்களில், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட வரலாறுகளும் உள்ளன என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

இந்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தெளிவுபடுத்தப்படும் என்று குறிப்பிட்டார். (ந-5,10,105)

## மொட்டுக்...

பக்ச தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 9 ஆம் திகதி, அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனநாடாளுமன்றத்தைக் கலைத்து அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டதும், மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 50க்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்து கொண்டனர். அவர்களுக்கான உறுப்புரிமை அட்டை வழங்கும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

நாடாளுமன்ற கலைப்பு அரசமைப்புக்கு விரோதமானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதால், மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் நிலை சிக்கலாகியுள்ளது. சுதந்திரக் கட்சியின் யாப்புக்கு அமைய, மற்றொரு கட்சியில் உறுப்புரிமை பெற்றவரால், கட்சியில் நீடிக்க முடியாது. அதனால் மகிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்கள், நாடாளுமன்ற உறுப்புரிமையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை இன்னமும் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று பொதுமக்கள் முன்னணியின் அமைப்பாளர் பசில் ராஜபக்ச கூறியுள்ளார்.

"சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு நாங்கள் இன்னமும் பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையை வழங்கவில்லை. அவர்கள் எம்முடன் இணைய முன்வந்தனர். விண்ணப்பங்களைக் கையளித்தனர். ஆனால், இன்னமும் அவர்களுக்கு உறுப்புரிமை வழங்கப்படவில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## பதவிகளைக்...

ஆகியோரைத் தவிர 28 அமைச்சர்களையே நியமிக்க முடியும். அதனால் அமைச்சுப் பதவிகளைப் பகிர்வதில் இழுபறிகள் நிலவுகின்றன என்று தெரியவருகின்றது.

அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று நேற்றுக் காலை நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன், ரிசாத் பதியுதீன், மலிக் சமரவிக்கிரம ஆகியோர் அமைச்சுப் பதவிகளை ஏற்காதிருக்கத் தீர்மானித்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த தானும், ரிசாத் பதியுதீனும் அமைச்சுப் பதவிகளை ஏற்காது இருக்கத் தயாராக உள்ளோம் என்று தலைமை அமைச்சரிடம் தெரிவித்தேன் என்று நடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ந-10)

## எம்.பி.பதவி...

காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன சபாநாயகரிடம் கோரிக்கைகளை முன்வைத்தன.

நாடாளுமன்றம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பி.ப. 1 மணிக்கு கூடியது. எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை சபாநாயகர் அறிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்ப்பு வெளியிட்டன.

'ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளார்கள். நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டால் ஒரு மாத காலத்தினுள் அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இல்லாதுபோகும். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பைச் சேர்ந்த பலர் நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படாத பொதுமக்கள் முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்று ஒரு மாதமும் கடந்து விட்டதால், அவர்கள் நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளுக்கு அமைவாகப் பதவியிழந்துவிட்டனர். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாத பலர் அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் இனங்காணப்பட்டு சபையிலிருந்து வெளியேற்றப்படவேண்டும்" என்று கோரினார்கள்.

அதற்குப் பதிலளித்த மகிந்த உள்ளிட்ட உறுப்பினர்கள், தாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறவில்லை என்று குறிப்பிட்டார்கள். (ந-5.10)

## மைத்திரியின்...

இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளதால் புதிய அமைச்சரவை அமைப்பதில் குழப்ப நிலமை தோன்றியுள்ளது.

தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டு இரு நாள்கள் கடந்துள்ளபோதும், புதிய அமைச்சரவை இன்னமும் நியமிக்கப்படவில்லை. புதிய அமைச்சர்கள் நியமனத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முட்டுக்கட்டை இடுவதாலேயே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ் இருந்த பொலிஸ் திணைக்களத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்ரோபர் மாதம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசிடம் சட்டம், ஒழுங்கு அமைச்சை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று மைத்திரிபால சிறிசேன விடாப்பிடியாக உள்ளார். மைத்திரிபால சிறிசேனவின் இந்த நிலைப்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் மீண்டும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. இந்த அமைச்சுப் பதவி தமது கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதைப்போன்று, ஊடகத்துறை அமைச்சும் தன் வசமே இருக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்துள்ளார் என்றும், ஊடகத் துறை அமைச்சை விட்டுக் கொடுத்தாலும், இரு அரச ஊடகங்களும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக உள்ளார் என்றும் தெரியவருகின்றது.

மைத்திரிபால சிறிசேனவின் இந்த நிலைப்பாட்டுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. அனைத்து ஊடக நிறுவனங்களும் ஊடக அமைச்சின் கீழேயே இயங்க வேண்டும் என்றும், அந்த அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சிவசம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்த இழுபறிகளால் அமைச்சரவை நியமனத்தில் தாமதம் ஏற்படுகின்றது என்று தெரியவருகின்றது. (ந)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 19

**கலைமதி கழக கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி கீறோஸ் அணியை எதிர்த்து கலைமதி கிங்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி ரைகேர்ஸ் அணியை எதிர்த்து கலைமதி ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**விடியல் கழக கால்பந்தாட்டம்**

புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விடியல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அலையோசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளம்பறவைகள் விளையாட்டுக் கழக ஏ அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செல்சிற்றி விளையார்ட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பூநகரி லீக் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 19

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு. முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சென். ஆன்ஸ் அணிக்கும் செந்தாரகை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். ஆன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை இடம்பெற்ற செல்சிற்றி விளையாட்டுக் கழக அணிக்கும், இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணமாதாநகர் சென். மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணிக்கும், வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு மெசியா விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## சமநிலை

யாழ்ப்பாணம், டிசெ. 19

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி ஸ்பைடேர்ஸ் அணியை எதிர்த்து கலைமதி கீறோஸ் அணி மோதியது. இரண்டு அணிகளும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையானது. (ம-23)



# கால்பந்தாட்டத்தில் பற்றிக்ஸுக்கு தேசிய ரீதியில் மூன்றாவது இடம்

யாழ்ப்பாணம், டிசெ. 19

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தப்பரே வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

கொழும்பு சுகததாச மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மேரிஸ்ரெலாக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது சென். பற்றிக்ஸ்.

**சென்.ஜோசப் சம்பியன்**

தொடர்ந்து நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து ஹமீட் அல் ஹுசைன் கல்லூரி அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 6:5 என்ற கோல் கணக்கில் சென். ஜோசப் கல்லூரி அணி கிண்ணம் வென்றது. (ம-23)

## அம்பாள் அணி இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், டிசெ. 19

கலாநிதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அம்பாள் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத்தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் அம்பாள் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## கலாநிதி ஏ இறுதியில்!

யாழ்ப்பாணம், டிசெ. 19

கலாநிதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலாநிதி ஏ அணி வெற்றி பெற்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கலாநிதி விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து ஒளிசுடர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் கலாநிதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## வென்றது கலைமதி கிங்ஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 19

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி பிறீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி கிங்ஸ் அணி வெற்றிபெற்றது.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமதி ரைகேர்ஸ் அணியை எதிர்த்து கலைமதி கிங்ஸ் அணி மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் கலைமதி கிங்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# போராடாமல் வீழ்ந்தது இந்தியா
# பேர்த்தில் ஆஸி. தக்க கவனிப்பு

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் 146 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது ஆஸ்திரேலிய அணி. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு ஆஸ்திரேலியா பதிலடி கொடுத்தது. முதலிரு ஆட்டங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் ஆட்டத்தில் வென்றுள்ளன.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் உலகின் அதிவேக ஆடுகளமான பேர்த் ஆடுகளத்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 326 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ஹரிஸ் 70 ஓட்டங்களையும், ஹெட் 58 ஓட்டங்களையும், பின்ஞ் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இசாந் சர்மா 4 இலக்குகளையும், பும்ரா, உமேஸ் யாதவ், விஹாரி மூவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 283 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் கோக்லி 123 ஓட்டங்களையும், ரகானே 51 ஓட்டங்களையும், பன்ட் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லயன் 5 இலக்குகளையும், ஸ்ராக், ஹசில்வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவதுஇன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலியா 243 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. கவாயா 72 ஓட்டங்களையும், பெய்ன் 37 ஓட்டங்களையும், பின்ஞ் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமி 6 இலக்குகளையும், பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இந்திய அணிக்கு 287 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்று முன்தின நான்காம் நாள் முடிவில் இந்திய அணி 5 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பன்ட் 9 ஓட்டங்களுடனும் விஹாரி 24 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். மேலதிகமாக நான்கு ஓட்டங்களை மாத்திரமே சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார் விஹாரி. பன்ட் மறுமுனையில் ஓரளவு தாக்குப்பிடித்த போதிலும் இந்தியப் பின்வரிசை துடுப்பாட்டத்துக்கு தொலைவில் இருந்தது. ஒவ்வொரு பந்தையும் கத்தி முனையில் எதிர்கொள்வதைப் போன்றே எதிர்கொண்டனர். உமேஸ் யாதவ் 2, இசாந் சர்மா 0 என்று அடுத்தடுத்து வீழ்ந்தனர்.

பன்ட் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 140 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்திய அணி. (ம)





# மத்தியூஸ், குசல் மெண்டிஸ் சதம்
# நாள் முழுதும் தாக்குப்பிடித்தனர்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி நேற்று எதிர்பாராத போராட்டத்தை வெளிப்படுத்தியது. மத்தியூஸ், குசல் மெண்டிஸ் இருவரும் அபாரமாக விளையாடி சதம் கடந்தனர்.

நேற்றைய நாள் முழுதும் இவர்கள் இருவரும் தாக்குபிடித்தனர். ஆட்டத்தின் இறுதி நாளான இன்று இலங்கை அணி தோல்வியைத் தவிர்த்து ஆட்டத்தைச் சமநிலையில் முடிப்பதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.



இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பித்தது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மா னித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 282 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியூஸ் 83 ஓட்டங்களையும், டிக்வெல்ல 80 ஓட்டங்களையும், கருணாரத்ன 79 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சவுத்தி 6 இலக்குகளையும், வாக்நெர் 2 இலக்குகளையும், போல்ட், கிராண்ட்ஹோம் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 578 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. லாதம் ஆட்டமிழக்காமல் 264 ஓட்டங்களைப் பெற்றார். வில்லியம்சன் 91 ஓட்டங்களையும், ரெய்லர், நிக்கொல்ஸ் இருவரும் தலா 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் குமார 4 இலக்குகளையும், பெரேரா, தனஞ்சய டி சில்வா இருவரும் தலா 2 இலக்குகளையும், லக்மல் ஓர் இலக்கையும் பெற்றனர்.



இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 296 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய இலங்கை அணி நேற்றுமுன்தின மூன்றாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனால் அந்த அணி நேற்று பெரியளவில் தடுமாறும் என்று கருதப்பட்டது. குசல் மெண்டிஸ் 5 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 2 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். இருவரும் தொடர்ந்து நிலைத்துநின்று விளையாடினார்கள். இருவரினதும் விளையாட்டில் நிதானம் எதிரொலித்தது. நியூசிலாந்தின் பந்துவீச்சாளர்கள் பல வழிகளிலும் முயன்று பார்த்தார்கள் இலக்குச் சரிவை ஏற்படுத்த முடியவில்லை. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை அணி. அரைச்சதம் சதமாக மாறியது. நாள் முடிவில் இலங்கை அணி 3 இலக்குகளை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மத்தியூஸ் 117 ஓட்டங்களுடனும், மெண்டிஸ் 116 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இறுதி நாள் இன்றாகும். இலங்கை அணி 37 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. (ம)




FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.01.19 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 07.01.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

விஸ்டம்
விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொழினுட்பப் பிரிவு ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக தேசிய முதல் நிலைச் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்
தொழில் நுட்பப் பிரிவு
A/L 2021 ஆரம்பம்
- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம், ஊடகக்கல்வி
20.12.2018 வியாழக்கிழமை காலை 8.30
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புக்கு :077 248 7774
தரம்,தனித்துவம், உயர்ந்தபெறுபேறு இதுவே எமது இலக்கு

# இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக மாறுகிறார் கிறிஸ்டன்?

இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் கேரி கிறிஸ்டன் விண்ணப்பம் செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.
இந்தியப் பெண்கள் அணியின் பயிற்சியாளராக இருந்த ரமேஸ் பவாரின் பதவிக்காலம் முடிந்ததை அடுத்து அந்த இடத்துக்கு எவரை நியமிப்பது என்பது தொடர்பில் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. இந்த நிலையில் கிறிஸ்டனும் அந்தப் பதவிக்கு விண்ணப் பித்துள்ளார் என்று தகவல்கள் வந்துள்ளன. (ம)



DMI Jaffna | A/L 2021 கணக்கீடு D.Sam | ஜனவரி 5 காலை 09

உடன் விநியோகம்
யாழ்ப்பாணத்தில் அழைத்தவுடன் உங்கள் வீட்டுக்கு சமையல் எரிவாயு கொண்டு வந்து தரப்படும்.
12.5 Kg Rs.1850 Only
ஒரு Miss Call :072 950 0062

A/L 2021
பிரத்தியேக வகுப்பு
பௌதிகவியல்
(English, தமிழ் மொழிமூலம்)
Mr. M. கருணாநிதி B.Sc (Hons)
ஆரம்பம் : 22.12.2018
சனி 11.30 AM (பிரிவு I) 3.30 P.M. பிரிவு II
2019, 2020 A/L வகுப்புகள் நடைபெறுகின்றன.
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
SCIENCE HALL அருகில்
- 077 618 3064
(CS 21914/15/17)

# அணியில் பாண்டியா



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான எஞ்சிய இரண்டு டெஸ்ட் ஆட்டங்களுக்குமான இந்திய அணியில் பாண்டியாவுக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.
ஆசியக் கிண்ணத் தொடரின்போது காயம் காரணமாக பாண்டியா விலகினார்.
நீண்ட காலமாக கட்டாய ஓய்வில் இருந்துவந்த பாண்டியா அடுத்த இரண்டு ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.
இந்திய அணியின் இளம் வீரர் பிருத்வி ஷா காயத்தில் இருந்து குணமடையாத நிலையில் அவர் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். (ம)

INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Srilanka
Under the purview of the Ministry of Telecommunication & Digital Infrastructure
ITP
OFF. NO :- 021 222 3641
FAX. NO :- 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது
Diploma Courses (06 Month)
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Information Technology
Dip. in Computer Programming
Online Course (06 Month)
Dip. in PC Application & Office Management
Workshop (20 Hours)
Internet & e- mail
Webpage Designing & Development
Languages (06 Month)
VB.net PHP
C Sharp Java
விண்ணப்பப் படிவங்களை பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்
CENTRE FOR INFORMATION TECHNOLOGY ITP
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 25.01.2019
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 26.01.2019
127,K.K.S. Road, Jaffna, Srilanka.
- Executive Officer -

சிறுநீரகம் தேவை
B, O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு - 076 239 9874

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### நடராசா தவராசலிங்கம்



தாயின் மடியில் 28.11.1960 மண்ணின் மடியில் 18.12.2018

ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வராஹி கோயிலடி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தவராசலிங்கம் நேற்று (18.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காலமானார்.

அன்னார் நடராசா - வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் மஞ்சுளாவின் அன்புக் கணவரும் கோபிநாத், மாதங்கி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தயாபரன் (கொலன்ட்), தயாளினி (சுவிஸ்), தயாநந்தி, தவசீலன் (சீலன் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மரட்ணம் - இரஞ்சமலர், பிரமிலா (கொலன்ட்), சோதிநாதன் (சுவிஸ்), சுதன், நவசேனா - லிங்கேஸ்வரி (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்), பிரகாஸ் - மயூரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.12.2018) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 222 3317, 077 1033 740

தகவல்: குடும்பத்தினர்.

(CS 23597/15/18)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.